Deviyin **KANMANI** -Tamil Fortnightly **OCTOBER -1, 2009**. Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப் பற்றி



கண்மணிக்கென்றே

பார்த்து பார்த்து...

அழகாய் உருவாக்கிய நாவல்தான் இந்த

'என்றென்றும் நீ வேண்டும்...''

என்ற நாவல்.

'என் உயிரின் உயிரே'.

நாவலுக்குப்பின் வாசகர்களின் நல்லாதரவு இந்த நாவலுக்கும் அதே அளவில் தொடரும் என்ற நம்பிக்கையில்...

-ஆர்.மகேஸ்வரி,



# என்றென்றும் நீ வேண்டும்

ஆர். மகேஸ்வரி

பனி இரவை தன் மடியில் போட்டு தாலாட்டிக் கொண்டிருந்தது.

கள்ளக்குறிச்சி நகரம் அழகாய் உறங்கிக் கொண்டிருந்த மார்கழி மாதத்து அதிகாலை நான்கு மணி.

மனிதர்கள் குளிருக்கு பயந்து போர்வையின் உபயத்தில் உறங்கிக் கொண்டிருக்க மலர்களோ அழகாய் கண் விழித்து இதழ் விரித்து புன்னகையுடன் புதிய விடியலுக்காய் உற்சாகத்தோடு காத்திருந்தன.

தமிழில் பேராசிரியர் பார்த்தசாரதி அவர்களால் இயற்றப்பட்டு எம்.எஸ்.ஸின் தேன் குரலால் ஒலித்த சுப்ரபாதம் என்னும் திருப்பள்ளி எழுச்சி பாடல்.

*வந்து தித்தாய் ராமா நீ*
*கௌசலை தன் திருமகனாய்*
*சிந்துமொளிச் சிறுகாலை*
*திசை எங்கும் புலர்கிறது.*
*மந்திரங்கள் வாய் மொழிந்து*
*வந்தனைகள் புரிந்தருளச்*
*செந்திருக்கண் அருள் பொழிய*
*வேங்கடவா எழுந்தருள்வாய்!*

ஸ்ரீ கோவிந்தராஜ பெருமாள் கோயிலில் ஒலித்த முதல் பள்ளி எழுச்சி தேன் குரலாய் ஒலித்து சுகமாய் செவிகளை வருட அந்த தித்திப்பான தீண்டலில் உறக்கம் கலைந்து எழுந்தமர்ந்தாள் ஜனனி.

அவளின் அருகில் அண்ணன் சந்துருவின் மகன் சத்யன் நல்ல நித்திரையில் இருந்தான்.

சத்யன் இரண்டாம் வகுப்பு படிக்கிறான். அவனுக்கு அம்மா அபிராமியை விட அத்தை ஜனனியைத் தான் பிடிக்கும்.

பல் துலக்க, குளிக்க, ஆடை உடுத்த, உணவு உண்ண, பள்ளிக்கு செல்ல, வீட்டுப்பாடம் செய்ய என்று எல்லாவற்றிற்கும் ஜனனி வேண்டும்.

சத்யன் மேல் ஜனனிக்கு அளவு கடந்த பிரியம், அன்பு ஆசை உண்டு.

ஜனனி இருபத்தி யோரு வயது நிரம்பிய யுவதி.

கை தேர்ந்த சிற்பி ஒருவனால் செதுக்கப்பட்ட சிலையென மேனி!

அழகான குண்டு முகம்! அதில் கொஞ்சி விளையாடும் மீன் குஞ்சுகளாய் இரு கருவண்டு கண்கள். ரோஜாவின் நிறத்தையும், மென்மையையும் கடனாய் பெற்ற இதழ்கள். முல்லை மொட்டுக்களை வரிசையாய் கோர்த்தாற் போல பல் வரிசைகள். கதுப்பு கன்னங்கள். மயில் தோகையாய் நீண்டு வளர்ந்த கருங்கூந்தல்.

மெல்லிடையாள். நல்ல உயரம். வாளிப்பான உடம்பு என்று எதிராளியை அடித்து வீழ்த்தும் அழகுடன் இருப்பாள், ஜனனி.

அவள் லேசாய் உதடு சுழித்தாலே காண்பவரின் உள்ளத்தை கொள்ளை கொண்டுவிடும்.

அரண்மனையில் இருக்க வேண்டிய பேரழகு. ஆனால், மத்திய தர வீட்டில் குடி கொண்டுள்ளது.

தாயும், தகப்பனும் ஒரு விபத்தில் இறந்து போக சந்துருவும், ஜனனியும் அநாதையானார்கள். அப்போது சந்துரு இளங்கலை பி.காம் பட்டப்படிப்பை முடித்த நேரம். ஜனனி எட்டாம் வகுப்பு படிப்பு முடிந்து ஒன்பதாம் வகுப்பு போகிறாள்.

சொந்த, பந்தங்கள் எதுவும் ஆதரவு கரம் நீட்ட தயங்க அதற்கெல்லாம் கவலைப்படாமல் படித்த படிப்பிற்கு ஒரு தனியார் கம்பெனிக்கு எழுத்தர் வேலைக்கு போனான் சந்துரு.

சொற்ப சம்பளமானாலும் ஜனனியின் சிக்கனமான பாந்தமான குடும்ப பொறுப்பில் அந்த சம்பளமே இருவருக்கும் போதுமானதாய் இருந்தது.

சந்துரு வீட்டு வேலையில் தங்கைக்கு உதவுவான். பின்னர் தனது சைக்கிளிலேயே அவளை ஏற்றிக்கொண்டு போய் பள்ளியில் விட்டுவிட்டு வேலைக்கு போவான்.

மாலையில் ஜனனி நடந்தே வீட்டிற்கு வந்துவிடுவாள்.

ஜனனிக்கு தாயாகவும், தந்தையாகவும் மாறி அன்பு செலுத்தினான்.

அந்த தாயுமானவன் தான் ஜனனிக்கு உயிர். சுவாசம்! தெய்வம்!

இருவரின் பாசமான வாழ்க்கையில் புயலாய் ஊடுருவியவள் தான், அண்ணி அபிராமி.

சாமர்த்தியசாலி.

சந்துருவுடன் இனிமையாய் பேசி, பழகி அவனை அடிமைப்ப டுத்திக் கொண்டாள்.

அபிராமிக்கு சந்துருவிடம் அதிகாரம் செய்யவும் தெரியும். அதே சமயும் அன்பைக் கொட்டி அவனை சந்தோஷப்படுத்தவும் தெரியும்.

இந்த சாதுர்யம், இந்த சாமர்த்தியம் போதாதா ஒரு பெண்ணுக்கு?

ஜனனி அங்கே அடிமை போலானாள்.

அண்ணி காலால் இட்ட வேலைகளைக் கையால் செய்தாள்.

பள்ளிக்கு கிளம்புவதற்கு முன்பே அண்ணி வந்த பின்னும்

டிபன், சமையலை முடித்துவிட்டு செல்ல வேண்டும்.

அபிராமி ஜனனியின் ருசியான சமையலுக்கு அடிமை.

பிரசவம், குழந்தை என்று ஏமாத்தி உட்கார்ந்தே ஜனனியிடம்

வேலை வாங்கினாள்.

அண்ணன் வேறு, அண்ணி வேறு என்று ஜனனி ஒரு நாளும்

நினைத்ததில்லை. அதனால் தான் அண்ணியின் ஏச்சுக்களையும், பேச்

சுக்களையும், கடும் சொற்களையும் மலர்ந்த முகத்துடன் ஏற்றுக்

கொள்ள முடிந்தது.

ஜனனியும் அண்ணியின் மேல் உள்ள அதிகப்படியான பாசத்தில், அன்பில், பிரியத்தில், அக்கறையில் இன்முகத்தோடே வேலைகளை

செய்து முடிப்பாள்.

சந்துருவுக்கும், ஜனனிக்கும் எட்டு வயது வித்தியாயம்.

அவள் பத்தாம் வகுப்பு படிக்கும் போது ஒரே சமயத்தில் படிப்

பையும், வேலையையும் செய்ய முடியாமல் திண்டாட அவளின் கஷ்

டம் கண்டு சொந்தத்தில் பெண் பார்க்க அப்படி கிடைத்தவள் தான்

அபிராமி.

அபிராமியின் பெற்றோர்கள் சிறுவயதிலேயே இறந்துவிட சித்

தியின் வீட்டில் வளர்ந்தவள் இப்படி சித்தியின் பாதுகாப்பில் வளர்ப

வளுக்கு பாசம் என்றால் என்ன? பாசத்தின், அன்பின் அருமை என்ன?

என்று எப்படி தெரிந்திருக்கும். தனது தங்கையை கண்ணும் கருத்து

மாய் பார்த்துக் கொள்ளுவாள் என்ற நம்பிக்கையில் தான் அபிராமியை

சந்துரு சந்தோஷமாய் திருமணம் செய்து கொண்டான்.

ஆனால், அபிராமி ஜனனியிடம் நடந்து கொண்ட விதத்தை

எண்ணி சந்துரு கலங்கிப்போனான்.

அவன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்து ராட்சசியான ஒருத்தியை மனைவியாக்கிவிட்டது.

ஏதாவது ஜனனிக்காக கேட்டால் கத்துவாள்.

முறுக்கிக் கொண்டு பேசவே மாட்டாள்.



படுக்கையை தள்ளிப்போட்டு அவன் தவிப்பை ரசிப்பாள்.

இதையெல்லாம் கண்ட சந்துரு ஜனனி முன் நின்றான்.

'ஜனனி உன் அண்ணி கொஞ்சம் கோபக்காரிதான். நான் இல்லேன்னு மறுக்கலை. அவள் ஏதாவது பேசினால் பொறுத்து போம்மா. யாராவது ஒருவர் ஒதுங்கிப்போனால் தான் நிம்மதியாகவே வாழ முடியும். நீ விட்டுக் கொடுடா. அண்ணி தாய்க்கு இணையானவள். இன்னொரு தாயும் கூட. நீ அபிராமியைப் பெற்ற தாயாக நினைத்து கொள். ஜனனி உனக்கு அவள் மேல் எந்த கோபமோ, வெறுப்போ வராது.

'சரிண்ணா.'

'உனக்காக நான் பரிந்து பேசினால் அவள் வீட்டை ரெண்டு படுத்தறாள். உனக்கு அண்ணா சந்தோஷமா இருக்கணுமா? வேண்டாமா?'

'சந்தோசமா இருக்கணும்'

'அப்படின்னா எதற்குமே எதிர்த்து பதில் பேசாதே!'

'சரிண்ணா'

'உனக்கு கூட மாட நான் உதவறேன். நீ எப்போதும் போல உன்னால் முடிந்த வேலையை செய்துட்டுப் போ'

'ம்...'

'நான் நிம்மதியா இருக்கணும் தானே?'

'ஆமாண்ணா'

'அப்போ நான் சொல்வதைக் கடைப்பிடி. அண்ணன் ஒரு நாளும் உனக்கு துரோகம் செய்ய மாட்டேன். அண்ணி இயல்பிலே நல்லவள். தாய், தகப்பனற்று சிறு வயது முதற்கொண்டே சித்தியிடம் வளர்ந்ததால், இப்படி மூளை பிசகி, முசுடாகியிருக்கிறாள். சரியான அன்பு கிடைக்காமல் வளர்ந்ததன் காரணமாய் தான் இப்படி கோபமும், குரோதமும், அதிகாரமும், அகங்காரமும் கொண்டிருக்கிறாள்'

'விடுண்ணா! அண்ணி பாவம் தான். எனக்காவது அணைச்சி உச்

"கபாலி உனக்கு வர வர திருட்டு பயமே இல்லே"

"ஆமாங்க சார். எனக்கு வர வர திருட்டில் பயனே இல்ல. உங்க மாமூலுக்கே சரியாயிடுது"

-செல்வராஜா, சேலம்.



சிமோர நீயிருந்தே. அண்ணிக்கு அதுவும் இல்லையல்லவா?'

'ஆமாடா ஜனனி! பாசத்துக்காக ஏங்கியிருக்கா. அது கிடைக்க லேன்னதும் கரடு முரடா மாறிட்டா. என்கிட்டே ரொம்ப நல்லா இருக்கா. அதிகாரமும், கோபமும் கொண்ட அடுத்த நொடியே என்னை அன்பால் குளிப்பாட்டறா.

எந்த அளவு அபிராமி கெட்டவளோ அந்த அளவு நல்லவளும் கூட.

அதனால் நீ கொஞ்சம் பொறுத்தும், அனுசரித்தும் போம்மா, ஜனனி.'

அபிராமியை திருமணம் செய்த கொஞ்ச நாளில் ஜனனியிடம் இப்படி கேட்டுக் கொள்ள...

முதலில் கொஞ்சம் கஷ்டப்பட்ட ஜனனி அபிராமியை தாயாய் கண்ணுற அவளின் கெட்ட குணங்கள் கண்களுக்கு தெரியாமல் நல்ல குணங்களே தெரிந்தது.

உடலை முறுக்கி சோம்பலை நீக்கி கண்களை மூடி இஷ்ட தெய்வத்தை வேண்டினாள்.

வாசலுக்கு சாணம் தெளித்து பெருக்கினாள்.

இழையிழையாய் அழகிய ரங்கோலி கோலமிட்டு கலர் பொடி தூவி அதனை கொஞ்ச நேரம் ரசித்துவிட்டு தோட்டத்தில் மலர்ந்திருந்த பீர்க்கம்பூவை கொண்டு வந்து கோலத்தின் மத்தியில் வைக்க கோலம் இன்னும் அழகானது.

குளித்து உடுத்திக் கொண்டு பெருமாள் கோவிலுக்கு சென்றாள்.

மார்கழி மாதம் என்பதால் அந்த விடியற்காலையிலேயே அதிக கூட்டமிருந்தது.

பெருமாளின் முன்பு திருப்பள்ளியெழுச்சியை ஆண்களும், பெண்களும் வரிசையாய் நின்று பாட அங்கே போய் நின்று அவர்களோடு சேர்ந்து பாடினாள்.

கொஞ்ச நேரத்தில் ஆண்டாள் சன்னதிக்கு சென்றாள். ஆண்டாள் திருப்பாவையைப் பாடினாள்.

அவளின் இனிமையான குரல் அந்த சன்னதியை நோக்கி வந்து கொண்டிருந்த ஹரிகரனின் இதயத்தில் தென்றலாய் தீண்டி மெய் சிலிர்க்க வைத்தது.

அந்த வசீகர குரலுக்கு அவன் அடிமையானான்.

அந்த இனிமையான குரலுக்கு சொந்தக்காரியை உடனே கண்டு விட வேண்டும் என்று ஆவல் கொண்டு நடையை எட்டிப்போட்டான்.

ஆண்டாள் சன்னதிக்கு வந்தவன் திகைத்துப் போனான்.

இளம் மஞ்சள் சேலையணிந்து தலைமுடியை தளர தளர பின்னி அடர்த்தியாய் கட்டிய மல்லிகையை சூடி பேரழகு பெட்டகமாய் கை தேர்ந்த சிற்பி பார்த்து பார்த்து கவனமாய் செதுக்கிய சிற்பமாய் கூடு



தல் நேரம் எடுத்துக் கொண்டு ரசனையோடு கலை நயத்தோடு பெரும் அழகைக் கொட்டி பிசைந்து பிசைந்து பிரம்மன் வடிவமைத்த அழகு பெட்டகமாய் கண் மூடி நின்றிருந்த ஜனனியை கண்டவனின் இதயம் நழுவி நழுவி அவனை விட்டு அவளிடம் போய் தஞ்சம் கொண்டது.

அவனுள் அவள் மேலான காதலும், பிரியமும் பார்த்த நொடியே இறங்கிவிட்டது.

அவன் அவளை விழியெடுக்காமல் புன்னகையோடு நோக்கிக் கொண்டிருந்தான்.




ஹரிஹரன் யாரையும் சட்டென்று வசீகரிக்கும் பேரழகன்.

அந்த ஊருக்கு புதிதாய் மாற்றலாகி வந்திருக்கும், ஆசிரியர்

முதுகலை வேதியியல் ஆசிரியர்! வேதியியலை அவன் சொல்லித்தரும் பாங்கே தனி தான். பார்முலாக்களும், டெபனேஷன்களும் புரியாத மாணவனுக்கு கூட எளிதாய் புரிந்துவிடும். அந்த அளவு தெளிவாய், விளக்கமாய் புரியும் வண்ணம் எளிமையாய் நடத்துவான்.

வேதியியல் கடினமான பாடம் என வரும் மாணவர்கள். அவன் நடத்தும் முறையில் இத்தனை எளிதானதா என வியந்து போவார்கள்.

சின்னதாய் அறை எடுத்து தங்கியிருக்கிறான்.

கள்ளக்குறிச்சியிலிருந்து ஐம்பது கி.மீ. தூரம் உள்ள வெள்ளி மலை தான் அவனது சொந்த ஊர்.

வெள்ளிமலை மலை வாசஸ்தலம். குட்டி ஊட்டியாய் காட்சியளிக்கும்.

மலை பிரதேசத்தில் மலை வாழ் இன மாணவனாய் பிறந்ததால் பள்ளி படிப்பு, கல்லூரி படிப்பு அத்தனையும் இலவசமாய் கிடைத்தது.

வேலையும் இருபத்தேழு வயதிலேயே மலைவாழ் இன மக்கள் கோட்டாவில் கிடைத்து விட்டது.

முதலில் ஒரு ஆண்டு ஆத்தூர் அரசு பள்ளியில் பணி புரிந்தவன் தற்போது மாறுதல் பெற்று அரசு மகளிர் பள்ளிக்கு வந்துள்ளான்.

எத்தனையோ அழகான பெண்களை பள்ளி படிக்கும் காலத்திலும் கல்லூரி காலத்திலும் கண்டுள்ளான். அவர்களில் ஒருவரும் அவனை ஈர்த்ததில்லை. சலனப்படுத்தியதில்லை.

ஒரு நொடியில் ஆறடிக்கு மேலான அழகான வாலிபனை வாரி சுருட்டி, மடித்து, தன் இதயத்தில் வைத்துக் கொண்டு போய் விட்டாள், ஜனனி.

அவளைக் கண்ட நாள் முதல் காலையில் தவறாமல் கோவிலுக்கு

சென்று தெய்வத்தையும் தரிசிப்பான்.

நொடி பொழுது கூட இமை தட்டாமல் அவளை உள் வாங்கி உள்ளத்தில் செருகிக் கொள்வான்.

தூரத்தில் நின்று தூண் மறைவில் நின்று என்று நோக்குவதோடு சரி. அவளின் குணாதிசயம் தெரியாமல் ஏதாவது பேசப்போய் அவள் அதை தவறாக நினைத்து கொண்டால் வம்பாகி விடுமே என்று அவளிடம் பேச தக்க தருணம் ஏற்படுத்திக் கொடுக்கச் சொல்லி இறைவனை வேண்டிக் கொண்டான்.

மார்கழி மாதம் முடிந்து மறுநாள் ஹரிஹரன் கோயிலுக்கு வந்து ஜனனியைத் தேட அவளைக் காணாது ஏமாந்துப் போனான்.

அவள் வீடு கோயில் தெருவிலேயே இருந்தது. அவன் ஏமாந்து திரும்பும் போது வீட்டு வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்த ஜனனியை கண்டுவிட்டான்.

அவளைப் பார்க்க முடியாமல் போய் விட்டதே என்று கலங்கியவனுக்கு அவளின் தரிசனம் கண்டு மனம் கும்மாளமிட்டு அவளைப் பற்றி வரிவரியாய் இதயத்தில் கவிதை எழுதியது.

அன்று மாலை கோயிலுக்கு வந்தான்.

கர்ப்பக கிரகத்தின் முன்பு நீண்ட வரிசையில் ஆண்கள் ஒருபுறமும் பெண்கள் ஒரு புறமும் நின்றிருந்தனர். ஆண்கள் புறம்-வந்து நின்ற ஹரிஹரன் ஒவ்வொரு பெண்ணின் முகத்தையும் கண்டு ஏமாந்து போனவன் திடீரென உற்சாகமானான்.

அங்கே ஜனனி நின்றிருந்தாள். அருகில் குழந்தை சத்யன் அவள் முந்தானையைப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான்.

அர்ச்சகர் ஆண்களிடமும், பெண்களிடமும் தீபாராதனைத் தட்டை பெற்றுக் கொண்டு போய் அபிசேகம் செய்துவிட்டு அவரவர் கொடுத்த அர்ச்சனை தட்டுகளை ஒவ்வொருவரிடமும் நீட்ட பெற்றுக் கொண்டனர்.

ஜனனியும் பெற்றுக் கொண்டு கோயிலை வலம் வர சத்யனை கையில் பிடித்துக் கொண்டு நடந்தாள்.

ஹரிஹரனுக்கு கொடுத்த தட்டை நோக்க அது அவனுடையதல்ல.

''சாமி... இது என் தட்டில்லையே!''

''ஓ... அப்படியாப்பா? இது போல ஒரு தட்டைத்தான் ஜனனிகிட்டேயும் கொடுத்தேன். அவளிடம் கேட்டு உங்க தட்டை வாங்கிக்கங்க''

''ஜனனியா... அது யார், சாமி?''

''ஆரஞ்சு நிற சேலை கட்டியிருந்தாளே அந்தப்பொண்ணு தான் கையில ஒரு குழந்தைக்கூட இருந்தாளே''

'தன் மனம் கவர்ந்த தேவதையைப் பற்றிதான் கூறுகிறார் என்று அறிந்து நன்றி சொல்லிவிட்டு ஜனனியை தேடிக் கொண்டு வர



அவளை 'சுதர்சனர் சன்னதி'யில் கண்டான்.

அவளோ சத்யன் ஒன்று, இரண்டு என்று எண்ண அவள் சுதர்சனரை வலம் வந்தாள்.

ஹரி ஒதுங்கி கால் கடுக்க நிற்கிற நூற்றியெட்டு சுற்று முடிந்து சத்யனை இழுத்துக் கொண்டு அடுத்த சன்னதியை நோக்கி நடக்க...

''எக்ஸ்கியூஸ்மி...'' என்ற ஹரியின் குரலுக்கு நின்று திரும்பி கேள்வியாய் நோக்க...

''உங்க கையில இருக்க தட்டு என்னுடையதுங்க'' என்று ஹரி கூற...

ஜனனி தன் கையிலிருந்த தட்டைப் பார்க்க அது மாறியிருந்ததை உணர்ந்து...

''ஸாரி... இந்தாங்க'' என்று நீட்ட ஹரி பெற்றுக் கொண்டான். அவள் தட்டை அவன் நீட்ட பெற்றுக் கொண்டாள்.

இருவரின் கைகளும் லேசாய் ஒட்டி ஸ்பரிசிக்க அந்த சின்ன மேனி தீண்டலில் ஜனனி திக்கென்று அதிர்ந்தாள்.

அவளின் மிரண்ட மைவிழிப் பார்வையில் ஹரிஹரன் 'தொபுக்கடீர்' என்று விழுந்து விட்டான்.

அண்ணனைத் தவிர வேறு ஆண் மகனைத் தொட்டு அறியாதவள். ஹரியின் சின்ன தீண்டல். அவளின் உடலில் ஏதேதோ செய்தது.

ஹரிக்கு கேட்கவா வேண்டும். அந்த தென்றலின் தீண்டலை தன் மனதிற்குள் பத்திரப்படுத்திக் கொண்டான்.

அவள் நடக்க அவனுக்கு இணையாக நடந்தவன்.

''என் பேர் ஹரிஹரன். நான் இந்த ஊர் கேர்ள்ஸ் ஸ்கூலில் பி.ஜி. கெமிஸ்ட்ரி டீச்சரா வொர்க் பண்றேன். நீங்க...?''

ஜனனி அவனை மௌனமாய் நோக்க...

''உங்களை நான் ஒரு மாதமா இந்த கோயில்ல பார்த்துட்டு வரேன். பக்தியா இருக்கீங்க. அருமையா பாடறீங்க. உங்க ஆண்டாள் திருப்பாவைக்கு நான் அடிமை. உங்க இனிமையான குரல் காலை

''அந்த டாக்டர் போலின்னு எப்படிச் சொல்றீங்க?''

''அதுவா... முதுகுவலிக்குன்னு டாக்டரிடம் போனேன். கொஞ்ச நாளைக்கு குடும்ப பாரத்தை மனைவியிடம் ஒப்படைங்கன்னாரே''

-ஜி.அப்துல்பாரி, பழனி.



நேரத்துல தேவ அமிர்தமா இதயத்துல இனிக்கும்.''

அவள் ஆச்சரியத்தோடு நோக்க...

''ரியலி நீங்க என்னை இதுவரை பார்த்ததில்லையா?''

''ம்கூம்...'' என்று தலையாட்டினாள்.

''இன்று தான் பார்க்கறீங்களா?''

''ம்...''

''உங்க பேர் ஜனனியா...? ரொம்ப நல்ல பேருங்க. என்ன செய்ய றீங்க? படிக்கறீங்களா?''

''ம்கூம்...''

''ம், ம்கூம் மேல பேசமாட்டீங்களா?'' என்று ஹரி பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க...

ஜனனி சின்ன இதழ் சுழித்து மென்னகைப் புரிய... அதனை கண் ணுற்றவன் ''ரொம்ப அழகாயிருக்கு'' என்று சொல்ல அவள் புரியா மல் பார்க்க.

''உங்க இதழ்களில் பூத்த புன்னகையைச் சொன்னேன்''

ஹரி ரசித்து சொல்ல ஜனனி வெட்கச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு நடக்க ஹரியும் பின் தொடர்ந்தான்.

''என்ன படிச்சிருக்கீங்க?''

''பி.ஏ. இங்கிலிஷ் லிட்ரேச்சர்!''

''இது?'' குழந்தையை கை காட்டி கேட்க...

''அண்ணா சந்துருவோட மகன்''

''ரொம்ப அழகா இருக்கான். வீட்டுல இன்னும் யாரெல்லாம் இருக்காங்க?''

வேறொருவனாய் இருந்தால் 'அதை கேட்க நீ யாருடா?' என்று கோபத்துடன் கேட்டிருப்பாள், ஆனால் ஹரியிடம் அப்படி கேட்க மனம் வரவில்லை.

''அண்ணா, அண்ணி, நான் சத்யன்.''

''தாய், தந்தை...?''

''சின்ன வயசுலேயே தவறிட்டாங்க'' என்று கூறி ஜனனி முகம் வாட...

''ஸாரிங்க. ரியலி வெரி ஸாரிங்க. ஆமா மேலே படிக்கலாம் இல்ல. பி.எட்., எம்.ஏ., என்று?''

ஜனனிக்கு படிக்க ஆசை தான். ஆனால் அண்ணி படித்தது போதும் என்று நிறுத்திவிட்டாள். அவனிடம் முதல் நாளே சொந்தக் கதை, சோகக்கதை சொல்ல பிரியம் இல்லாமல்...

''மேலே படிக்க பிடிக்கலே''

அப்படி சொன்னவளை அதிசயத்துடன் பார்த்து

''படிக்க பிடிக்கலேன்னு சொன்ன ஜீவன் நீங்க ஒருத்தராத்தான் இருக்கும். அப்போ கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்க்கறாங்கன்னு சொல்லுங்க?''



''...''

''நல்ல மாப்பிள்ளையாய் கிடைத்தால் நீங்களும் திருமணத்துக்கு தயார் தான். என் கணிப்பு சரியாங்க, ஜனனி?''

''என்னை போல மாப்பிள்ளை'' என்று சொல்லாமல் சொல்லி அர்த்தத்தோடு அவளை தீர்க்கமாய் நோக்க...

ஜனனி குளிர்ச்சியான புன்னகையில் அவன் இதயத்தைத் தொட் டுவிட்டு மெல்லிடையசைய வேகமாய் வெட்கத்துடன் நடந்தாள். இனிதான் விதி அவளைப் பார்த்து புன்னகைக்கப்போகிறது என்று தெரியாமல்!

# 3

வெண் பஞ்சு மேகங்களை விரட்டிக் கொண்டே... மேற்கு மலையில் ஆதவன் போய் தஞ்சமடைந்து ஓய்வெடுத்துக் கொண் டிருந்த அற்புதமான மாலைப்பொழுது.

ஜனனி ஆண்டாள் சன்னதியில் அமர்ந்தி ருந்தாள்.

அன்றிலிருந்து ஹரிஹரனும், ஜனனியும் எதிர்படும் போது சிறு புன்னகையை பரிமாறிக் கொள்வார்கள்.

இமைகளை மலர்த்தி கண்ணோடு கண் நோக்கிக் கொள்வார்கள்.

பார்வையின் ஸ்பரிசத்திலேயே அங்கே பல வித உரையாடல்கள் நிகழும்.

ஹரிஹரனின் இதயத்தில் ஜனனி மேலான காதல் கண்மண் தெரி யாமல் மலை போல வளர்ந்தது.

அவனுடைய உள்ளத்தை அவளிடம் உடைத்துக் காட்ட விரும் பினான். அதற்கான நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜனனிக்கு தன் மனதில் பூத்த மர்மமான ஆசையை எண்ணி அச் சப்பட்டாள். அவன் நினைவுகளை மனம் அசை போடுவதற்கு அணை போட பெரும் கஷ்டப்பட்டாள்.

ஹரிஹரன் அவளைக் கண்டுவிட்டு அவளெதிரே வந்து அமர ஜனனிக்கு உள்ளம் உதறியது. உள்ளுக்குள் நடக்கும் பிரளயத்தை முகம் காட்டிக் கொடுக்க...

''என்ன ஜனனி? ஏன்?''

''யாராவது பார்த்துட்டுப் போய் அண்ணியிடம் சொல்லிவிட் டால் அண்ணி ருத்ர தாண்டவம் ஆடிவிடுவாள். அதான் நீங்க பேச அருகில் வந்தாலும் விலகி ஓடி விடுவது..அண்ணிக்கு தெரிந்தால் தொலைச்சிடுவாங்க'' என்று முகம் இருள சொல்ல...

''எதுக்கு அவங்ககிட்டே அவ்வளவு பயம்?''

''அவங்களுக்கு இயல்பாகவே கோபம் அதிகம். நான் இப்படி

ஆண்பிள்ளைகளிடம் அமர்ந்து பேசுவது தெரிந்தால் என்னை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவாங்க''

''உங்க அண்ணா உனக்காக எதுவும் கேட்க மாட்டாரா?''

''கேட்டால் அண்ணி காட்டுக்கத்தாய் கத்துவாள். அண்ணா திருமணம் ஆனதிலிருந்தே அண்ணிக்கு அடங்கியே பழகிட்டதால் எதிர்த்து பேச முடியாது. அப்படியே எதிர்த்து பேசினால் அண்ணி பெட்டியை தூக்கிக் கொள்ளுவாள், பிறந்த வீட்டிற்கு செல்வதற்கு!

அப்புறம் அண்ணா வாழ்க்கை நரகமாயிடும். அண்ணா நடையா நடந்து கெஞ்சி கூத்தாடி அண்ணியை கூட்டிட்டு வருவார்.

என் அண்ணாவுக்கு இப்படி ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாதுன்னு நினைக்கிறேன். நீங்க இடை புகுந்து கெடுத்திடாதீங்க'' என்று கையெடுத்து கும்பிட்டாள், ஜனனி.

''ஜனனி... நான் உன்னிடம் கட்டாயமாக பேச வேண்டும்'' என்று தீர்மானமாய் சொல்ல...

''என்ன பேசணும்? நீங்க எதுவும் பேச வேண்டாம்''

''என் வாழ்க்கையைப் பத்தி பேசணும்''

''உங்க வாழ்க்கையைப் பற்றி என்கிட்ட எதுக்கு பேசணும்?''

''உன் வாழ்க்கையோடு தான் என் வாழ்க்கையும் கலந்து இருக்கு!''

ஹரி சட்டென்று சொல்ல ஜனனி அதிர்ந்து அவனை நோக்க...

''ஆமா ஜனனி உன்னைக் கண்ட நாள் முதல் நேசிக்கிறேன், ஜனனி! என் இதயம், நினைவுகள், கனவுகள், கற்பனைகள் அத்தனையும் உன்னிடம் தான் ஜனனி இருக்கு. உன் மேலான அன்பு பெரும் ஊற்றா என் இதயத்துல பெருகிட்டே போகுது. நான் நீயாயிட்டேன், ஜனனி! என் சுவாசம். உன் சுவாசமாயிடுச்சி, ஜனனி''

ஹரிஹரன் காதலோடு பேச...

''ஏன் இப்படி பேசறீங்க...?''

''எனக்கு நீ வேணும், ஜனனி! என் காலம் முழுவதும் நீ என்னருகில் இருக்க வேண்டும், ஜனனி.

''ஏன் இப்படி பைத்தியமா உளர்றீங்க?''

''உண்மையா என் நெஞ்சுக்குள்ள இருந்து வர வார்த்தைகள் ஜனனி, இது! உன் மேல் பைத்தியமாகிப் போனேன், ஜனனி''

''நல்வழிப்படுத்தற ஆசிரியர் வேலை பார்த்துட்டு இப்படியெல்லாம் பேசலாமா?''

''ஆசிரியர்ன்னா எனக்கு இதயம் இல்லையா, ஜனனி? ஒரு ஆசிரியன் காதலிக்க கூடாதா, ஜனனி? ஒரு பெண்ணின் மேல் அன்பு வைக்கக்கூடாதா, ஜனனி? அப்போ எந்த ஆசிரியனும் காதலிக்கறது இல்லையா? திருமணம் செய்துக்கிறதில்லையா? குழந்தை பெத்துக்கறதில்லையா?'' அவன் கேள்வியாய் அடுக்க...

''ஏன் இப்படி அசிங்கமா பேசறீங்க, ஹரி?''

''எது ஜனனி அசிங்கம்? உன்னை நெஞ்சார நேசிக்கறேன்னு



சொல்வதா அசிங்கம், ஜனனி? உன்னை திருமணம் செய்துக்க ஆசைப்படறேன்னு சொல்றது அசிங்கமா? சொல்லு, ஜனனி?''

அவள் தோள் பிடித்து உலுக்க...

''காதல் இதெல்லாம் எனக்கு உடன்பாடு இல்லை.''

''பொய் சொல்லாதே, ஜனனி உன் வாய் வேணா பொய் சொல்லலாம். ஆனால் இந்த கண்கள் பொய் சொல்லுமா? நீயும் என்னை விரும்பறே, ஜனனி! நிஜம், ஜனனி''

''இல்லே! ஏதாவது தப்பர்த்தம் எடுத்துக்காதீங்க'' என்று பட்டென்று சொல்ல...

''ஜனனி உனக்கு என்னைப் பிடிக்கலையா?'' என்று வலியோடு கூடிய குரலுடன் கேட்க

''ஹரி உங்களைப் 'பிடிக்கலேன்னு சொல்றவள் ஒண்ணு முட்டாளா இருக்கணும்! அல்லது குருடியா இருக்கணும்?''

''நீ தான் ரெண்டுமே இல்லையே, ஜனனி''

''...''

''எனக்கு நீ என்றென்றும் வேண்டும், ஜனனி. என் வாழ்க்கையின் எல்லை வரை நீ வேண்டும், ஜனனி. வாழ்க்கையின் விளிம்பு வரை நான் உன் கை கோர்த்து நடக்கணும், ஜனனி''

''...''

''ஜனனி... அவசரப்பட்டு எதுவும் சொல்லி என் இதயத்தை காயப்படுத்திடாதேம்மா!''

''தனிமையில யோசி, ஜனனி! உனக்கு என்னைப் பிடித்திருந்தால் சம்மதம் சொல்லு, ஜனனி. நம் காதலை உன் அண்ணியிடம் இருக்கும் பயத்தால் குழி தோண்டி மட்டும் புதைச்சிடாதே, ஜனனி. அப்புறம் என்னால் தாங்கவே முடியாது''

''...''

''நீ சம்மதித்தால் நான் உன் அண்ணா, அண்ணியிடம் பேசத் தயார்''

''தலைவர் ஏன் கோபமாக இருக்கிறார்?''

''சிறைக்கு அஞ்சா தலைவரேன்னு போஸ்டர் அடிக்கிறதுக்குப் பதிலா 'சிறைக்கஞ்சா' தலைவரேன்னு போஸ்டர் அடிச்சிட்டாங்களாம்''

-செல்வராஜா, சேலம்.



ஜனனி எதுவும் பேசாமல் எழுந்து நடக்க...

''ஜனனி...''

ஹரி உயிர் கரைய உருகலாய் அழைத்தான்.

ஜனனி நின்றாள். திரும்பி அவனைப்பார்த்தாள்.

''ஐ லவ் யூ, ஜனனி! ஐ லைக் யூ, ஜனனி'' என்று ஹரி சொல்ல...

சட்டென்று உள்ளம் நெகிழ கண்கள் குளமாகி அவ்விடத்தை விட்டு ஓடினாள், ஜனனி.

ஆனால், ஜனனி இது விபரீதம்! அண்ணா, அண்ணிக்கு தெரிந்தால் ஆபத்து என்று தன்னுள் பூத்த காதலை மலரவிடாமல் மனதிற்குள் மொட்டாகவே பத்திரப்படுத்தினாள்.

ஹரியை அவளுக்கு நிரம்பவே பிடித்திருக்கிறது. ஆனால் அண்ணி அபிராமி எளிதாய் அவளை காதலிக்க விட்டுவிடுவாளா? அல்லது காதலித்தவனுக்கே திருமணமும் செய்து வைத்து விடுவாளா? என்ற அச்சம் அவள் உள்ளத்தில் இலை முளை விட்டு பரப்பி அவளைப் பயமுறுத்தியது.

ஹரியின் நினைவுகளை ஒதுக்கிவிட்டு நடமாட ரொம்பவே சிரமப்பட்டாள்.

கோயிலுக்கு போவதை தவிர்த்தாள்.

ஹரியோ ஜனனியின் தரிசனம் கிடைக்காமல்

சோர்ந்து.. களைத்து.. முகம் வாடி தெருவில் நடந்து போகும் போது, தன் வீட்டு ஜன்னலில் மறைந்து காணும் ஜனனிக்கு மனமெல்லாம் விண்டுவிடும்!

எத்தனை கம்பீரமான ஆண் மகன்!

நல்ல வேலை! நல்ல குணம்! அதற்கு மேலாக நேசிக்க வேறு செய்கிறான்! இவனைப் போன்ற மாப்பிள்ளைய்யை எங்கு தேடினாலும் அவளுக்கு கிடைக்காது!

அப்படியிருக்க அவனை தவிக்க விடலாமா? கலங்க வைக்கலாமா?

அவனின் கம்பீரத்தையும், அழகையும், பேராண்மையையும் குன்ற வைத்து வேடிக்கை பார்க்கலாமா?

அவனிடம் தன் நிலையை விளக்கி, தன்னை நினைக்க வேண்டாம், நேசிக்க வேண்டாம், நான் சூழ்நிலைக் கைதி! அண்ணியை எதிர்த்து அண்ணாவின் வாழ்க்கையை சூன்யமாக்க தனக்கு உடன்பாடில்லை என்று அடித்து சொல்லிவிடலாம்!

ஜனனி முடிவெடுத்தாள். மறுநாள் கோவிலில் சந்தித்து ஹரியின் காதலுக்கு முட்டுக்கட்டை போட்டு விடலாம் என்று நம்பினாள்.

முதல் நாள் மாலை சத்யனை அழைத்துக் கொண்டு பூங்காவிற்கு சென்றாள்.

சத்யன் தூரப் போய் விளையாட... ஜனனி முழங்காலில் முகம் புதைத்து கண் கலங்கிக் கொண்டிருந்தாள்.



அங்கு யதேச்சையாய் வந்த ஹரி, ஜனனி அருகில் போய் மெல்ல அமர்ந்தான்.

கொஞ்ச நேரம் கழித்து எழுந்தவள், ஹரிஹரனைக் கண்டு பதறினாள்.

'' நீ...நீங்க... எ... எப்ப வ... வந்தீங்க...? '' என்று குழறியபடி கேட்க.,

'' சொல்லு? ஏன் என்னை இப்படி தவிக்க விடறே? ''

'' நான் வரேன்! '' என்று ஜனனி எழ, ஜனனியின் கையை உரிமையுடன் பற்றி அமர்த்தினான்.

'' மாணவிகளுக்கு எக்ஸாம் நெருங்குது! என்னால் ஈடுபாட்டோட சொல்லித்தர முடியலே! ரிசல்ட் நல்ல பர்சன்டேஜ் வரலேன்னா சி.இ.ஒ.கிட்ட கைக்கட்டி பதில் சொல்லணும்! அவங்க டிரான்ஸ்பர் பண்ணி அனுப்பி வைக்கும் இடத்துக்கு பதில் பேசாம போகணும் ஜனனி! என்னை இந்த ஊரை விட்டு அனுப்பிடாதே! என் வேலையை ஈடுபாட்டோட செய்ய விடு ஜனனி! '' அவன் தவிப்போடு கூற...

'' நான் ஒண்ணும் உங்க கையை கட்டிப்போடலே! '' கோபமாய் சொன்னாள்.

'' கையை கட்டிப்போடலே! என் மனசைக் கட்டிப்போட்டு வேடிக்கை பார்க்கறே! என் நினைவுகள் முழுக்க உன் ஞாபகங்கள் தான்! என் கனவுகள் முழுக்க உன் அரசாட்சி தான்! நான் தூங்கி பத்து நாளாகுது ஜனனி! உன் பதிலுக்காக, நீ வருவேன்னு கோவில்ல காத்திருந்தது தான் மிச்சம்! ஏன் வரலே ஜனனி? உனக்கு என் மேல் பயமா...? காதலிச்சி கை விடற கயவன்னு? ''

'' ம்கூம்...!''

'' பின்னே? ''

'' அண்ணி மேல் பயம்! ''

'' அந்த பயம் வேண்டாம்! நான் என் அப்பாம்மாவோடு உங்க வீட்டுக்கு பெண் கேட்டு வரேன் ''

அவள் முகம் கொஞ்சம் தெளிய...

'' அப்புறம்? ''

'' பயம் காதல் மேலும் தான்! ''

'' ஏன்? ''

'' எத்தனை பேருக்கு காதல் கைகூடி வருது? காதல் நிறைய பேரை சிதைச்சி, சின்னாபின்னமாக்கி, புதைகுழியிலே தள்ளிடுது! அது தெரிஞ்சவ தான் நான்! ''

'' காதல் மேல் பக்தியும், பற்றும், நம்பிக்கையும், உண்மையும் கொண்டு இருந்தால் அந்த காதல் நம்மை ஏமாற்றாது, ஜனனி! நம்மை கை விடாது ஜனனி! நம்மை எப்படியாவது இடர்களையெல்லாம் தாண்டி சேர்த்து வைத்துவிடும்! ''

ஜனனி அவனை ஆச்சரியத்தோடு நோக்க...

'' உனக்கு எந்த கவலையும் வேண்டாம் ஜனனி! நீ சந்தோஷமா என்னை காதலிச்சிட்டு இரு ஜனனி! நம்ம நேசத்தை திருமணத்துல நிறுத்தறது என் பொறுப்பு! ''

அவள் அந்த சொற்களைக் கேட்டு பூவாய் மலர,

'' சரி சொல்லு... உனக்கு என்னை பிடிச்சிருக்கா...?''

அண்ணி மேலான பயம் கருமேகங்களாய் கரைந்து, அவன் மேலான நேசமே எஞ்சி நிற்க,

'' ம்...'' என்று நாணத்துடன் குனிய, ஒற்றை விரலால் அவள் மோவாயை நிமிர்த்தி...

'' ஐ லவ் யூடான்னு சொல்லு ஜனனி! உன் வாய் திறந்து சொன்னால் பூரித்து விடுவேன் தெரியுமா? ''

ஹரி கெஞ்சலோடு கேட்க...

'' ஐ லவ் யூடா, முட்டாள் ஹரி! '' என்று கூறி ஜனனி கண் சிமிட்ட,

'' ஏய்... ஏய்... '' என்று அவள் தலையில் தன் தலையால் முட்டினான்.

அவள் கன்னங்களை இரு கைகளாலும் தாங்கி கண்ணோடு கண் வைத்து ஆனந்தமாய் நோக்கினான்.

இந்த ஆனந்தம் நிலைக்குமா?

## 4

மாலைத் தென்றல் அந்த பூங்காவை ஆக்கிரமித்து அரசாட்சி செய்து கொண்டிருந்தது!

விழி நிறைய ஆசையோடு... அன்போடு... ஜனனியின் வருகையை எதிர்பார்த்து ஹரிஹரன் காத்திருந்தான்.

சிறு குழந்தைகள் குதுகலமாய் ஓடிப்பிடித்து ஒரு புறம் விளையாடி மகிழ, கணவன், மனைவிகள் ஒரு புறம் பிள்ளையின் நச்சரிப்பில் இருந்து தப்பி காதலோடு கூடிய பார்வையால் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்க,

நாள்... வாரம்... மாதம் என்று பிரிந்திருந்த காதலர்கள் இணைந்து மறைவிடம் தேடியமர்ந்து அன்பையும், நேசத்தையும் ஒருவரை ஒருவர் போட்டிப் போட்டுக் கொண்டு வெளிப்படுத்தி பின்னர் சிறு ஊடலும் சில சில்லறை சில்மிஷங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்க என்று அந்த நேரு பூங்காவே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

ஜனனியும் அவனும் சந்திக்குமிடத்தில் ஹரிஹரன் அமர்ந்திருந்தான். முகம் வாடி, சோர்ந்து, களைத்து, பசலைப்படிந்து, நெஞ்சிலே



அன்பைத் தேக்கி, கண்களில் காதலை மிதக்கவிட்டு தலைவனுக்காக காத்திருக்கும் தலைவியாய் அந்த நொடிப்பொழுதை ஓட்டிக் கொண்டிருக்க...

ஜனனி பரபரப்பாய் ஓடி வந்து அவனருகில் அமர, அவன் அவளைக் கண்டவுடன் கோபத்துடன் முகத்தை திருப்பிக் கொள்ள...

'' என்ன... என் காதலருக்கு கோபமா...? ''

அவன் பேசாமல் இருக்க...

'' ஆஹா... என் பேபிக்கு கோபம் கூட வருமா? '' என்று அவன் முகம் பிடித்து வலுக்கட்டாயமாய் தன் பக்கம் திருப்ப...

அவனோ அவள் முகம் நோக்காமல் தலைகுனிந்தான்.

'' அண்ணி ஊருக்கு கிளம்பிட்டு இருக்காங்க! அங்கே அத்தைக்கும், அவர் பிள்ளைக்கும் சாப்பிட சில இனிப்புகள் செய்ய சொல்லிட்டாங்க. அதான் லேட்டாயிடிச்சி ஹரி! '' அவள் முகம் வாடி, வதங்கி சொல்ல ஹரி சட்டென்று இளகினான்.

'' அடுப்பனல்ல வெந்துட்டு வந்திருக்க உன்னைப் போய் கோபிச்சுக்கிட்டேனே ஜனனி! ஸாரிடாம்மா! ரொம்ப நேரம் காக்க வச்சிட்டே இல்லையா... அந்த கோபம் தான்! ''

'' இப்போ...?''

'' பனியா விலகிடிச்சி ஜனனிம்மா! ''

'' ஜனனி அண்ணி மட்டும் தான் ஊருக்கு போறாங்களா? ''

'' ம்கூம், அண்ணனும் சத்யனும் போறாங்க! சனி, ஞாயிறு இருந்துட்டு இவங்க வந்துடுவாங்க! அண்ணி அப்புறம் எப்ப வருவாங்கன்னு சொல்ல முடியாது! ''

'' அப்போ ரெண்டு நாட்களுக்கு வீட்டுல நீ மட்டும் தானே இருப்பே! நான் உன் வீட்டுக்கு வரவா? ''

'' இப்பவே பயந்து பயந்து யார் கண்ணுல பட்டு அண்ணிக்கு செய்தி போயிடுமோன்னு கலங்கி உங்களை சந்திக்க வரேன்! இதுல

"அடியே! எங்கம்மா எனக்கு கடவுள் மாதிரி.

அப்படி இருந்தும் அவங்க மேல ஏண்டி கல்லைத் தூக்கிப்போட்ட?"

"நீங்கதானே சொன்னீங்க. கடவுள் மீது பாரத்தை தூக்கிப்போட்டால் நம்ம கஷ்டமெல்லாம் தீர்ந்துடும்னு"

-எஸ்.ஏ.தாஹீர்.
திருநெல்வேலி.



சாருக்கு வீட்டுக்கு வர ஆசையாமே? ஆமா, வீட்டுக்கு எதுக்கு சார் நீங்க வரணும்? '' என்று அழகாய் புருவம் உயர்த்தி கேள்வியாய் கேட்க...

'' உனக்கு பாடம் நடத்ததான்! '' ஹரி குறும்போடு சொல்ல,

'' எனக்கு பாடமா? என்ன பாடம்? '' ஜனனி நீட்டி முழக்க,

'' காதல் பாடம் தான்! நீ தான் அ, ஆன்னு அரிச்சுவடியிலேயே இருக்கியே! கொஞ்சம் விரிவா... விளக்கமா... சோதனை முறை யோட சொல்லித்தரலாம்ன்னு விரும்பறேன்! நீ என்ன நினைக்கறே ஜனனி? ''

ஹரிஹரன் சொல்லிவிட்டு கண்ணடித்து, கன்னத்தில் குழி விழ சிரிக்க அந்த அழகில் சொக்கித்தான் போனாள் ஜனனி. பின் சுதாக ரித்து...

'' யூ நாட்டி! சரியான குறும்புக்கார வாத்தியாரா இருக்கீங்களே!'' என்று செல்லமாய் அவன் தலையில் கொட்டி,

'' ஆமா இந்த குறும்பை என்கிட்ட மட்டும் தான் வச்சி இருக் றீங்களா? இல்லை பள்ளிக்கூடத்திலும் இப்படித்தான் நடந்துக்கு வீங்களா? ''

'' என்ன ஜனனி இப்படி கேட்டுட்டே? ''

'' இல்லே எனக்கொரு சந்தேகம்! சார் கேர்ள்ஸ் ஸ்கூல்ல இல்ல வேலை பார்க்கறீங்க! அழகழகான பொண்ணுங்களோட அற்புதமான வேலை! அங்கேயும் உங்க கைவரிசையை, குறும்பை சார் காட்டு வீங்களா? '' என்று நக்கலடிக்க...

'' சேச்சே... என்ன ஜனனி பேசறே? நான் அதுபோல மட்டமான ஆளா? என் மேல் நம்பிக்கையில்லையா? எப்படி அப்படி நினைக்க லாம்? ''

ஹரி கொஞ்சம் கோபமாய் கேட்க...

'' சும்மா விளையாட்டுக்குத் தான் அப்படி கேட்டேன்! இது தப்பா ஹரி?''

'' தப்புதான்! உன்னையே சுவாசிப்பவனிடம் எப்படி அப்படி யொரு சந்தேகம் வரலாம்! நான் முதன் முதலா ஆசை கொண்ட பெண் நீதான்! அன்பு செலுத்திய பெண் நீதான்! என்னுள் முதல் சலனத்தை ஏற்படுத்திய தேவதை நீதான்! என்னுள் முதல் காதலை விதைத்த வித் தகி நீதான்! என்னை நேசத்தால் கட்டிப்போட்டு வேடிக்கைப் பார்க் கற அரக்கி நீதான்! என் நெஞ்சத்தை தொட்டுப்பாரு அங்கே 'லப் டப்' என்ற சத்தத்திற்கு பதிலாய் 'ஜனனி ஜனனி'ன்னு குரல் வருவதை...

பார்க்கும் இடங்களிலெல்லாம் நீதான் தெரியறே! பார்க்கும் பொருளிலெல்லாம் உன் முகம் தான் தெரியுது! உன் சுவாசத்தை தேடித்தேடி சுவாசிக்கும் இந்த ஹரி மேலேயே சந்தேகப்பட்டுட்ட இல்ல? ''

ஹரி குரோதமாய் கேட்க...



'' ஐய்ய சாருக்கு ரொம்பத்தான் கோபம் வந்திடுச்சி! சும்மா ஜாலியா கேலி பண்ணினா ஒரேயடியா முறுக்கிக்கிறீங்களே! ''

'' விளையாட்டுக்குக்கூட அடுத்த பெண்ணோட என்னை இணைச்சிப் பார்க்காதே, ஜனனிம்மா! என்னால் அதை தாங்கவே முடி யாது! ''

'' அட விடுங்கப்பா ஹரி! ஒரேயடியா உருகறீங்களே! ''

'' அப்போ என்னளவு நேசம்... உனக்கு என்மேல் இல்லையா? ''

'' விடுங்க ஹரி! நான் உங்க மேலே உயிரையே வச்சிருக்கேன்! ''

'' நான் பெண்கள் பள்ளியிலேயே பணிபுரிவது பிடிக்கலையா? ஆண்கள் பள்ளியிலே வேக்கண்ட் இருக்காம்! அடுத்த கல்வியாண்டு மாற்றிட்டு போயிடட்டுமா? ''

அதெல்லாம் வேணாங்க! உங்களை நான் சந்தேகப்பட்டது தப்பு தான்! மன்னிக்க வேண்டுகிறேன்! பிளீஸ்! சரி சொல்லிக்கொடுங்க?''

ஜனனி இப்படி கேட்க அவன் புரியாமல் பார்க்க,

'' ஏதோ 'காதல் பாடம்' சொல்லித்தரேன்னு சொன்னீங்களே! நான் அந்த பாடத்தில் அரிச்சுவடி கூட தாண்டலேன்னு கிண்டல் பண்ணி னீங்கலே! கொஞ்சம் சொல்லிக் கொடுங்க சார்? ''

ஜனனி பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க, ஹரி பக்கென்று சிரித்து விட்டான்.

'' அப்பா... விசுவாமித்தருக்கு கோபம் போயிடுச்சா? என்ன கோபம்? நொடியில் கண்கள் சிவந்து முகத்துல கோபம் கொப்பளிக்க எப்படி பேசினீங்க? ஏன் ஹரி நீங்க நடிக்க போகலாம் ஹரி! நீங்க மட்டும் நடிக்க போனால் சூர்யா, விஜய், விக்ரம், கமல் எல்லோரை யும் ஓரம் கட்ட வச்சிடலாம்! தமிழ்நாட்டுல நெம்பர் ஒன் ஹீரோவா ஆகக்கூடிய திறமை உங்க கிட்ட நிறைய ஒளிஞ்சிட்டு'இருக்கு தெரி யுமா? '' என்று நக்கலடிக்க...

'' உனக்கு ரொம்ப தான் கொழுப்பு ஜனனி!''

'' உங்களுக்கு இல்லையாக்கும்! '' என்று பட்டென்று சொல்ல

'' உன்னை ஊமச்சின்னு இல்ல நினைச்சேன்! இப்படி வாயாட றியே! கல்யாணத்துக்கு பின்னாடி `உட்காருடா ஹரி, எழுந்திருடா ஹரி, தோப்புக்கரணம் போடுடா ஹரி'ன்னு சொன்னாலும் ஆச்சரி யப்படுவதிற்கில்லை! இல்லையா? ''

ஹரி குறும்போடு கேட்க...

'' திருமணத்திற்கு பிறகு என்னில் பாதியாயிடுவீங்க, நீங்க அப் படியெல்லாம் மரியாதையில்லாமல் எப்படி பேச முடியும்? ம்?'' என்று அழகாய் இதழ் சுழித்து கேட்க,

'' ஆஹா... நீயல்லவா உண்மையான தமிழ் பெண்! ''

'' என்ன கிண்டலா? ''

'' சரி இந்த கிண்டல், கேலியை எல்லாம் கொஞ்ச நேரம் ஒதுக்கி வச்சிடலாம்! நாளைக்கு நீ என்னோட எங்க ஊருக்கு வாரியாடா

ஜனனி? ''

'' வெள்ளிமலைக்கா...? ''

'' ம்... இதுவரை வந்ததில்லே இல்லையா? ''

'' ஆமா! ''

'' வந்து பார் ஜனனி! நீ வாழப்போற ஊர் எப்படி இருக்கும் தெரியுமா? குட்டி ஊட்டிக்கே வந்தாப்போல இருக்கும்! வெள்ளிமலையில நான் படிச்ச ஏகலைவன் ஸ்கூலுக்கு கூட்டிட்டு போய் காட்டுறேன்! அப்புறம் பெரியார் நீர்வீழ்ச்சி, சின்ன திருப்பதி பெருமாள் கோயில், பழத்தோட்டம், மலர் தோட்டம்னு அமர்க்களப்படும் தெரியுமா? மேகக்கூட்டத்தோட கைகோர்த்து விளையாடலாம்! ஊட்டி அளவு ஜில்னஸ் இருக்காது! தட்ப வெட்பம் இதமா இருக்கும்!

வீட்டுக்கு கூட்டிட்டுப்போய் உன்னை அறிமுகப்படுத்துகிறேன்! உன்னோட அழகான ஹரியைப் பெத்தவங்களை பார்க்கணும்னு உனக்கு எண்ணமில்லையா? '' என்று ஹரி கேட்க;

'' எண்ணமிருக்கு! அதை விட அதிகமா பயமா இருக்கு! இப்ப வேண்டாம் ஹரி! ''

'' போ ஜனனி! நீ வீட்டுக்கு வர்லேன்னாலும் பரவாயில்லை. என்னோட மலைக்கு வாயேன்! நாளைக்கு ஒரு நாள் மட்டும்! ப்ளீஸ்...'' அவன் ஆசையாய் கேட்க,

'' வேண்டாம்! '' பட்டென்று சொல்ல...

'' எல்லோர் கண்ணிலும் மண்ணைத் தூவிட்டு ரெண்டு பேரும் ஊர் சுத்திப் பார்க்கலாம்! காதல் காலத்துல இது போல திருட்டுத்தனம் இல்லேன்னா ரசிக்காது தெரியுமா?''

''அதெல்லாம் நான் மாட்டேம்பா! ஒழுக்கத்தை கற்பிக்கற வாத்தியாரே ஒழுக்கம் தவறலாமா?'' என்று ஜனனி ஹரியை குற்றம் சாட்ட...

'' நான் என்ன காட்டேஜ் எடுத்து ஜாலியா இருக்கலாம்ன்னா கூப்பிடறேன்! உன் கற்புக்கு களங்கம் வராப்பல பேசறே? ஆனாலும் நீ மோசம் ஜனனி! ''

'' ஏய் உதைபடப்போறிங்க! '' சுட்டு விரல் நீட்டி மிரட்ட,

''ஜனனி... ஜனனிம்மா... என் அன்பே... பிளீஸ்... பிளீஸ்... ஜாலியா ஒரு ரவுண்ட் என் டூவீலர்ல வரலாம்டா! இதுபோல சந்தர்ப்பம் கிடைக்கணுமே! ''

'' சரி, சரி இதனால் விபரீதம் வந்தால்? ''

'' வராது! ''

மறுநாள் அவன் சொன்ன இடத்திற்கு வந்தாள். அவன் டூவிலரில் ஏறி வெள்ளிமலைக்கு போனாள். அவன் ஒவ்வொரு இடத்தையும் சுற்றிக்காட்டினான்.

ஓரிடத்தில் அவர்களை ஒரு ஜோடி விழிகள் உற்று உறுத்தது!

இதனால் என்ன விபரீதம் வருமோ?



## 5

ஹரிஹரனும், ஜனனியும் பைக்கில் போனதை உற்று உறுத்த விழிகளுக்கு சொந்தக்காரி காயத்ரி!

காயத்ரி ஹரியின் அக்கா பெண்!

'' அக்கா துர்காவிற்கும் அவனுக்கும் வயசு வித்தியாசம் நிறைய! இளம் வயதிலேயே மணம் செய்து கொண்டவள்! பதினைந்து வயதில் திருமணம்! பதினாறு வயதில் காயத்ரி! இருபதாவது வயதில் கணவனை இழந்து கைம்பெண்ணானவள்!

குழந்தையோடு தாய் வீடு வந்து விட்டாள். அன்று முதல் இன்று வரை ஹரிக்கு இன்னொரு தாயாகவும் ஆகிவிட்டவள் துர்கா!

ஹரிஹரனுக்குத் தான் காயத்ரி என்று ஹரிஹரனைத் தவிர மற்ற எல்லாரும் நம்பி மனதில் ஆசையை ஆலம் விழுதாய் வளரவிட்டவர்கள்! காயத்ரி பத்தாம் வகுப்பு படிக்கிறாள்!

அவளின் படிப்பை நிறுத்தி அவனுக்கு திருமணம் செய்யப்போவதாக ராமனாதன் அடிக்கடி அவனிடம் கூற, அவரது வார்த்தைகளை அலட்சியப்படுத்தி தன் மனம் கவர்ந்த ஜனனியை நேசிக்கிறான்!

அவனுடைய செல்போன் சிணுங்க, எடுத்து திரையைப் பார்த்தவன் கொஞ்சம் அதிர்ந்தான்.

அழைத்தவர் ராமனாதன்!

பட்டனை அழுத்தி காதுக்கு கொண்டு போக...

'' ஏய் ஹரி எங்கேடா இருக்கே? '' ராமனாதன் கத்த, சட்டென்று பொய் சொன்னான்,

'' நான் அறையில படுத்திருக்கேம்பா! ''

'' அடி செருப்பால ஏன்டா பொய் சொல்றே? வெள்ளிமலையில

''துவரம் பருப்பு விக்கற விலையில், நான் இங்கே வத்தல் குழம்பு பண்ணிண்டு சிக்கனம் பண்ணிண்டிருக்கேன். நீங்க என்னடான்னா ஹைகிளாஸ் டிக்கெட் எடுத்துண்டு சினிமாவுக்கு போய்ட்டு வர்றீங்களே... உங்க நெஞ்சில் ஈரம் இருக்கா? அப்படி என்ன படம்?''

''ஈரம்!''

-எஸ்.குருமூர்த்தி, தர்மபுரி.



தான இருக்கே? ''

'' ம்...ம்...எ... எப்படிப்பா தெ...தெரியும்? '' ஹரி பயத்தோடு கேட்க,

''நம்ம காயத்ரி பார்த்துட்டு வந்து எங்கிட்ட சொல்லி அழறா! உங்கூட ஒரு பொண்ணு இருந்தாளாமே அவ யாருடா? பொம்பளை சிநேகிதம் எத்தனை நாளா இருக்கு? ''

உன்னை நல்லவன்னு நம்பிதானே ரூம் எடுத்து தனியா இருக்க அனுமதிச்சேன்! இப்படி எங்க நம்பிக்கையில மண்ணள்ளி போட்டுட்டேயடா ஹரி! உடனே வந்து சேர்! எங்கே இருக்கே? ''

'' மேகம் நீர்வீழ்ச்சியில! ''

'' முதல்ல வீட்டுக்கு வாடா! ''

'' சரிப்பா!'' ஹரி முகம் கறுத்து சொல்ல செய்தியறிந்து ஜனனி பயந்து போனாள்.

'' நான் சொன்னேனே கேட்டீங்களா? இப்போ பிரச்சனையை நீங்களே இழுத்துவிட்டுட்டீங்க! '' அவள் கலக்கத்துடன் சொல்ல...

'' சரி கலங்காதே! வா... என்ன தான் நடக்கும்னு பார்த்திடுவோம்! என்னானாலும் இது தெரிய வேண்டிய விஷயம் தான்! பயந்தா மட்டும் பிரச்சனை விட்டுடுமா? ''

'' நானும் வந்தால் பிரச்சனை பூகம்பமாய் தான் பெரிசாகும்! ''

'' ஆகட்டும்! உன்னைத்தான் கட்டிப்பேன்! கட்டி வையுங்கன்னு திட்டவட்டமா கேட்டுடறேன்! ''

'' ஒத்துப்பாங்களா ஹரி! ஏற்கனவே உங்களுக்குன்னு நிச்சயிக்கப்பட்ட காயத்ரி இருக்க, சந்தோஷமா என்னை ஏத்துப்பாங்களா? ''

'' காதலை சந்தோஷமா ஏத்துக்கிற பெற்றோர்கள் எங்கிருக்காங்க! காட்டு பார்க்கலாம்! காதல்ன்னாலே வேதனைகளும், சோதனைகளும், கஷ்டங்களும், நஷ்டங்களும், தடைகளும் தாக்கத்தான் செய்யும்! அதை சமாளித்து வெற்றி பெற வேண்டும்! ''

''வெற்றி கிடைக்கலேன்னா... என்னை மறந்துடுவீங்களா ஹரி?''

ஜனனி அழுகையை மென்று கேட்க...

'' மட்டி மாதிரி பேசாதே! நேசிச்ச பெண்ணை யாராவது மறப்பாங்களா? இறுதி வரை போராடுவேன்! சம்மதிச்சா ஜாம் ஜாம்னு கல்யாணம்! இல்லேன்னா வீட்டுக்கு தெரியாமல் ரிஜிஸ்டர் மேரேஜ் தான்! நம்ம ரெண்டு பேரும் குடும்பம் நடத்தி குழந்தைகளைப் பெத்துட்டால் அவங்களே வலிய வந்து நம்மோட கூடிப்பாங்க...

எத்தனையோ குடும்பங்களை இணைச்சி வைக்கிறது குழந்தைங்கதானே! ஆனால் நீ பயப்படாதே ஜனனி. பெரியவங்க சம்மதத்தோட நம்ம திருமணம் நடக்கும்! சரி உனக்கு குழந்தைங்கன்னா பிடிக்குமா? ''

''ரொம்ப....ரொம்ப...'' பயம் போய் கண்களில் கற்பனை மின்ன சொன்னாள்.



'' எத்தனை குழந்தைங்க பெத்துக்கலாம்? ''

ஹரிஹரன் ஜனனியைப் பார்த்து கண்ணடித்து கேட்க,

'' அதுயென்ன குழந்தைங்கன்னு பன்மையில சொல்றீங்க? ஒண்ணு போதாதா? அதுவும் உங்களை அச்சல வார்த்தாப்போல! ''

'' உன்னைப் போல் குட்டி ஜனனி வேண்டாமா? ''

'' அய்யாவுக்கு ரொம்பத்தான் ஆசை! அப்படியே முதுகுல பட்டுன்னு ஒண்ணு போட்டேன்னா! அரசாங்கம் என்ன சொல்லுது? நாம் இருவர் நமக்கு ஒருவர்னு தானே? '' சிரிப்போடு ஜனனி கேட்க...

'' அரசாங்கம் சொல்லுது! ஆனால் அதை ஆட்சி செய்யற ஆட்சியாளர்கள், அதை கடைபிடிக்கறாங்களா? ம்? ஒவ்வொருவரும் ரெண்டு, மூணுன்னு கட்டி நிறைய குழந்தைகளைப் பெத்துட்டு அடுத்தவங்களுக்கு புத்தி சொல்றாங்களாம்! ''

ஹரி நீட்டி முழக்கினான்.

வீடு வர அங்கே எதிர்ப்பு பயங்கரமாய் இருந்தது.

'' தம்பி இது உனக்கே நல்லாயிருக்கா? நீதான் என் மருமகன்னு கனவு கண்டுட்டு இருக்கேனே இப்படி என் தலையில பெரிய கல்லெடுத்துப் போட்டு கனவையெல்லாம் கலைக்கறியே! ''

அக்கா துர்கா ஒப்பாரி வைத்தாள்.

காயத்ரி ஒரு மூலையில் பெரிய மனுஷி போல அழ அம்மா சத்யா வாயில் முந்தானையைப் பொத்தி குலுங்கினாள்.

இதையெல்லாம் கண்ட ஜனனிக்கு நெஞ்சம் தூள் தூளாய் உடைந்து விட்டது. கண்களில் கண்ணீர் முட்டி நிற்க தலைகுனிந்து நின்றிருந்தாள்.

'' டேய் ஹரி... நான் நேராவே விஷயத்துக்கு வரேன். இந்த பொண்ணு யாரு? உனக்கும், இவளுக்கும் என்ன தொடர்பு? மறைக்காம சொல்லணும் ஹரி! ''

ராமனாதன் சீற்றத்தோடு கேட்டார்.

எவ்வளவு பிரச்சனை வந்தாலும் பரவாயில்லை. இது தான் சரியான தருணம் என்று உணர்ந்த ஹரி...

'' அப்பா நான் இந்தப் பொண்ணை உயிருக்குயிரா விரும்பறேன்பா! எனக்கு இவளை திருமணம் செய்து வையுங்க! ''

'' உனக்கு என்ன துணிச்சல்டா? வாத்தியார் வேலைப் பார்க்கறியே உனக்கு அறிவில்லையா? உனக்காகவே வளர்ந்துட்டு வராளே உன் மேல உலகளவு ஆசைவச்சி இருக்காளே இந்த காயத்ரிக்கு என்ன பதில் சொல்லப்போறே? தகப்பனில்லாத பொண்ணு. இப்படி ஆசை காட்டி மோசம் செய்யலாமா? ''

ராமனாதன் வெறி கொண்ட வேங்கையாய் உறும...

'' நானா ஆசைக்காட்டினேன்! எல்லாம் நீங்கதான்! 'இவன்தான் உன் புருஷன்! மாமனைத்தான் கட்டிக்கப்போறேன்னு' பால் மணம் மாறாத வயசுல இருந்தே இவ மனசுல ஆசையை விதைச்சுட்டு



''என் மனைவி வெளுத்ததெல்லாம் பால்'னு நினைப்பா?''

''உங்க வீட்டு காபி'ல பினாயில் வாடை வரும் போதே நினைச்சேன்!''.

-எஸ்.ஏ.தாஹீர்,
திருவெல்வேலி.

வரீங்க. அவளுக்கு நல்லது எது? கெட்டது எது? மாமன் வயசென்ன? படிக்கற வயசுல படிக்கனும். பெண்களுக்கு இப்போ படிப்பும், நல்ல உத்தியோகமும் தைரியமும், தன்னம்பிக்கையும், சுய மரியாதையும், சுய கவுரவமும் முக்கியம்னு அவளும் அறியாமல் என் மேல் ஆசை வைத்திருந்தால் அதுக்கு நான் என்ன செய்ய முடியும்?

பத்தாவது படிக்கிற குழந்தையை எனக்கு கட்டி வைக்கறேன்னு சொல்றீங்களே! இது அநியாயம்னு உங்களுக்கு தெரியாதா?

ஏன் அக்கா உன் பொண்ணு எவ்வளவு நல்ல படிக்கறா தெரியுமா? நாளைக்கு டாக்டராவோ, கலெக்டராவோ, என்ஜினீயராவோ ஆக வேண்டியவளை கல்யாண ஆசையைக் காட்டி அவ எதிர்காலத்தை பாழ்பண்றீங்களே! எதிர்காலத்துல காயத்ரி நல்ல நிலைமைக்கு வருவா! அப்போ அவளுக்கு இணையான தகுதியுள்ளவனை தேடி வைக்கலாம். அதைவிட்டு அவளை பிஞ்சிலே பழுக்க வைக்காதீங்க!'' என்று பெரிய விளக்கம் கொடுக்க,

'' தம்பி என்னடா சொல்றே? அப்போ...அப்போ... காயத்ரி '' என்று முடிப்பதற்குள்

'' என் மனைவின்னா அது ஜனனி தான்! அதை பெத்தவங்களோ, மத்தவங்களோ, ஏன் அந்த இறைவனாலே கூட மாற்ற முடியாது! ஆமாக்கா! '' ஹரிஹரன் தீர்மானமாய் சொல்ல...


அங்கிருந்த அத்தனை பேரின் முகமும் இருள... ஜனனியின் முகம் மெல்ல மெல்ல மொட்டவிழ்ந்து ரோஜாவாய் மலர்ந்தது.

6

பானுமதி கிழிந்த நாராய் படுக்கையில் கிடந்தாள் இரண்டு வருடம் ஆகிறது. ஒரு கையும், காலும் வராமல் போய்!

வயது நாற்பத்தெட்டுதான்! இந்த வயதிலேயே உண்ணுவதற்கு, உறங்குவதற்கு, இயற்கை உபாதைகளுக்கு என்று அடுத்தவரின் உதவியை நாட வேண்டியிருந்தது.





மகன் விநோத்குமார் ஒரு நர்ஸை வீட்டோடே ஏற்பாடு செய்திருந்தான். நர்ஸ்தான் சகலமும் என்றாகிப்போனாள் பானுமதி.

உடையவர்கள், உரியவர்கள் இருந்து கவனிப்பது போலாகுமா?

சித்தியின் இந்த நிலை கண்டு அபிராமி அடிக்கடி இங்கே வந்து தங்கி விடுவாள்.

சிறு வயதில் சித்தி செய்த கொடுமைகளை மறந்து அவளை வெந்நீரில் அழுக்கு போக குளிக்க வைத்து நீண்ட முடியை சிக்கெடுத்து பின்னி அருகிலிருந்து அன்பாய் பேசி என்று கவனித்துக் கொள்வாள்.

மாதத்தில் பாதிநாட்கள் இங்கே இருப்பாள். விடுமுறை தினங்களில் சந்துருவும் சத்தியனும் வந்து போவார்கள்.

அபிராமி நிறைய நகைகளைப் போட்டுக் கொண்டு புகுந்த வீட்டிற்கு வந்தாள்.

வாடகை வீட்டில் இருந்தவர்களை தன் நகைகளை விற்று இடம் வாங்கி வீடு கட்டி குடியமர்த்தினாள்.

வீடு கட்டும் போது நிறைய பணம் கொடுத்து உதவி செய்தான் வினோத்!

சந்துருவை எம்.காம் படிக்க ஊக்குவித்தவள் அபிராமி!

சந்துருவுக்கு வேறு கம்பெனியில நல்ல வேலை கிடைப்பதாய் அறிந்து அதற்கு கட்ட வேண்டிய முன் பணம் ஐம்பதாயிரத்தை வினோத்திடம் இருந்து வாங்கி வந்து கட்டி அந்த வேலையை வாங்கித் தந்தவள் அபிராமி!

சந்துருவின் முன்னேற்றத்திற்கு காரணம் மனைவி அபிராமியும் மச்சான் வினோத் குமாரும் காரணம்!

அதனால் மச்சான் மேலேயும் மாமியார் மேலேயும் சந்துருவுக்கு மிகுந்த பாசம் உண்டு.

வினோத்குமாரின் பெரியப்பா சம்புலிங்கம் பெயரில் தான் அத்தனை நிலங்களும் உள்ளது. அவருக்கு இரு மகன்கள்.

சமையல் மட்டும் பிரிந்து சொத்து, பணம் பொதுவாய் உள்ளது.

தகப்பனும் இல்லாமல் தாயும் படுத்த படுக்கையாகிவிட கலங்கித்தான் போனான்.

நல்ல படிப்பு இல்லை! நல்ல நட்பும் இல்லாமல் போக, பணம் இருந்த மமதையில் சிகரெட், குடி என்று பழகிக் கொண்டான். செவ்வந்தி என்ற பணம் பிடுங்கி பெண்ணோடு வேறு தொடர்பு உள்ளது.

தம்பியின் கெட்ட சகவாசங்கள் அபிராமிக்கு தெரிந்து சத்தம் போட அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கேட்ட பொழுதெல்லாம் தாராளமாய் பெரியப்பாவிடம் பணம் பெற்றுக் கொடுத்த தம்பியை கடிந்து சண்டை போடவும் மனம் வரவில்லை!

அபிராமி சித்தியின் தலைமுடியை சிக்கெடுத்துக் கொண்டே கேட்டாள். ''உடம்பு பரவாயில்லையா, சித்தி?''



பானுமதி கண்கலங்கினாள்.

''உடம்பைப் பத்தின கவலையை விட.. வினோத்தைப் பத்தின கவலை தான் அதிகமாக இருக்கு, அபி!''

பானுமதியின் கண்களில் ஒரு நதி உருவாகி பாய்ச்சலோடு..கன்னத்தில் இறங்கியது!

''சின்ன வயசு! நிறைய பணம்! புத்தி தடுமாறத்தான் செய்யும், சித்தி!''

தம்பியின் நடத்தைக்கு நியாயம் கற்பித்தாள் அபிராமி.

''எப்போ அபி இவன் திருந்துவான்?''

''அவனுக்கொரு கல்யாணத்தை பண்ணிவச்சா திருந்தாமல் போயிடுவானா..?''

''இவனை எவள் கட்டிக்குவா?''

''என்ன அப்படி சொல்றீங்க? என் தம்பியை ஏராளமான சொத்தோட கட்டிக்க..எவளுக்கு கசக்கும்?

''இப்போ எல்லாம் பெண்களும் முழிச்சிட்டாங்க! பெண்ணைப் பெத்தவங்களும் நகை, பணம், சொத்துக்கு ஆசைப்படறதில்லை! நல்ல பையனா.. நல்ல குணமுள்ளவனா.. நல்ல வேலையில் உள்ளவனாத்தான் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க! அவன் ஏழையா இருந்தாலும் நல்ல மனமுள்ளவனை கட்டிக்க பெண்ணுங்க பிரியப்படறாங்க!

இவன் கிட்ட தான் நல்ல புத்தி கடுகளவு கூட இல்லையே! ஏகப்பட்ட கெட்டப் பழக்கங்கள்! நான் நல்லாத்தானே அபிராமி வளர்த்தேன்! ஏன் இப்படி ஆனான்? உனக்கு செய்த பாவத்தாலா? உன்னிடம் அன்போட, கருணையோட நடந்துக்காததாலா?'' என்று அழ..

''ஐயோ ஏன் சித்தி இப்படி பேசறீங்க! தாய், தகப்பன் இல்லாத என்னை அக்கா பெண் என்ற ஒரே காரணத்துக்காக வளர்த்து அருமையான கணவனை தேர்ந்தெடுத்து கொடுத்திருக்கீங்களே! அதுவே உங்களுக்கு புண்ணியம் தானே?''

''அபிராமி... தம்பி பற்றிய கவலை தான் என் மனசை கரையானா அரிக்குது!''

''அவனைப் பற்றி கவலைப்படறதை நிறுத்திடுங்க! அவனை மெல்ல மெல்ல கண்டிச்சி நான் நல்வழிப்படுத்தறேன்! அவனுக்கொரு நல்ல வாழ்க்கையைத் தேடித்தரேன்!''

அபிராமி அன்போடு பேச...

''இது ஒன்னு மட்டும் செய்துடு, அபி கண்ணே! நான் என் உயிருள்ள வரை நன்றி மறவாதவளா இருப்பேன்!''

''கட்டாயமா, சித்தி! நீங்க கவலைப்படாதீங்க. டாக்டர் என்ன சொல்றார்?''

''கால், கையில கொஞ்சம் உணர்ச்சி வந்திருக்கும்மா! டாக்டரும் சரியாயிடும்ன்னு சொல்றார். ஆனால் எனக்கு நம்பிக்கையில்லை!''

''இப்படி நம்பிக்கையில்லாமல் இருந்தால் எப்படி உடம்பு குண மாகும்? நீங்க பேசாமல் இடம் மாற்றி...என் வீட்டுக்கு வாங்க! நான் கவனிக்கக்கிறேன்!''

''தம்பி தனியா இருப்பானே!''

''அவன் என்ன சின்ன குழந்தையா? தொலைஞ்சிடப் போறான்! கருத்தம்மா சமைச்சா... எப்போதும் போல சாப்பிட்டுட்டு ஊரைச் சுத்தப்போறான்! நினைச்ச நேரம் உன்னைப் பார்க்க என் வீட்டுக்கு வரட்டும்! அங்கேயும் தங்கட்டும்!''

''சரிம்மா..ஏற்பாடு செய்ம்மா! மாப்பிள்ளை கிட்ட சொல்லி அனுமதி வாங்கணுமில்லை?''

''அனுமதி எதுக்கு? என் புருஷனுக்கு ஆர்டர் போட்டா போதும் சித்தி!''

அபிராமி சிரிக்க...பானுமதிக்கு கொஞ்சம் பொறாமையாகத்தான் இருந்தது.

சந்துரு வாடகைக்கார் எடுத்து வந்து மாமியாரை ஏற்றிக் கொண்டு தன் வீட்டிற்கு பறந்தான்.

ஜனனியின் அறையை பானுமதிக்கு கொடுக்க...ஜனனி ஹாலுக்கு துரத்தப்பட்டாள்.

ஜனனிக்கு பானுமதியைக் கண்டு வெறுப்பு வரவில்லை! மாறாய் பாசமே வந்தது.

அபிராமியை விட ஜனனிதான் பானுமதியை கவனித்துக் கொண் டாள்.

இயற்கை உபாதைகளை முகம் சுளிக்காமல் அள்ளிக் கொட்டி னாள், ஜனனி!

இது நாள் வரை பானுமதி ஜனனியிடம் அன்பாய் பேசியதில்லை! ஆனால் ஜனனியை இப்போது உள்ளம் முழுக்க பிடித்து விட்டது!

தேவதையாய் தாங்கிக் கொண்ட ஜனனியிடம் ஆயிரம் முறை மன்னிப்பு கேட்டுக் கொண்டாள்! நினைத்த நேரம் நன்றி சொன்னாள். டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரையை சரியான நேரத்துக்கு கொடுத் தாள்.

டாக்டர் கொடுத்த எண்ணெய் கொண்டு..உணர்ச்சியற்ற காலுக் கும், கைக்கும் தடவி, சூடு பரக்க தேய்த்து, பிடித்து விடுவாள்!

அப்போதெல்லாம் பானுமதியின் கண்களில் கண்ணீர் சரம் கட்டி காதுமடல்களை நனைக்கும்.

அன்று அம்மாவைப் பார்க்க வினோத் வந்தான்.

ஜனனியைக் கண்ட வினோத்தின் பார்வை ''அவளின் முகத்தி லும், உடம்பிலுமே தொக்கி நின்றது!

கொத்தும், கொடியுமாய், வாளிப்பாய், வளர்ந்திருந்த ஜன னியை..அவன் நோக்கிய பார்வை வித்தியாசமாய் இருந்தது.

வினோத்தை கண்டாலே ஜனனிக்கு பிடிக்காது. அவன் பார்வை



படும் இடத்தில் நிற்கவே அச்சப்படுவாள்.

ஜனனி சமைத்து..அபிராமி, வினோத்துக்கு பரிமாறினாள்.

''முருங்கைக்காய் சாம்பாரும்...கத்திரிக்காய் எண்ணெய் வதக்க லும்...சுண்டை வத்தல் புளிக்கொழம்பும் ரொம்பவே அருமைக்கா! உனக்கு இப்படி சுவையா சமைக்க தெரியுமா?'' என்று ஆச்சரியமாய் வினோத் கேட்க..

''அட போடா வினோத்! இந்த வீட்டுக்கு அடியெடுத்து வைத்த திலிருந்து சமையலே மறந்துடிச்சி! எங்க வீட்டு அடுப்படி மினிஸ் டர் ஜனனிதான்! எங்க ஜனனி நாக்குக்கு ருசியா சமைச்சிப் போட்டு..இப்படி உப்பிப் போய் கிடக்கறேன்!''

''பார்த்துக்கா! ஜாக்கிரதை! ஓரளவுக்கு மேலே பொம்பளைங்க உப்பிப்போனா... புருஷன்களுக்கு ரசிக்காது! அப்புறம் எங்காவது சின்னவீடு செட்டப் செய்துக்க போறார், அத்தான்! கொஞ்சம் அளவா உடம்பை வளர்த்துக்கோ! ஜனனிக்கு கூடமாட ஒத்தாசை செய்!'' என்று சிரிப்போடு சொல்ல..

''என்னை விட்டு வேற பொம்பளையை ஆசையாக் கூட பார்த்து டுவாரா?'' அபிராமி மிகுதியான நம்பிக்கையோடு கேட்க...

''ஏன் பார்க்க மாட்டாரா? அத்தான் மேல அத்தனை நம்பிக் கையா?''

''அப்படியே பார்த்தார்ன்னு தெரிஞ்சா அவர் முழியைத் தோண் டிட மாட்டேன்!''

''நீ ராட்சசி! செய்தாலும் செய்வே!'' என்று வினோத் சிரித்தான்.

ஜனனி பானுமதிக்கு சூடான சாதத்தில் சாம்பார் ஊற்றி நன்கு பிசைந்து சிறு சிறு உருண்டைகளாய் ஊட்டினாள்.

வினோத் வந்து தாயின் அருகில் அமர்ந்து

''என்னம்மா நல்லா தேறிட்டு வரப்போல தெரியுது!'' என்று கேட்க...

''எல்லாம் நம்ம ஜனனியாலத்தான் வினோத்! என்னை ரொம்ப

''எதிர்க்கட்சித் தலைவர் உங்க முகத்திலே முழிச்சிட் டுத்தான் பிரச்சாரத்துக்கே போகப் போறாராம்''

''ஏன்?''

''நீங்கதானே நான் பனங் காட்டு நரின்னு சொன்னீங்க''

-செல்வராஜா, சேலம்.



நல்லா பார்த்துக்கிறாடா!''

''ஜனனி..உனக்கு நன்றி, ஜனனி!'' என்று சின்ன சிரிப்போடு அவன் கையை தொட வர..

அவனிடமிருந்து சிகரெட் வாடை குப்பென்று நாசியைத் தாக்க அவள் விலகினாள்.

வினோத் அக்கா வீட்டிற்கு வரும் போதெல்லாம் ஜனனியை அலட்சியப்படுத்துவான். தனது அக்காவின் தயவால் வாழ்பவள் என்ற கேவலமான எண்ணத்தால் அவளை ஒரு மனுஷியாகக்கூட மதிக்க மாட்டான்.

நாளாக நாளாக அவள் முகத்தில் அழகு கூட...வாலிபம் அவள் சிற்பம் போன்ற மேனியில் வசந்தம் பாட அதனைக் கண்ட வினோத்தின் பார்வையில் விரசம் கூடியது. வாயில் எச்சில் ஒழுக அவளை வைத்த விழி எடுக்காமல் நோக்குவான்.

''அம்மா நீ எப்போ வீட்டுக்கு வரே?''

''நான் அங்கே வர்லடா! நர்ஸ் ஒருத்தி வேண்டா வெறுப்பா என் கூட இருப்பா! அங்கே யார் என்னை அன்பா கவனிச்சிகுவா?''

''நான் கவனிச்சிக்கிறேம்மா!''

''ஆஹா நீ இது நாள் வரை கவனிச்சிகிட்ட லட்சணம் எனக்கு மறந்துடுமா?''

பானுமதி முகம் சுளித்து இளக்காரமாய் கேட்க..

''அதுக்காக பெண்ணை கொடுத்த இடத்தில் எத்தனை நாள் உற வாட முடியும்?'' வினோத் கேட்க

''எனக்கு என்ன செலவாகுதோ அதை மாசமானால் எண்ணி அபிராமிகிட்ட கொடுத்துடு, வினோத்!''

''அப்படி கொடுத்துட்டா மட்டும். உன்னை கடைசிவரை மரியாதையோட நடத்துவாங்களா?''

''என் அக்காவும், அத்தானும் இறந்து சொந்த பந்தங்களால் நிராகரிக்கப்பட்டு போக்கிடம் இல்லாமல் தவிச்சிட்டு இருந்த அபிராமியை கொண்டுட்டு வந்து குழந்தையில இருந்து வளர்த்து. உடை கொடுத்து உண்ண உணவு கொடுத்து. ஒருத்தர் கையில் பிடிச்சி கொடுத்திருக்கேன்!''

''ஆனால், அதை நீ முகம் சுளிக்காமல் செய்தியா? எனக்கு பாலும், நெய்யும் தருவே! அபிக்கு பழைய சோறை போடுவே!''

அதைக் கூட செய்ய அவள் அப்பாவோட சொந்தத்துக்கு மனசு வரலையே, வினோத்! நான் கூட ஒரு காலகட்டத்துக்கு மேலே திருந்திட்டேன் இல்லடா? அவள் வளர வளர.. நான் பெத்த பெண்ணாகவேதான் பாசம் காட்டினேன்! தங்கமான மாப்பிள்ளைக்கு அவளை கட்டி வச்சிருக்கேன்!'' என்று பானுமதி சரியான பதிலைத்தர...

'''அக்காவுக்கு தங்கமான மாப்பிள்ளையை தேடி வைச்சே! ஆனால், எனக்கு ஒரு தங்கமான பெண்ணைத் தேடி வைக்கலையே!



அதுக்குள்ள படுத்துட்டியே!'' என்று வினோத் தாயிடம் குறைபட..

'' நீ வேணா உன் கெட்டப் பழக்கத்தை விட்டு ஒழி! நான் அந்த ரதியை ஒத்த பெண்ணைக் கட்டி வைக்கிறேன்!''

பானுமதி அருகில் இருந்த ஜனனியை அர்த்தத்தோடு பார்த்து சொல்ல

அது உணர்ந்த வினோத் மந்தகாசமாய் சிரிக்க..

இதையெல்லாம் கண்ட ஜனனி மிரண்டு போனாள்!

## 7

பானுமதியின் வலது கையில் மூலிகை எண்ணெய்யை தேய்த்துக் கொண்டிருந்தாள், அபிராமி.

''அபிம்மா..''

''என்ன சித்தி?''

''நம்ம வினோத்துக்கு ஒரு கல்யாணத்தை பண்ணி வச்சுடலாம்மா! அவனுக்கு ஒரு கால் கட்டு போட்டாத்தான் ப்ய அடங்குவான்! உங்க பெரியப்பாவிடம் ஏகப்பட்ட பணம் வாங்கி தெண்டமா செலவு செய்யறான்! நாளைக்கு பாகம் பிரிக்கறப்ப இதையெல்லாம் கணக்கு பார்த்துத்தானே மீதியைப் பிரிச்சி கொடுப்பாங்க!'' பானுமதி கவலையோடு சொல்ல..

''அதுதாம்மா முறை!'' அபிராமி சொல்ல..

''அதான் அபி பயம்மா இருக்கே! வள்ளல் மாதிரி வாரி வாரி வழங்கிட்டு இருக்கார், உங்க பெரியப்பா! நாளைக்கு உனக்கு கொடுத்த பணத்துக்கு நிலம் சரியாப் போச்சுன்னு சொல்லிட்டால் தம்பி நடுத்தெருவுல நின்னுடுவாம்மா!''

''அப்படியெல்லாம் ஆகாது! இனி அவனுக்கு பெண் பார்க்க ஆரம்பிச்சிடலாம்!''

''கையில வெண்ணெய் இருக்க நெய்யுக்கு ஏன் அபி அலையணும்?'' பானுமதி கூற அபிராமி முழிக்க..

''உன் வீட்டுல ஒரு பெண்ணை வச்சுட்டு வினோத்துக்கு வெளியில தேடணுமா?''

''யாரு நம்ம ஜனனியையா சொல்றீங்க?''

''ஆமாம், அபி!''

''அட இது எனக்கு தோணாமல் போயிடிச்சே! ஆனால் வயசு வித்தியாசம் நிறைய இருக்குமே, சித்தி!''

''பத்து வயது மூத்தவனா இருப்பான்! இது ஒரு பெரிய வயது வித்தியாசமா? நான் அந்த காலத்துல இருபது வயது மூத்தவரை கட்டிட்டு குடும்பம் நடத்தி குழந்தை பெத்துக்கலையா?'' பானுமதி நீட்டி முழக்க..

''உங்களுக்கு ஜனனியை பிடிச்சிருக்கா?''

''ரொம்ப ரொம்ப! இது போல பெண் எங்கு தேடினாலும் கிடைக்கமாட்டாள். ஜனனி புதையல்! ஜனனி பொக்கிஷம்! நம்ம வினோத்தை திருத்தி கையுக்குள்ள வச்சிக்குவா! நானும் இவனுக்கொரு கல்யாணம் செய்து வைத்து கண் குளிர பார்த்துடுவேன்! பிறகு நான் செத்தாக்கூட எனக்கு கவலையில்லை!'' என்று கூறிய பானுமதியின் கண்களில் கண்ணீர் மினுமினுத்தது.

''நல்ல பேச்சு பேசும் போது எதுக்கு சித்தி கண்கலங்கறீங்க! வினோத்துக்கு ஜனனியை பிடிச்சிருக்கான்னு கேட்போம்!''

''ஜனனி மேலே வினோத்துக்கும் ஆசைதான்! அதனாலத்தானே இப்போ எல்லாம் அடிக்கடி இங்கே வந்துடறான்!''

''பெண்ணெடுத்து பெண் கொடுத்தா நல்லவா இருக்கும்?''

''இப்போ இது போல நிறைய வீடுகள்ல நடக்குது?''

''அவர் வரட்டும் பேசிப்பார்க்கிறேன்!''

''பேசறேன்னு சொல்லக் கூடாது! முடிச்சுவைக்கறேன்னு சொல்லு, அபிம்மா!''

''சரி எங்க ஜனனியை வினோத்துக்கு கட்டிவச்சா நீங்க எனக்கு என்ன செய்வீங்க?''

''நீ என்ன வேணுமோ கேளு! வினோத் தருவான்!''

அபிக்கு ஜனனியின் வழியாக ஒரு ஜாக்பாக்ட் அடிக்க காத்திருக்கும் போது அந்த அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விடுவாளா?

வினோத்திடம் பேசிவிட்டு கணவரிடம் சொல்ல நினைத்தாள், அபிராமி.

அன்றிரவு வந்த வினோத்துக்கு உண்ண உணவு கொடுத்தாள். அது முடிந்த பின்னர் தோட்டத்து கிணற்றுப் பக்கம் அழைத்துப் போனாள். அங்கு துவைப்பதற்கு போடப்பட்டிருந்த கல்லில் அவனை அமர்த்தினாள்.

''வினோத் உனக்கொரு கல்யாணத்தை செய்து பார்க்க சித்தி ஆசைப்படறாடா! பெண் பார்க்கவா?''

''கல்யாணமா? எனக்கு என்ன வயசாகுது?''

''அடடா..தம்பிக்கு இருபதுன்னு நினைப்பு! வயது முப்பதுக்கு மேலாகுது! அப்புறம் முத்திடுவே, வினோத்! முப்பதுக்கு மேலான பெண்களை 'மூர்க்கன்னின்னு சொல்றாப்பல..உங்களைப் போன்றவர்களை 'முதிர்காளை'ன்னு இப்போ கதையிலும்; கவிதையிலும் வர்ணிக்கறாங்க! சொல்லு நல்லப் பெண்ணா பார்க்கவா?''

''வேண்டாம்!'' வினோத் சட்டென்று சொல்ல..

''ஏன்? ஏற்கனவே பார்த்து வச்சிட்டியா?''

''ஆமா!'' கண்கள் மினுமினுக்க வினோத் சொல்ல..

''திருட்டு படவா... யார்டா அது?'' ''ஜனனி!'' அவன் யோசிக்காமல் சொல்ல அபிராமி பிரம்மித்துப் போனாள்.



''என்னடா சொல்றே?''

''எனக்கு ஜனனியை பிடிச்சிருக்குக்கா! கட்டினால் அவளைத்தான் கட்டுவேன்! இல்லேன்னா...இப்படியே வாழ்ந்துடுவேன்!''

''இப்படியேன்னா ஊர்ல அந்த செவ்வந்தி பின்னாடியேவா?''

''நீ என்னக்கா சொல்றே?'' அவன் கொஞ்சம் அதிர்ச்சியாய் கேட்டான்.

''இது வரைக்கும் பீடி, சிகரெட், தண்ணின்னு இருந்தே! கொஞ்ச காலமா தரம் கெட்டு அந்த வேசி குடும்பத்துக்கு போறீயாமே!'' கோபமாய் கேட்க..

வினோத் மௌனமாய் தலைகுனிந்தான்.

''இதுநாள்வரை எப்படி இருந்தியோ..இனியாவது ஒழுக்கமா..ஒழுங்கா இருப்பியா?''

''சரிக்கா!''

''ஜனனியை உனக்கு கட்டிவச்சா..நீ எனக்கு என்ன செய்வே?'' அபிராமி பேரம் பேசினாள்.

''நீயே கேளுக்கா உனக்கு செய்யாமல் யாருக்கு செய்யப் போறேன்!''

''சித்தியோட நகைகள் அத்தனையும் வேணும்!''

''என்னக்கா நீ?''

''சித்தி நகைகள் எனக்கு! ஜனனி உனக்கு! இஷ்டமிருந்தா சொல்லு..நான் உன் அத்தான் கிட்ட பேசுறேன்!''

''சரிக்கா..''

ஜனனியின் மேலான ஆசையில் ஒத்துக்கொண்டான்.

''ஜனனி இந்த கல்யாணத்துக்கு ஒத்துப்பாளா? அவள் என்னைப் பார்க்கற பார்வையே கொஞ்சம் கேவலமா இருக்குமே!''

''கழுதை சொன்னால் மணவறையில உட்காராம எங்கே போயிடுவா?''

''சம்மதிக்கலேன்னால்?''

''அவருக்கு ரொம்ப கஞ்சத் தனம்''

''ஏன்?''

''அட்சதை அரிசி கூட ரேஷன் கடை அரிசி தான் போடுவார்ணா பாரேன்!''

-கி.மஞ்சுளா, திருவாரூர்.



''எப்படி சம்மதிக்காமல் போவா? நான் கிழிச்ச கோட்டை என் புருஷனே தாண்டமாட்டார்! அவள் தாண்டிடுவாளா? இதைவிட்டால் அவளுக்கு வேற போக்கிடம் ஏது?''

அபிராமி திமிராய் சொல்லி சிரித்தாள்.

இங்கே ஜனனி ஹாலின் ஒரு மூலையில் படுத்து ஹரிகரனின் நினைவுகளோடு புரண்டுக் கொண்டிருந்தாள்.

அண்ணி அங்கே அவளுக்கொரு விலையை நிர்ணயித்தது தெரியாமல்!

மறுநாள் காலை உணவு உண்டுவிட்டு சோபாவில் அமர்ந்து ரிமோட்டை கொண்டு சேனல் மாற்றி மாற்றி பிறகு கிரிக்கெட்டை லைவாக காட்டிய சேனலை வைத்து சுவாரசியமாக சந்துரு பார்த்துக் கொண்டிருக்க..அபிராமி அருகில் வந்து அமர்ந்தாள்.

அன்று விடுமுறை என்பதால் சந்துரு வீட்டில் இருக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள அபிராமி எண்ணினாள்.

ஜனனியும் வீட்டில் இல்லை.

''என்ன அபிராமி?'' சந்துரு ஆசையாய் கேட்டு..அவள் கைப் பற்றி வருட...

''நம்ம ஜனனிக்கு திருமணம் செய்துடலாங்க! அவளுக்கொரு திருமணத்தை முடிச்சி வச்சிட்டா நம்ம கடமையும், பொறுப்பும் தீர்ந்துடுமில்லையா?'' என்று அக்கறையாய் பேச சந்துரு நெகிழ்ந்து போனான்.

''தரகர்கிட்ட விஷயத்தை சொல்றேன், அபி!''

''வீட்டுலேயே மாப்பிள்ளையை வச்சிட்டு..அவளுக்கு வெளியில தேடணுமா?''

''வீட்டுலயா...? யார் அபி?'' என புரியாமல் கேட்க..

'' நம்ம வினோத்தை உங்களுக்கு மாப்பிள்ளையா கண்ணுக்கு தெரியலையா?''

''வினோத்தா..?'' சந்துரு அதிர்ச்சியோடு கேட்க..

''ஏன் என் தம்பி வினோத்துக்கு என்ன குறை?'' என்று அபிராமி சீற..

''சகவாசம், குணம், பழக்க வழக்கம் எதுவுமே சரியில்லையே!'' என்று முகம் சுளிக்க

சட்டென்று கோபமுற்றாள், அபிராமி.

''எல்லோரும் உங்களைப் போலவே இருந்துடுவாங்களா? கண்டிக்க தகப்பனில்லே! வசதியும், வாய்ப்பும் சில கெட்டப் பழக்க வழக்கங்களை இழுத்து விட்டுடிச்சி! ஜனனியை கட்டிட்ட பிறகு திருந்தாமல் எங்க போயிடுவான்? நாளைக்கு ஒண்ணுன்னாலும் தட்டி கேட்கலாம் இல்லையா?''

அபிராமி நீட்டி முழக்க..சந்துருவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.



''ஜனனிக்கு பொருத்தமாகவே இருக்கமாட்டான்! ஜனனி மென்மையானவள்! வினோத் கரடு முரடானவன்! இது நாள் வரை நகரத்துல வாழ்ந்துட்டு அவளால கிராமத்துல வாழ முடியுமா? அதெல்லாம் சரிப்படாது!

இது நாள் வரை தாய்க்கு தாயா..தகப்பனுக்கு தகப்பனா..கண்ணுக்குள்ள வச்சி வளர்த்துட்டு கடைசியில அவளுக்கு தகுதியான மாப்பிள்ளையைத் தேடித்தராமல் போனால் அந்த பாவம் என்னை ஆயுசுக்கும் விடாது! என் தங்கைக்கு தகுந்தவனா...நல்லவனா..நல்ல வேலையில இருக்கவனாத்தான் பார்த்து முடிக்கணும்! வினோத்துக்கு வேறப் பெண்ணைப் பாரு!''

சந்துரு கண்டிப்புடன் சொல்ல..

'' வினோத்துக்கு ஜனனியைத் தான் பிடிச்சிருக்காம்! ஜனனியைத் தான் திருமணம் பண்ணிப்பேன்! அவள் எனக்கு இல்லேன்னால் இப்படியே இருந்துடுவேன்னு என் தம்பி சொல்றான்! உங்களுக்கு உங்க தங்கை எப்படி முக்கியமோ..அப்படி எனக்கும் என் தம்பி சந்தோசம் முக்கியம்! உங்களுக்கு ஜனனி ஒஸ்தின்னா...எனக்கும் வினோத் உயர்வு!'' என்று அபிராமி அழவும்.

'' நீ என்னதான் என்னைச் செய்யச் சொல்றே?'' என்று சந்துரு கோபமாய் கேட்க

'' நீங்க எதுவும் செய்ய வேண்டாம்! உங்க தங்கைக்கு நல்ல மாப்பிள்ளையா பார்த்து தேடி வையுங்க!

நான் அன்னைக்கு நீங்க ஏழையா இருக்கீங்களே தங்கச்சியை வேற இவரே கஷ்டப்பட்டு கரையேத்தணும்மே நாம ஏன் இவரை கட்டிக்கணும்? எனக்கு வேற வசதியான மாப்பிள்ளையா பாருங்கன்னு சொல்லியிருந்தால் நான் உங்களுக்கு கிடைச்சிருப்பேனா?...

நான் வந்துதானே இந்த மேனேஜர் வேலை! வீடு, வசதின்னு நான் வந்த பிறகு தானே நல்லாயிருக்கறீங்க! உங்களுக்காக என் நகையெல்லாம் கழற்றி வித்துட்டு மூளியா நிற்கறேன்! ஜனனியை பத்தாவதோட நிறுத்தியிருக்கலாம்! நான் அப்படி செய்தேனா? உங்களுக்கு கொஞ்சம் கூட நன்றி விசுவாசமே இல்லை! நாம இப்போ கொஞ்சம் வசதியா இருக்க. என் தம்பி கணக்கு பார்க்காமல் கொடுத்த பணமும் கூடத்தான்!

காடு, வயல், வீடு, தோப்புன்னு நல்லவசதி, இதைவிட உயர்ந்த மாப்பிள்ளையை உங்களால் அவளுக்கு தேடிவச்சிட முடியுமா?''

அபிராமி விம்மியழ..

''சரி..சரி..அழாதேடி! ஜனனி வரட்டும்! பேசறேன்!''

''அவகிட்ட என்ன பேசறது? நீங்க சொன்னால் கேட்காமல் கட்டறுந்து ஓடிடுவாளா?''

அபிராமி அநியாயம் தவறி பேச..

அதை கண்டிக்க முடியாமல் ஊமையாகிப் போனான் சந்துரு.

8

அந்த பெரிய பூங்காவில் மாமரம் ஒன்று கிளைப்பரப்பி நிழல் கொடுத்துக் கொண்டிருக்க அங்கே அரிஹரன் ஜனனிக்காக காத்திருந்தான்.

ஜனனி தோழியைப் பார்க்க செல்வதாய் கூறிவிட்டு அரிஹரனைப் பார்க்க வந்தாள்.

அவனின் எதிரே அமர்ந்தாள்.

ஹரி இமைக்காமல்..கண்களை அகல விரித்து ஜனனியின் கள்ளமற்ற கொள்ளையழகை கண்களால் கொய்துக் கொண்டிருந்தான்!

ஏக்கம் நிறைந்த ஜோடி விழிகளும் பின்னி பிணைந்து தாகத்தை தணித்துக் கொண்டன!

இதயமும் இதயமும் சட்டென்று கட்டித் தழுவி..பிரிவைப் போக்கிக் கொண்டன!

இந்த மோனநிலை ரொம்ப நேரம் நீடித்தது!

முதலில் இயல்புக்கு வந்தது, ஜனனிதான்.

அவன் முகத்துக்கெதிரே விரல்களை சுண்ட...ஹரி ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

''என்ன சார் இங்க இருக்கீங்களா..? இல்ல தூரதேசம் என் கைப் பிடிச்சிட்டு டூயட் பாட போயிட்டீங்களா..?''

''ஜனனி..உனக்கு எப்பவுமே கிண்டல் தான்! உன்னை இப்போ அடிக்கடி சந்திக்க முடியலே! பேசமுடியலே! வாரம் ஒருமுறைன்னு கோட்டா வச்சிட்டு வரே! ஒரு வாரமா உன்னைப் பார்க்காமல் தவிச்சிப்போறது எனக்கில்லே தெரியும், என் கஷ்டம்!'' என்று ஹரி சோகமாய் சொல்ல..

''அதுக்கு என்ன ஹரி செய்ய முடியும்? வீட்டுல பயங்கர வேலை! அப்புறம் பானு அத்தையை குளிக்க உண்ண வைக்கணும்! மாத்திரை கொடுக்கணும்! தைல எண்ணெய் தேய்க்கணும்! இப்பவே அண்ணி விடலே! என் தோழிக்கு உடம்பு சரியில்லே! ஆஸ்பிட்டல்ல இருக்கா! ப்ளீஸ் அண்ணின்னு கெஞ்சி, பர்மிஷன் வாங்கி வந்தேன்!''

''வர... வர... கபாலிக்கு லொள்ளு அதிகமாயிடுச்சு''

''எப்படி?''

''மாமூல் கொடுக்க வரும்போது மாமூ... வாங்கிக் கோங்க என்கிறானே!''

-செல்வராஜா, சேலம்.





ஜனனி தன்நிலை விளக்க..

''உன்னை என்னோடவே பக்கத்துல வச்சிக்க மனம் ஏங்குது, ஜனனி! இந்த நாட்களின் பிரிவு ரொம்ப துயரமா இருக்கு, ஜனனி! என் வீட்டுல சம்மதிச்சிட்டாங்க இல்லையா? வெட்கத்தைவிட்டு உடனே மேரேஜ் பண்ணி வையுங்கன்னு அப்பாகிட்ட கேட்கப்போறேன், ஜனனி! எத்தனை நாளைக்கு தள்ளியே நின்னு கண்களால் ஸ்பரிசித்து இதயத்தால் இணைந்து இப்படி ஏக்கத்தோடு வாழ்வது? உன்னை மேரேஜ் பண்ணிட்டுப் போய் என்னென்னவோ செய்யணும் போல வெறி வருது, ஜனனி!''

ஹரி கூறி..மந்தகாசமாய் சிரிக்க..

''ச்சீ..ஐயாவுக்கு பேச்சு என்ன அசிங்கமா இருக்கு!'' அவள் முகம் சுளித்து சொல்ல..

''உன் அருகிலேயே இருக்கணுங்கிற ஏக்கம் வெறியா வருது! உனக்கு அப்படி தோணலையா, ஜனனி?''

''ஹரி..உங்களை எவ்வளவோ உயர்வா நினைக்கறேன்! இப்படி சிறுபிள்ளைத் தனமா தத்துபித்துன்னு உளறாதீங்க!''

''என் விருப்பம் உனக்கு உளறலா தோன்றுதா?''

''நீங்க பயங்கர' ரொமான்டிக் மூடுல' இருக்கா போல தெரியுது! எதுனா விபரீதம் ஏற்படறதுக்குள்ளே கிளம்பறேன்!'' என்று சிரிப்போடு எழப்போனவளை கைப்பிடித்து அமர்த்தினான்.

''ஏய் ரொம்பத்தான் முறுக்காதே! நான் ஒண்ணும் உன்னை வெல்லகட்டியா கடிச்சி சாப்பிட்டுடமாட்டேன்! சரி சொல்லு உடனே பெற்றோர்களை அழைச்சிட்டு உன் வீட்டுக்கு வரட்டா?''

''ம்...'' அவள் நாணமுடன் முகம் சிவக்க

''உங்க வீட்டிலயும் சம்மதிச்சு'' அவன் முடிப்பதற்குள்..

''மறுமுகூர்த்தத்திலே உங்க தாலியை வாங்கிக்க எனக்கு சம்மதம்பா!'' ஜனனி வெட்கத்துடன் சொல்ல..

''ஏய் கள்ளி...நீயாடி பேசுறே?'' ஆச்சரியத்தோடு கேட்க

''ஆமாடா முட்டாளே! பெண் மனம் தெரியாத முரடன்டா நீ!'' என்று சொல்லிவிட்டு சத்தமாய் சிரிக்க..

''ஏய்..ஏய்..என் காலையே வாரறீயே! இருடி திருமணத்துக்கு பின்னாடி உன்னை என்ன செய்யறேன், பாருடி!''

''என்னடா செய்வே?''

''அப்போ இந்த மச்சானோட விளையாட்டுல தவிக்கத்தான் போறே, தாங்கமுடியாமல்!''என்று கண்சிமிட்டி முறுவல் பூக்க..

''ச்சீ..நீங்க ரொம்ப மோசம், ஹரி!'' என்று எழுந்து குதூகலமாய் ஓடினாள்.

வீட்டில் அவளுக்கு மோசமான வலைப்பின்னப்பட்டிருப்பது தெரியாமல்!

வீட்டில் அண்ணா, அண்ணி சிரித்து பேசிக் கொண்டிருக்க..சத்யன் டி.வி.யில் கார்ட்டூன் பார்த்துக் கொண்டிருந்தான்.

இவள் உள்ளே நுழைய..

''ஜனனி இங்கே வா!'' என்று அண்ணன் அழைக்க அருகில் போனவளை..பக்கத்தில் அமர்த்திக் கொண்டான்.

''என்னண்ணா? ஜனனி பாசமாய் கேட்க..

''உனக்கு கல்யாணம் செய்ய விரும்பறேம்மா!''

இது தான் சமயம் என ஜனனி ஹரியைப் பற்றி சொல்ல வாயெடுத்த போது..

''காலாகாலத்துல உனக்கும் கல்யாணம் செய்துப்பார்க்க ஆசையாயிருக்குடா? உன்னை வெளியாட்டுகளுக்கு கட்டிக் கொடுத்துட்டு கலங்கிட்டு இருப்பதைவிட சொந்தத்திலே மணம் முடிச்சிட்டா நிம்மதியா இருக்கலாம், இல்லையா?

மாப்பிள்ளை வேற யாரும் இல்லடா! நம்ம வினோத்தான்!''

சந்துரு சொல்ல தலையில் வானம் இடிந்து விழுந்தாற் போல..

'' அண்ணா..'' என்று அதிர்ச்சியில் வீறிட்டாள்.

''என் தம்பிக்கு என்ன குறை? சும்மா ஜம்முன்னு அய்யனார் சிலை போல எவ்வளவு அழகா இருக்கான்!'' என்று அபிராமி பெருமையாய் சொல்ல...

''வினோத்தும் நல்லவன் தான்! கிராமத்துல சகவாசம் சரியில்லாமல் சில கெட்டப் பழக்கங்களுக்கு ஆளாயிட்டான்! அவ்வளவு தான் குறை! அதை கண்டிச்சி திருத்திடலாம்! உன் அண்ணி இருக்க ..உனக்கேன் கவலை?

'' அண்ணா...'' அழுகையோடு நா தழுதழுத்தாள்.

''என்ன ஜனனி?''

''மேரேஜ் வேண்டாம்!''

''மேரேஜ் வேண்டாமா..? இல்ல வினோத் வேண்டாமா..?''

''வினோத் வேண்டாம், அண்ணா!'' ஜனனி தைரியமாய் சொல்ல

'' ஏய்..ஏண்டி?'' அபிராமி கர்ஜிக்க..

''எனக்கு வினோத்தை பிடிக்கலே!''

''பின்னே வேற யாரை பிடிச்சிருக்கு? ''சந்துரு கேட்க..

''ஹரியை பிடிச்சிருக்கண்ணா!'' என்று ஜனனி அழ..

''ஹரியா? அது யாருடி?'' அபிராமி கத்த..

''ஏன் அபி கத்தறே?'' அவள் என்ன சொல்றான்னு கேட்போமே!''

சந்துரு அபிராமியை அடக்க..

''அவ என்ன சொல்றது? நீங்க என்ன கேட்கறது? கண்டவனையெல்லாம் கைகாட்டுவா..அப்படியே கட்டிவச்சிடுவீங்களா? நம்ம குடும்ப மானம் என்னாகறது? சண்டாளி...உனக்கு என்ன துணிச்சல்? எங்கே அவனை சந்திச்சே?''



அபிராமி புலியாய் உரும...சந்துரு அபிராமியை அடக்கினான்.

''அபிராமி நீ சும்மா இருக்கமாட்டே! எதுக்கு கத்தறே?''

''தப்பு செய்தவளை விட்டுட்டு என்னை வந்து அடக்குங்க!'' அபிராமி மேலும் சப்தமிட...அதை அலட்சியப்படுத்தி..

''ஹரி யார்? அவரை எங்கே சந்திச்சே? என்ன செய்கிறார்?''

சந்துரு மென்மையாய் கேள்விகளை அடுக்க...

''அவர் சொந்த ஊர் கல்வராயன் மலையில உள்ள வெள்ளிமலை! நம்ம ஊர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில வேதியியல் ஆசிரியரா இருக்கார். அவரை கோயில்ல சந்திச்சேன்! ஹரி நல்லவர்ண்ணா! அவங்க வீட்டுல சம்மதிச்சிட்டாங்க! நீங்க சம்மதிச்சா.. விரைவிலேயே உங்ககிட்ட பெண்கேட்டு என்னை மணந்துக்குவார்ண்ணா!''

ஜனனி சொல்ல.. சந்துரு எதுவும் சொல்லாமல் இருக்க... அபிராமி உள்ளுக்குள் பூகம்பமாய் பொங்கிக் கொண்டிருந்தாள்.

''நல்ல வேலையில இருக்கார்! ரொம்ப நல்ல குணமுள்ளவர்! எந்த வித கெட்டப் பழக்கமும் இல்லை! உங்க கிட்ட அதை கொடுங்க.... இதை கொடுங்கன்னு வரதட்சணை எல்லாம் கேட்கமாட்டார். அத்தனை விசாலமான மனசு ஹரிக்கு! பிளீஸ்ண்ணா... எங்களை சேர்த்து வையுங்கண்ணா!''

ஜனனி சொல்லிவிட்டு கதறியழ.. சந்துரு அபிராமியைப் பார்த்தான்.

''அபிராமி.. என் தங்கச்சி ஹரி மேலே ஆசைப்பட்டுட்டா! நேசிச்ச ரெண்டு உயிரையும் பிரிக்க வேண்டாம்! இதுபோல கவர்ன்மெண்ட் வேலையில இருக்கிற மாப்பிள்ளை கிடைச்சது... நம்ம ஜனனியோட லக் தான்!''

சந்துரு பேசிக் கொண்டே போக அபிராமி இடைமறித்தாள்.

''என் தம்பியோட ஆசை என்னாவது?'' என்று அபிராமி பாம்பாய் சீற...

''என் தங்கையை மணமுடிக்க.. உன் தம்பிக்கு என்ன தகுதியிருக்கு?'' சந்துரு மல்லுக்கு நின்றான்.

தங்கையின் விருப்பத்தில், திருமணத்தில் மனைவிக்கு அடங்கிப் போக சந்துருக்கு பிடிக்கவில்லை.

''ஏதாவது ஒரு நல்ல தகுதியை விரல் விட்டு காட்டு? படிப்பு... குணம்... இப்படி.''

''நான் அன்னைக்கு தகுதி பார்த்திருந்தால்... உங்களுக்கு நான் கிடைச்சிருப்பேனா?'' என்று கேவலமாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க... சந்துருவுக்கு கோபம் தலைக் கேறியது.

''அன்னைக்கு எனக்கு என்ன தகுதியில்லே? பி.காம் படிச்சிருந்தேன்! குறைந்த சம்பளமானாலும் வேலையில இருந்தேன்! பிச்சையா எடுத்துட்டு இருந்தேன்? பிச்சைக்காரனா இருந்த எனக்கு சோறு போட்டு... கோபுரத்துல தூக்கி வச்சிருக்கே? என்னடி ஒரேடியா துள்ளறே?''

''பேசமாட்டீங்க பின்னே? வாடகை வீட்டில இருந்த உங்களை.. சொந்த வீட்டில குடியமர்த்தினேன்! எனக்கு இதுவும் வேண்டும்... இன்னமும் வேண்டும்! வந்த உடனே இவளை எங்காவது அநாதை ஆசிரமத்துல விட்டுட்டு வந்தாதான்... உங்களோட குடும்பம் நடத்துவேன்னு சொல்லியிருந்தால்... இவள் கதி என்னாயிருக்கும்? இப்படி கொப்பும், கொடியுமா மதமதன்னு அழகு சிலையா வளர்ந்திருப்பாளா...?''

அதற்கு மேல் தாங்க முடியாது... அபிராமியை ஓங்கி கன்னம் பழுக்க அறைந்தான், சந்துரு.

## 9

எரிமலையின் வேகத்தோடு பொங்கிய கோபத்தோடு.. சித்தி பானுமதி இருந்த அறைக்கு ஓடினாள் அபிராமி!

தலையணையில் சாய்ந்து அமர்ந்திருந்த பானுமதியின் மடியில் விழுந்து குலுங்கி குலுங்கி அழுதாள்.

பானுமதி ஆதரவாய் அவள் முதுகில் தட்டி கொடுக்க... அவளின் அழுகை இன்னும் அதிகமானது.

''இதுநாள் வரை கை நீட்டி அடிக்காத மனுஷன்... அந்த படுபாவி ஜனனிக்காக பரிஞ்சிட்டு... என்னை அறைஞ்சிட்டாரே, சித்தி!''

''யார் அடிச்சா... உன் புருஷன் தானே? பொறுத்து போம்மா, அபி!''

''எதுக்கு சித்தி பொறுத்தப் போகணும்! ஒழுக்கம் கெட்டு ஊரை சுத்திட்டு வந்த கழுதை.. அவ்வளவு உயர்வு! அது சொல்லே வேதம்! தொட்டு தாலிகட்டிய பொண்டாட்டி அவ்வளவு கேவலமா? இந்த

''நாளைக்கு தலைவருக்கு டிரைவிங் டெஸ்ட்டாம்... கணக்கு வாத்தியார் யாரையாவது கூட்டிட்டு வரச்சொல்றார்!''


''எதுக்கு?''

''சுலபமா எட்டுப் போடறது எப்படின்னு கத்துக்கத்தான்!''

-வீ.விஷ்ணு குமார்,
கிருஷ்ணகிரி.







மனுஷனை முன்னேற்றினேனே அது என் குற்றமா? தங்கச்சி ஒரு வாத்தியாரை வளைச்சி போட்டுட்டு வந்திருக்கான்னதும்..... இவர் வாயைப் பிளந்துட்டாரே!''

''அபிராமி.. இப்படியெல்லாம் மாப்பிள்ளையை தரக்குறைவா பேசாதே! நீங்க மூணு பேரும் பேசியதை கேட்டுட்டுதான் இருந் தேன்! ஜனனி அந்த ஹரிமேல ஆசைப்பட்டுட்டு வந்தது குற்ற மில்லே! அந்த ஹரிக்கு தங்கையை மணமுடிக்க... மாப்பிள்ளை நினைக்கறதும் தவறில்லை!''

'' என்ன சித்தி நீங்களும் அவருக்கு சாதகமா பேசறீங்க?''

''இது சாதகமா பேசறதில்லை, அபி! நியாயத்தைப் பேசறேன்!'' பானுமதி கூற...

''அப்போ என் தம்பியோட ஆசை...?''

''ஜனனி மேல ஆசைப்பட.. உன் தம்பிக்கு என்ன தகுதியிருக்கு?''

''அவர் போலவே நீங்களும் பேசாதீங்க! பெத்த தாய் போல பேசுங்க!'' என்று சுள்ளென்று பேச....

''புள்ளைன்னு வரும்போது பெத்த தாய்ன்னா நியாயம் தவறி பேசணுமா, அபி?''

''பத்தாவதைத் தாண்டலே! நல்ல வேலைன்னு எதுவுமே யில்லை! என்கிட்ட பேசும் போதே பாதி நாள் போதையில பேசு வான்! செவ்வந்தின்னு ஒரு குட்டி வீட்டுக்கு போறதா செய்தி! அந்த குடும்பம் காசுக்காக சதையை விக்கற குடும்பமாம்! இவனைப் போல பணக்கார பசங்க கிடைச்சா.. கிடைக்கறதை சுருட்டிட்டு வெளியே அனுப்புற வேசி ஜாதியாம்!...

இப்படி வினோத் மேல குறைகளை அடுக்கிட்டே போகலாம்!''

''இந்த காலத்துல வயசு பசங்க இவனைப் போலதாம்மா இருக்கு! நல்லவளா பார்த்து கட்டிவச்சா அடங்கிடுவானுங்க! வினோத்தை இந்த ஜனனி குட்டி அடக்கி கைக்குள்ளே வச்சிக்குவா! உன்னையும் கண்ணும் கருத்துமா.. அன்பா பார்த்துக்குவான்னு ஆசைப்பட்டா... அவளோட போக்குக்கே இந்த மனுஷனும் பேச றாரே!''

''வினோத்துக்கு வேற பெண்ணைப் பார், அபிம்மா! வினோத்துக் காக உங்க குடும்பத்துல சண்டை வர வேண்டாம்! உன் வாழ்க்கையை பாழ் பண்ணிக்க வேண்டாம்!''

''இல்ல சித்தி! நானா..? இந்த ஜனனி குட்டியான்னு ஒரு கை பார்த் துடணும்!'' ஆவேசமாய் கூற....

''என்ன செய்ய முடியும் அவங்க ரெண்டு பேரை எதிர்த்துட்டு?''

''நான் இவரோட வாழமாட்டேன், சித்தி!''

''ஐய்யோ அபி! இப்படியெல்லாம் பேசாதம்மா!'' பானுமதி கண் கலங்கினாள்.

''விடியட்டும்.. வினோத்தை வரவழைக்கிறேன்!''



''எதுக்கும்மா?''

''நீ, நான், என் பிள்ளையோட நம்ம கிராமத்துக்கு போகத்தான்!''

''வேண்டாம், அபி! இது விபரீதமான முடிவு!

இதனால் பாதிக்கப் போறது நீ, உன் புருஷன், பிள்ளைதான்! தம் பிக்கு பரிஞ்சிட்டு உன் வாழ்க்கையை நரகமாக்கிக்காதே! சொல்றதை கேளு, அபி! ஜனனி விருப்பப்படி அந்த ஹரியையே மணந்துக்கட் டும்!''

''இல்லே, சித்தி! நான் முடிவெடுத்தா திரும்ப மாத்திக்க மாட் டேன்! நான் இனி இவரோட வாழமாட்டேன்!''

''சே... அபி என்ன பொண்ணுடி நீ? நல்லது எது? கெட்டது எதுன்னு தெரியாதா? நீயே உன் தலையில தணலை வாரிக் கொட் டிக்குவியா? '' என்று குற்றம் சாட்ட...

''இனி நான் யார் சொன்னாலும் கேட்கமாட்டேன்!'' என்று அபிராமி முடிவாய் சொல்லிவிட.. பானுமதி எதுவும் சொல்ல முடியாமல் கலங்கினாள்.

ஜனனி ஹாலில் மூலையில் முடங்கி அழுதுக்கொண்டிருக்க... உள்ளே அபிராமி வீறிட்டுக் கொண்டிருக்க.. சந்துருவின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பானது!

ஜனனி அருகே வந்தான். அவள் தலைக்கோதி...

''ஜனனி.. சத்யன் நம்ம சண்டையைப் பார்த்து பயந்து போய் இருக்கான். அவனை சாப்பிட வை! நீயும் சாப்பிடு! நான் அபிரா மியை சமாதானம் செய்து கூட்டுட்டு வரேன்!''

''அண்ணா.. என்னால் உங்களுக்குள்ளே தகராறு வருவதை என்னால தாங்கிக்கவே முடியலண்ணா!''

''ஜனனிம்மா..''

''அண்ணி சமாதானம் ஆவாங்களா? என்னை ஹரியோட சேர்த்து வைப்பாங்களா?''

''தலைவருக்கு வர வர ஞாபக மறதி அதிகமாயிடுச்சு''

''எப்படி?''

''திடீர்னு மேடையிலே கூட் டணி கட்சி பெயர்களையே மாத்தி சொல்லிடுறார்''.

-செல்வராஜா, சேலம்.



''உனக்கு அந்த பயம் வேண்டாம்! அண்ணியை சமாதானப்படுத்தி... உனக்கும், ஹரிக்கும் ஜாம் ஜாம்ன்னு திருமணம் செய்து வைக்கறேன்!....

நீ எதுக்கும் கலங்காதே! போய் சாப்பிடும்மா! வேலையைப் பார்ம்மா!''

விதி சந்துருவின் சொல்லைக் கேட்டு... கோரப்பல் நீட்டி கொடுரமாய் சிரித்தது.

## 10

சந்துரு கதவைத் தட்ட.. அபிராமி திறக்கவில்லை!

''அபிராமி.. அபி... ஏய் அபி... கதவை திற...'' சந்துரு எவ்வளவு கத்தியும் அவள் மனமிரங்கி கதவைத் திறக்கவில்லை!

பானுமதிக்கு மனசெல்லாம் துடித்தது!

அபிராமி செய்வது தவறு என்று தெரிகிறது!

ஆனால், அபிராமியைத் தட்டிக் கேட்க முடியவில்லை!

நாணலானால் வளைத்துவிடலாம். ஆனால் அபிராமியோ நன்கு காய்ந்த மூங்கில்! லேசில் வளையமாட்டாள்!

சந்துரு தட்டித் தட்டிப் பார்த்து... கால் கடுக்க நின்றும் அபிராமி கதவு திறக்காமல் போக... ஷோபாவில் வந்து பொத்தென்று விழுந்தான்.

அவனுக்கு அபிராமியின் செயல் ஏகப்பட்ட வெறுப்பை ஏற்படுத்தியது.

'ஜனனியின் வாழ்க்கையில் தலையிட அபிராமிக்கு என்ன உரிமையிருக்கிறது!

நேசிச்ச இரண்டு உயிரை அநியாயமாய் பிரிப்பது தவறு என்று தெரியாத மூடாத்மாவா இந்த அபிராமி!

அபிராமியின் ஒவ்வொரு செயலுக்கும் தலைத் தாழ்த்தி.. செவிமடுத்து.. பேசாமல் போனது.. எவ்வளவு விபரீதத்தை இழுத்து விட்டுவிட்டது!'

வினோத்தை அவனுக்கே அவ்வளவாய் பிடிக்காது! ஜனனிக்கு எப்படி பிடிக்கும்?

அயோக்கியனை நம்பி.. அழகு மயிலான ஜனனியை எப்படி மணமுடித்து வைப்பான், சந்துரு?

ஒரு நொடிக்கூட தனது கொள்கையிலிருந்து... தனது கடமையிலிருந்து தவறக்கூடாது! ஒரு பெண்ணுக்கே இவ்வளவு வீண் பிடிவாதமும், முரட்டு குணமும் இருந்தால்... ஆணுக்கு அதைவிட மட்ட



மாகவா இருக்கும்?

உயிரையே வைத்து வளர்க்கும் தங்கை, ஜனனி! அவளை புதைகுழி.. பாழும்கிணறு விநோத் என்று தெரிந்தே தள்ளிவிட நினைக்கிறானே... அவன் என்ன நிர்மூடமா?

தங்கையின் நல்வாழ்வு அவனுக்கு முக்கியம்!

அதற்காக அபிராமியிடம் இனி கெஞ்சிப் போக பிடிக்கவில்லை. போராடவே எண்ணம் கொண்டான்.

என்ன செய்து விடுவாள், அபிராமி?

நான்கு நாட்கள் அல்லது ஒரு வாரம் பேசமாட்டாள்! முணுமுணுப்பாள்! முகத்தைத் தூக்கிக் கொள்வாள்!

அல்லது பிறந்தகம் செல்லுவாள்!

அவள் அங்கு போனாலும் மீண்டும் திரும்பும் இடம் சந்துரு வீடு தானே!

''அண்ணா சாப்பாடு..'' என்று வந்த தங்கையிடம்..

''நீயும், சத்யனும் போய் படுங்க! நான் உணவை பிறகு பார்த்துக்கிறேன்!''

சந்துரு கண்கள் கலங்கியிருப்பதை கண்ணுற்ற ஜனனியின் நெஞ்சம் உள்ளுக்குள்ளே ஊமையாய் அழுதது.

சந்துரு வெகு நேரம் கண்களை மூடியமர்ந்திருந்து விட்டு.. நள்ளிரவுக்கு மேல் எழுந்து, தன்னறைக்கு சென்று பூட்டிக் கொண்டதை.. ஜனனி நீர்வழியும் கண்களோடு நோக்கிக் கொண்டிருந்தாள்.

விடிய விடிய தலையணையை நனைத்தாள்.

தன்னுடைய திருமண வாழ்க்கையால்.... அண்ணாவின் வாழ்க்கை நரகமாகிவிடுமோ என்ற பயம் மனதில் பொங்கி பொங்கி வழிந்துக் கொண்டிருந்தது!

ஊரே தூங்கிக் கொண்டிருக்க.. அந்த வீட்டு மனிதர்கள் மட்டும் தூங்காமல் நெடியப் பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

ஜனனி மிதமிஞ்சிய பயத்தில் நடுங்கிக் கொண்டும்..

அபிராமி அதிகமான சினத்தோடும்...

சந்துரு வேதனையான மனத்தோடும் என்று!

விடிந்தது!

ஜனனி எப்போதும் போல எழுந்து வேலை செய்தாள்.

முகம் வீங்கியிருந்தது. உடல் பலகீனமாய் இருந்தது. ஆனாலும் சமாளித்து காலை டிபனை முடித்து... அண்ணா, அண்ணியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டே... சத்யனை குளிக்க வைத்து.. யூனிபார்ம் அணிவித்து.. உணவு கொடுத்து முடித்தாள்.

எட்டரை மணிவாக்கில் அபிராமி எழுந்து ஹாலுக்கு வந்தாள். ஜனனி பானுமதியை நோக்கி உள்ளேப் போக...

''ஏய்... அங்கே போகாதே! என் சித்திக்காக நீ.. இனி ஒரு துரும்பை கூட கிள்ளிப் போட வேண்டாம்!'' என்று கத்தியவள்

போனை எடுத்தாள். நெம்பரைத் தட்டினாள்.

''வினோத்... நீ உடனே உன் நண்பனோட காரை எடுத்துட்டு வா!''

''அக்கா எதுக்கு? நான் வேலையா இருக்கேன்! மாலை வரேனே! எதுக்கு கார் எல்லாம்?'' என்று கேள்வி கேட்ட வினோத்திடம் சீறினாள்.

''உனக்கு அரைமணி நேரம் டயம் தரேன்! உடனே நீ புறப்பட்டு வந்து சேர்!'' கட்டளையிட்டாள், அபிராமி.

சந்துரு அறையிலிருந்து வெளிப்பட்டு....

''அபிராமி.. வினோத்தை எதுக்கு அழைக்கறே? இது நம்ம வீட்டு விஷயம்! பேசித் தீர்த்துக்கலாம்! இதை வீணா பெரிசுப்படுத்தாதே!''

''நான் சொல்றது காதுல விழலையா? ஏய் அபிராமி.. உன் மனசுல என்னதான்டி நினைச்சுட்டு இருக்கே?''

அவள் பேசாமல் தோட்டத்துப் பக்கம் போனாள்...

''அபிராமி வினோத்தை எதுக்கு வரவழைச்சே?''

'' உங்ககிட்ட அதைச் சொல்லணும்ன்னு அவசியமில்லை!''

''புருஷன்கிட்ட பேசறாப் போலவா பதில் சொல்ற?''

''நீங்க ஒரு நல்ல புருஷன் மாதிரியா நடந்துகிறீங்க?''

சண்டைக் கோழியாய் அபிராமி சிலுப்ப..

''நீ என்ன கத்தினாலும்.. அநியாயம் செய்தாலும்.. உனக்கு பணிந்து போனேன் பார்! எனக்கு இதுவும் வேண்டும்! இன்னமும் வேண்டும்!.... முட்டாள் மாதிரி இடத்தைக் கொடுத்தேன்! மடத்தையே நீ பிடிச்சிட்டே! எல்லாமே உன் தப்பில்லை.. என் தப்பு தான்! என் புத்தியைத் தான் எதாலாவது அடிச்சிக்கணும்!''

சந்துரு விரக்தியோட பேசினான்.

ஜனனி இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொங்கி வந்த அழுகையை கட்டுப் படுத்திக் கொண்டாள்.

சத்யனுக்கு தேவையான புத்தகத்தை பையில் அடுக்கினாள். மதிய உணவு பையை தயார் செய்து...

சத்யனை பள்ளிக்கு அனுப்பி வைக்க வெளி வாசலுக்கு வர...

அபிராமி ஓடி வந்து வெடுக்கென்று சத்யனைப் பிடித்து இழுத்தாள்.

''ஏய் சத்யா.. நீ பள்ளிக்கு போக வேண்டாம்டா! இன்னும் கொஞ்ச நேரத்தில் நாம் ஊருக்கு போறோம்! வாடா என் கூட!'' என்று குழந்தையை இழுக்க.. அவன் அழுதான்.

''அண்ணி.. என்ன சொல்றீங்க? ஊருக்கு போகப் போறீங்களா..?''

ஜனனி அதிர்ச்சியோடு கேட்டு அழ... அபிராமி பதில் பேசாமல் தன்னறைக்கு செல்ல...

''ஏய் அபிராமி.. உன் மனசுல என்னடி நினைச்சுட்டு இருக்க?''



சந்துரு அருகே வந்து கத்தினான்.

''ஜனனி வாழ்க்கையில குறுக்கிட நீ யாருடி? அவ வாழ்க்கை.. அவளுக்கான மணமகனை அவளே முடிவெடுத்ததுல என்ன தப்பு? என் தங்கை ஒரு தப்பானவனை தேர்ந்தெடுக்க மாட்டாள்! தங்கையே ஆனாலும் அவள் வாழ்க்கையில குறுக்கிட அண்ணனான எனக்கே உரிமையில்லை! உனக்கு எங்கிருந்து வந்தது உரிமையும்.. அதிகாரமும்?

இந்தப் பிரச்சனையை பெரிசு பண்ணிட்டு.. நம்ம வாழ்க்கையை அழிச்சிடாதே!.....

குழந்தை தாங்க மாட்டான்! குழந்தை மனசுல ரணத்தை ஏற்படுத்திடாதே! போ... போய் உன் வேலையைப் பார்!''

அபிராமி சந்துரு சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாமல் ஒரு பெரிய பெட்டியை எடுத்தாள். அதில் அவள் உடைகளை அடுக்கினாள்.

''அபிராமி.. என்ன செய்யறே?''

கேட்ட கணவனை எரித்து விடுவது போல பார்த்தாள். இது என் வாழ்க்கை! முடிவெடுக்கற உரிமையையும் அதிகாரமும், கடமையும் எனக்கிருக்குத்தானே? நான் இனி ஒரு பொழுது உங்க கூட வாழமாட்டேன்!''

அபிராமி சொல்ல... சந்துரு அதிர்ந்தான்.

''இங்க பாரு அபி.. முட்டாள்தனமா முடிவெடுக்காதே! எதுக்கும் எதுக்கும் முடிச்சி போடறே? வேண்டாம் அபி! இது நல்லதில்லை!''

''நான் சரியாத்தான் முடிவெடுக்கிறேன்! என்னோட பேச்சுக்கு இங்கே மதிப்பில்லை! அப்புறம் எதுக்கு நான் இங்க இருக்கணும்?''

அபிராமி வீம்போடு கேட்க...

''ஜனனியோட மனசு, ஆசை, எண்ணம், விருப்பத்துக்கு நீ மதிப்பளிக்கணுமில்லையா? பேச்சை விட மனசு தானே முக்கியம்? ஏன்

''ஐந்து பேர் ப்து நாளில் கட்டின ஒரு வீட்டை, பத்து பேர் எத்தனை நாளில் கட்டி முடிப்பர்?''

''ஏற்கனவே கட்டின வீட்டை ஏன் சார் மறுபடி கட்டணும்?''

-எம்.அசோக்ராஜா,
திருச்சி.



அபி... மனசுக்கு பிடிச்சாதானே அவனைக் கட்டிட்டு நிறைவா வாழ முடியும்! ஜனனி பிடிக்கலேன்னு சொல்லும் போது என்ன செய்வது? அவளுக்கு பிடிச்சவனைத்தானே மேரேஜ் பண்ணி வைக்கணும்?...

என் தங்கைக்கு தாயா.. தகப்பனா இருந்து நான் வளர்த்திருக்கேன்! அவள் மனசை கொன்னுட்டு உன் ஆசைக்கும், வார்த்தைக்கும் மதிப் பளித்து.. நான் தலையாட்டினால்... காலம் முழுக்க கதறி கண்ணீர்வி டப் போவது என் தங்கையாச்சே!....

ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணோட மனசு புரியாதா...? அவள் ஆசை புரியாதா? அவள் எண்ணம் புரியாதா...? சொந்த அண் ணியே இப்படி அநியாயம் செய்யலாமா...?

உன் புருஷனோட பேச்சுக்கும் கொஞ்சம் மதிப்பு கொடேன், அபி! சேணம் பூட்டிய குதிரையா ஒரே பாதையில... அதுவும் முரட்டு பாதையில போகாதே, அபி!''

''மனைவி சொல்லுக்கு நீங்க மதிப்பளிச்சீங்களா..?''

''இது ஜனனி சம்பந்தப்பட்ட விஷயமல்லவா..? வேற ஏதாவது நம்ம விஷயத்துல... நான் உனக்கு மதிப்பளிக்காமல் போன துண்டா...? உன் மனசைத் தொட்டு சொல்லு, அபிராமி?''

அபிராமி பதில் சொல்லவில்லை!

''அபி... சொல்றதை கேளுடா! இந்த ஒரு விஷயத்துல விட்டுக் கொடுடா! உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியாதும்மா! அபி... அபி.. பிளீஸ்''

அவளிடம் மிஞ்சினால் தனது செயல் பலிக்காது என்று உணர்ந்து கெஞ்சினான், சந்துரு.

''அபி ராத்திரி சாப்பிடாதது களைப்பா இருக்கு! கண்ணெல்லாம் இருட்டறாப் போல இருக்கு! வா அபி.. வந்து டிபன் போடு!''

அவன் அவளின் கைப்பற்ற... அபிராமி எரிச்சலுடன் அந்தக் கையை உதறினாள்.

சந்துரு கோபமானான்!

சத்யனின் உடைகளையும் அவள் எடுத்து வைக்க.. கோபம் உச் சந்தலையில் ஏறியது.

''ஏய்.. நீ போகத்தான் போறீயா?''

''ஆமா!'' ஒற்றைச் சொல்லில் திமிராய் பதிலளிக்க...

''அப்படின்னா நீ மட்டும் போ! என் பிள்ளையை என்னிடமே விட்டுட்டுப் போ!''

''அது என்ன என் பிள்ளை? அவன் எனக்கும் தானே பிள்ளை?'' என்று அபிராமி சீற...

''நான் இல்லேன்னா அவனை நீ பெத்திருக்க முடியுமா?''

''அதையே நான் திருப்பி கேக்கறேன்! நான் இல்லேன்னா இவனை நீங்க உருவாக்கியிருக்க முடியுமா?''

சந்துரு அபிராமியின் கேள்வியால் வாயடைத்துப் போனான்.



அவளிடம் இனி கெஞ்சுவது வீண் என்று உணர்ந்து சோகமே உரு வாய் வந்து ஷோபாவில் அமர்ந்தான்.

வினோத் கொஞ்ச நேரத்தில் வந்தான்.

''என்ன அப்படி ஒரு அவசரம்? என்னக்கா பிரச்சனை?''

''வீட்டுக்கு போகலாம்டா! கார் எடுத்துட்டு வந்தியா?''

''ம்கூம்! சரி சொல்லு? அத்தானுக்கும், உனக்கும் என்ன பிரச் சனை?''

அவன் கேட்க.. அபிராமி அழுகையோடு சொன்னாள்.

''ஜனனியை உனக்கு கட்டி வைக்க கேட்டேன்!''

''அதுக்கென்ன?''

''மறுத்துட்டார்!''

''என்ன காரணம்?''

''இவள் ஹரின்னு ஒரு பயலைக் காதலிச்சுட்டு வந்திருக்கா. அவன் வாத்தியார் வேலைப் பார்க்கறானாம்! அவனைக் கட்டி வையுங்கன்னு கேட்க... சரின்னு சொல்லி இவரும் அருமை தங் கையை கொஞ்சறார்! என் பேச்சுக்கு மதிப்பு கிடைக்காத இடத்துல நான் எதுக்கு இருக்கணும்?''

வினோத் அந்த செய்தி கேட்டு அதிர்ந்தான்.

'ஜனனி ஒருவனை காதலிக்கிறாளா? அவனுக்கே திருமணம் செய்து வைக்க அத்தானும் சம்மதிக்கிறாரா?'

'அப்போ.. ஜனனி என்ற பூந்தோட்டம் எனக்கில்லையா?'

'அந்த அழகான மெல்லிடைக்கு சொந்தக்காரன் நானில்லையா?'

'அந்த ஆப்பிள் கன்னத்தையும்.. மீன் விழிகளையும் இன்னொரு வன் சொந்தம் கொண்டாடி ரசிக்கப் போகிறானா?'

'அந்த சிப்பி உதடுகளையும் வாளிப்பான சந்தன மேனியையும் இன்னொருவன் தொட்டு, கட்டி... சுகம் பெறப்போகிறானா?'

வினோத்தின் கண்களில் குரோதம் வந்தது!

வினோத்தின் நெஞ்சினில் நெருப்பு சுழன்று சுழன்று எரிந்தது!

ஜனனியை விழிகளில் கோபமேற்றி வினோத் முறைக்க... அவள் அந்த விழிகளில் பொங்கி எழுந்த அனலில் வாடிவிட்டாள்!

11

கார் வந்தது.

சந்துரு கெஞ்சக் கெஞ்ச...

ஜனனி காலை கட்டியழ...

அபிராமியோ காலை உதறிக் கொண்டு... குழந்தையோடு போய் காரில் அமர்ந்தாள்.

பானுமதி எவ்வளவு கெஞ்சியும், மறுத் தும்... அதை கண்டு கொள்ளாமல்... வினோத் கோபத்தோடு தாயைத் தூக்கி வந்து பின் சீட்

டில் கிடத்தினான்.

சந்துரு எவ்வளவு எடுத்து சொல்லியும்... வினோத்தின் காதிலும் ஏறாமல் போனது!

காரணம்...?

ஜனனியை தனக்கு தரமறுக்கிறாரே என்று அளவுக்கதிகமான கோபம் வினோத்துக்கு!

கார் கிளம்பி போயே விட்டது!

சந்துரு போய் தன்னறையில் விழுந்தான். ஜனனி அவன் காலடியில் விழுந்து கதறினாள். இரண்டு நாட்கள் கழித்து... சந்துரு கிளம்பி கிராமத்திற்கு சென்றான்.

வினோத் சந்துருவை வீட்டிற்குள்ளேயே விடவில்லை! வினோத்துக்கும் சந்துருக்கும் வாக்குவாதம் முற்றியது! அபிராமி வெளியே வரவேயில்லை!

பெரிய மாமனார் சம்புலிங்கம் வந்து அவன் சட்டையைப் பிடித்து...

''என்னடா வம்பு பண்ண வந்திருக்கீயோ? ஏதாவது பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளிடுவேன், ஜாக்கிரதை!'' என்று மிரட்டினார்.

வினோத், பெரிய மாமனார், அவருடைய இருமகன்கள் அத்தனைபேரும் ஒன்று கூடி சத்தம் போட...

கிராமமே கூடிநின்று வேடிக்கைப் பார்த்தது!

சந்துருவுக்கு மித மிஞ்சிய அவமானம் தாக்க.. அங்கிருந்து திரும்பினான்.

அபிராமி இறங்க மாட்டாள்! அவள் மனம் பாறாங்கல்லுக்கு சமம்! அந்த கல்லில் மோதிக் கொண்டால்... மண்டை உடைந்துதான் சாக வேண்டும்.

அந்த கல்லே கனிந்து என்றாவது வரட்டும் என்று திரும்பினான்.

தனது மகனைக் கூட பார்க்க முடியவில்லையே என்ற வேதனையில் சுருண்டு போனான்.

அத்தனையையும் கொட்டிவிட்டு... ஜனனி முன் கட்டுப்படுத்த முடியாமல் சந்துரு உடைந்து அழ....

தனது காதலின் விபரீதம் உணர்ந்து அவளும் தன் பங்குக்கு விம்மி வெடித்தாள்!

நான்கு நாளில் சந்துரு மனதைத் தேற்றிக் கொண்டு வேலைக்கு சென்றான்.

ஜனனி உண்ணாமல்... உறங்காமல் கவலையில் இளைத்தாள்.

அண்ணனின் வாழ்க்கைக்காக ஹரிகரனின் காதலை விட்டுக் கொடுக்க முடியாமல் தவித்துப் போனாள்.

'என்றும் போல நான் இருந்திருக்கக் கூடாதா?'

'பாழாய் போன காதல் ஏன் என்னுள் நுழைந்தது? இப்படி பெரும் விபரீதத்தை இழுத்துவிட்டு வேடிக்கைப் பார்க்கத்தான்... என்



னுள் நேசம் துளிர்த்ததா?'

'காதல் குற்றமா?'

'நேசிப்பவனை மணமுடிக்க நினைப்பது தவறா?'

'அண்ணி ஏன் என் மனதை புரிந்து கொள்ள வில்லை?'

'அவளும் பெண்தானே?'

'இத்தனை நாள் வாழ்ந்த தாம்பத்ய வாழ்க்கையை என் நேசம் பொருட்டு உடைத்துக் கொண்டு போயிருக்கிறானே! இது நாள் வரை அண்ணனோடு என்ன வாழ்க்கை வாழ்ந்தாள்?'

'அண்ணனையும், என்னையும் புரிந்து கொண்டது அவ்வளவு தானா? மகாராணி போல கட்டளையிட.... அவளை உட்காரவைத்து அத்தனை வேலைகளையும் செய்தேனே! அதைகூட நினைத்து பார்க்கவில்லையே!'

'அல்லது தம்பி என்று வரும் போது நியாயம் தவறி நடக்கிறாளா?'

'அவளுக்கு நாளை ஒரு பெண் பிறந்து... வினோத் போன்ற மாப்பிள்ளைக்கு மணமுடிப்பாளா? அப்போது அவளுக்கு என்று ஒரு யோசனையும், எண்ணமும் இருக்குமே!'

'வினோத் போன்றவனுக்கு தன் பெண்ணை கொடுக்க மாட்டாள்! நாலையும் யோசித்து செயல்படுவாள்!'

ஜனனிக்கு சத்யனின் ஞாபகமாகவே இருந்தது.

ஊருக்கு சென்று பார்க்கலாம் என்று நினைப்பு வரும்போது... கூடவே அண்ணனின் நிலையும் கண்ணில் தெரிந்தது. அண்ணனை விரட்டிய வினோத்... அவளின் கையை காலை கட்டி தூக்கிப்போய்... அவள் கற்பை சூறையாடி... அவனையே மணக்க வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்துவான்.

அண்ணி அந்த கொடூரச் செயலுக்கு துணையும் போவாள்!

பிப்ரவரி மாதம்... தேர்வு நெருங்கும் சமயம் என்பதால் காலை, மாலை மாணவிகளுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வைத்து சந்தேகங்களை

''மன்னர் போருக்குப் போகும் போது ராணியையும் அழைச்சிட்டுத்தான் போவேன் என்று அடம் பிடிக்கிராரே ஏன்?''

''புறமுதுகிட்டு ஓடி வரும் போது ராணி துரத்தினால்தான் மன்னருக்கு வேகமாக ஓடிவர முடியுமாம்!''

-என். குணசீலன்,
பட்டுக்கோட்டை.



நிவர்த்தி செய்தான், ஹரி.

மாணவிகளை பிராக்டிகல் எக்ஸாமுக்கு தயார் செய்தான். அந்த நாளும் வர அவனால் நான்கு நாட்களுக்கு எதையும் நினைத்துகூட பார்க்க முடியவில்லை.

ஜனனியை சந்திக்க கோயிலுக்கோ... பூங்காவுக்கோ போக வில்லை! ஜனனியும் தனது இக்கட்டான நிலையை அவனுக்கு போன் செய்து சொல்லி... அவனை வருத்தப்பட வைக்க மனதில்லை!

அவனைப் பொருத்தவரை அவனைச் சார்ந்தவர்களோ... சாராத வர்களோ... எல்லோரும் சந்தோசமாய் இருக்க வேண்டும். யாருக்கு இன்னல் என்றாலும் மனம் நொந்து போவான்.

ஜனனி எல்லோரையும் விட ஒருபடி மேலேப்போய் அவனை உயிராய் சுவாசிக்கும் பெண்ணல்லவா....? அவனின் தூய்மையான நேசத்துக்கு உரியவளல்லவா....? அவனின் நெஞ்சில் இருக்கும் தேவதை அல்லவா...?

அவளுக்கு இப்படி ஒரு கெடுதி நடந்து கொண்டிருக்கிறது என்றால்... அவனின் சின்ன இதயம் தாங்குமா....

அன்று...

சந்துரு ஆபீஸ் புறப்பட்டு சென்ற பின்னர்... பாத்திரம் கழுவி... வீடு துடைத்து... துணிகளை துவைத்து உலர்த்தி.... தானும் குளித்து விட்டு உள்ளே வர...

வாசலில் காலிங் பெல் சத்தம் கேட்டது!

ஜனனி கதவைத் திறக்க போஸ்ட் மேன்!

அண்ணா சந்துருவுக்கு வந்திருந்தது, கடிதம்!

அதனை கையெழுத்திட்டு வாங்கிக் கொண்டு உள்ளே வந்து... பிரித்து பார்க்க உலகமே இடிந்து தலையில் விழுந்த கணக்காய் துடி துடித்துப் போனாள், ஜனனி!

பிரபல வக்கீல் மூலமாக அபிராமியிடம் இருந்து வந்த டைவர்ஸ் நோட்டீஸ்!

அப்படியே செய்வதறியாது கண்ணீர் விட்டு கதறினாள். அண்ணன் சந்துருவுக்கு போன் செய்தாள்.

''என்னம்மா விஷயம்?''

''வீட்டுக்கு உடனே வாங்கண்ணா!'' என்று ஜனனி அழுதாள்.

''எதுக்கு அழறே?''

பதில் சொல்ல முடியாமல் ஜனனி போனை வைத்தாள்.

அடியாட்களோடு வந்து வினோத் ஏதாவது அவளிடம் தகராறு செய்கிறானோ என்று கூட சந்துரு பயந்தான்.

விடுப்பு பெற்று வீட்டிற்கு வர... யாருமற்று தனியே தங்கை அமர்ந்திருக்க நிம்மதியானான் சந்துரு.

டைவர்ஸ் நோட்டீஸை ஜனனி நீட்ட... வாங்கிப் பார்த்த சந்துரு பேரதிர்ச்சிக்கு ஆட்பட்டான்.



''ஜனனி... ஜனனி என்னம்மா இது? என்ன நடந்துவிட்டது? ஏன் இப்படி ஒரு காரியத்தை அந்த அறிவு கெட்டவள் செய்திருக்கா? வரதட்சணை கொடுமையா? மாமியார், நாத்தனார், கொடுமையா? செக்ஸ் கொடுமையா? என்னம்மா செய்தோம்? ஏன் இந்த அபிராமி அநியாயத்துக்கு அழும்பு பண்றா?...

யானை தன் தலையில மண்ணையள்ளிப் போட்டுக்கிறாப்பல இவளுக்கு ஏன் இந்த புத்தி கெட்ட தனம்?'' என்று கத்திய சந்துரு... பின்னர்...

''ஏன் என் வாழ்க்கை நங்கூரம் இடாத கப்பலாகிப் போனது, ஜனனி?'' என்று கண்ணில் நீர் மின்ன.. நாதழுதழுக்க கூறினான்.

''நான் போய் அவளை நேரே பார்த்து... என்ன கொடுமை செய்தேன்னு கேட்டுட்டு என் பிள்ளையை அவகிட்ட இருந்து பிடுங்கிட்டு வரேன்!'' என்று கோபமாய் கத்த...

''அண்ணா... அப்படியெல்லாம் செய்துடாதீங்க! இது வாழ்க்கைண்ணா... முள்ளுமேல சேலை பட்டாபோல இக்கட்டான நிலையாயிடிச்சி! சேலை கிழியாமல் மெல்ல மெல்ல தான் எடுக்கணும். சேலைக்கும் பாதகம் இல்லாமல் முள்ளுக்கும் பாதகம் இல்லாமல்!''

அபிராமியைத் தான் தங்கை முள் என்கிறாள் என்று புரிந்தது.

''தாயையும், பிள்ளையையும் பிரிக்கிறது பாவம்ண்ணா! தாய், தகப்பனற்ற வாழ்க்கை கொடுமை! அது நமக்கு தெரியும் தானே! தாயன்பு புனிதமானதுண்ணா! அந்த புனிதமான அன்பு கிடைக்காமல் போனால் சத்யன் ஏங்கிடுவான்! தாயன்பு இல்லாமல் மனிதனோ... விலங்கோ.. வாழ்ந்தால் அது காய்ந்துபோன பாலைவன வாழ்க்கை!''

''எனக்கென்னவோ அபிராமி திருந்துவான்னு தோணலேம்மா!''

சந்துரு மிதமிஞ்சிய விரக்தியாய் சொல்ல...

''ஆமாண்ணா! நீங்க சொல்றது ஹண்ட்ரட் பர்சன் சரிதான்! எதிராளி திருந்தணும்...ஒதுங்கி போகணும்னு ஏன் நாம்ம பார்க்கணும்? நாம் திருந்திடலாமே!''

''அப்போ... அப்போ... அவள் விருப்பத்துக்கு தலையாட்டினாத் தான் அவள் திருந்துவா! அப்படி ஒரு கேவலமான செயலுக்கு நாம துணைப் போகணுமா, ஜனனி?''

மனதை கல்லாக்கி... கண்ணீரைத் துடைத்து சொன்னாள் ஜனனி...

''செய்தா என்ன தப்பு?''

''என்ன ஜனனி சொல்றே?'' சந்துரு அதிர்ந்தான்.

''அபிராமி திருந்தணும்ன்னால்... நீ வினோத்தை மணக்கணும்! அது உன்னால் முடியுமா?''

''உனக்காக... உன் நல் வாழ்வுக்காக... சத்யனுடைய எதிர்காலத்துக்காக.. நான் என் நிகழ்காலத்தை இழக்கறதைத் தவிர வேறு வழியில்லேண்ணா!'' என்று கண்ணீர் சொட்டியவளிடம்...

''அப்படி ஒரு முட்டாள்தனம் செய்ய வேண்டாம், ஜனனி! நீ உன்

மனசை வித்து... எனக்கு மகிழ்ச்சியை வாங்கித் தர வேண்டாம், ஜனனி! உயிருக்குயிரான காதலர்கள் பிரிவது எத்தனை வேதனையான விஷயம் தெரியுமா? நீயும், ஹரியும் என் பொருட்டு பிரிய வேண்டாம்! ஹரிக்கே உன்னை மணமுடித்து வைக்கிறேன்! நீ போய் சந்தோசமா இரு!....

அபிராமி இன்றல்ல... நாளையோ... நாளைய மறுநாளோ நான்கு ஆண்டு கழிந்தோ.. நாற்பது ஆண்டு கழிந்தோ.. அல்லது என்னை நான்கு பேர் தூக்கிக் கொண்டு போகும் போதோ...என்னைப் புரிந்து வருவாள், ஜனனி!''

''ஐய்யோ அண்ணா... என்ன பேசறீங்க?''

சந்துருவின் வாய் பொத்தினாள். கண்களில் வழிந்த அருவியை துடைத்தாள்.

''நீ வேதனையோட வாழும் போது... எனக்கு வியாக்கினமான வாழ்க்கை தேவையா? நான் ஹரிகிட்ட பேசப்போறேண்ணா! என்னை மறந்துடச் சொல்லி கெஞ்சப்போறேண்ணா! வேறு பெண்ணை மணந்துக்கங்கன்னு கைதொழுது கதறப்போறேண்ணா!''

''ஜனனிம்மா.. அப்படி ஒரு காரியத்தை செய்துடாதேடா! அப்புறம் உனக்கும், அபிராமிக்கும் என்ன வித்தியாசம்? ரெண்டு பெண்களுமே எதாவது ஒரு விதத்துல ஒரு ஆணைக் கொல்றீங்க தானே? அவள் கணவனைக் கொல்லப் பார்க்கறா! நீ காதலனை உயிரோடு குழிதோண்டி புதைக்க புறப்படறே! அப்புறம் அந்த ராட்சசிக்கும்... உனக்கும் என்ன வித்தியாசம்....?''

சந்துரு கத்தினான்.

''உன்னால என் வாழ்க்கை அழியறதா தப்புக் கணக்கு போடாதே! அபிராமி இத்தனை நாட்கள் என்னோட வாழ்ந்ததுக்கு காரணம்... என் விட்டுக் கொடுக்கும் குணத்தால் தான்!....

என் சுய கௌரவம்.... என் சுயமரியாதை.. என் சுயபச்சாதாபம்.. எல்லாத்தையும் விட்டுக் கொடுத்த நான் என் உயிராய்.. உணர்வாய்..

''உன்னை பொண்ணு பார்க்க வந்தப்போ காப்பி குடுத்தியே என்ன ருசி தெரியுமா!''

''அந்தக்காப்பியைத் தான் அன்னிக்கே நீங்க குடிச்சிட்டீங்களே!''

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.





என் சுவாசமாய்.. என் தாயாய் நேசிக்கும் தங்கையின் மகிழ்ச்சியை அந்த பொல்லாத அரக்கிக்காக விட்டுக் கொடுக்க தயாரில்லே, ஜனனிம்மா! கட்டாயமாய்!''

சந்துரு திட்டவட்டமாய் சொன்னான்.

ஜனனிக்கு அண்ணனின் பாசம் கண்டு ஒருபுறம் பெருமையாகவும் இருந்தது.. மறுபுறம் அந்த அளவு கடந்த பாசத்தால் அண்ணன் தனது பிரியசகியையும், பிள்ளையையும் பிரிய வேண்டியிருக்கிறதே என்று கலங்கினாள்.

''ஜனனி... என் நல்வாழ்வை நாடும் உனக்காக... கடைசியாய் ஒரு முயற்சி செய்து விடுகிறேன்! இன்னும் இரண்டு நாள் போகட்டும்! ஊருக்கு போறேன்! இப்போது போனால் இந்த நோட்டீசுக்கு பயந்ததாய் எண்ணிவிடுவார்கள்!'' என்று சந்துரு சொல்ல...

ஜனனியின் கண்களிரண்டும் மீன் குஞ்சுகளாய் கண்ணீரில் மிதந்தன.

## 12

அண்ணன் சந்துரு வெளியே போன சமயம்... ஜனனி ஹரியை சந்திக்க நேரே பள்ளிக்கே வந்துவிட்டாள். வெளியே கேட்டருகே நின்றுக் கொண்டு அங்கு வந்த மாணவியிடம் ....

''உங்க கெமிஸ்டரி சார்கிட்ட ஜனனியக்கா வந்திருக்கேன்னு சொல்றீயாம்மா?''

''சரிக்கா'' என்று அந்த மாணவி உள்ளே ஓடினாள்.

''மதிய இடைவேளை முடிந்து... ஹரி பனிரெண்டாம் வகுப்புக்கு சென்று கொண்டிருந்தான். அந்த மாணவி வந்து செய்தி சொல்ல...

நேரே ஹெட்மாஸ்டரிடம் சென்று அரைநாள் விடுப்பு எழுதி கொடுத்துவிட்டு வெளியே வர...

ஜனனி களையிழந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள். ஹரியைக் கண்ட ஜனனியின் கண்கள் சட்டென்று பனித்தது.

ஹரி பதறி ''ஜனனி என்னடா? ஏன்டா?'' என்று உயிர்ப்புடன் கேட்க.. ஜனனி நடுரோடு என்று பாராமல் விம்மிவிட்டாள்.

''ஜனனிம்மா.. கண்ட்ரோல்டா! யாராவது பார்த்தால் நம்மை தப்பா எடுத்துப்பாங்க! நீ வண்டியில உட்கார்! பூங்காவுக்கு போகலாம்!''

பூங்காவில் நிழல் தேடி அமர்ந்தார்கள்.

நீரூற்றாய் பொங்கிய அழுகையை ஜனனி கட்டுப்படுத்தியும் கட்டுக்கடங்கவில்லை!

விம்மினாள்! வீறிட்டாள்! வெடித்தழுதாள்!

ஹரி அவள் அழட்டும் என்று நெஞ்சு பதைக்க காத்திருந்தான்!

ஒரு கட்டத்துக்கு மேல் அவளின் அழுகை நின்றது. தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள், ஜனனி.

''சொல்லு ஜனனி? என்ன நடந்தது, வீட்டுல?''

அவன் கேட்டது தான் தாமதம். மடை திறந்த வெள்ளமாய் அழுகையோடு வீட்டில் நடக்கும் செய்திகளைக் கொட்டினாள்.

ஹரியின் கண்களில் மழை!

ஒரு ஆண் அழலாமா? என்று ஒரு கேள்வி அவனிடம் எழுந்தாலும்.. அவன் இதயத்தில் உள்ள இயல்பான சுயபச்சாதாபம் அவனை அழ வைத்தது!

''ஜனனி நான் உன் அண்ணியிடம் பேசிப் பார்க்கட்டுமா...?'' என்றான் விழிநீரை துடைத்துக் கொண்டு.

''கட்டின கணவனுக்கே மதிப்பு கொடுக்காதவங்க!... உங்களுக்கு மதிப்பு கொடுப்பாங்களா, ஹரி? நீங்க போனால் பெருத்த அவமானத்தை சந்திக்கணும்! நீங்க அங்கேயெல்லாம் போக வேண்டாம்!''

''என்ன முடிவெடுக்கப்போறே, ஜனனி?''

''எனக்கு என் அண்ணனோட வாழ்க்கை தான் முக்கியம்!'' ஜனனி தாமதிக்காமல் சொல்ல..

''ஜனனி...'' கத்தினான்.

''அப்போ என் அன்பு....? என் ஆசை...? என் நேசம்..? என் விருப்பம்...? என் வாழ்க்கை...?'' என்று படபடப்பாய் கேட்க...

''ஹரி எனக்கு என் அண்ணாவோட வாழ்க்கை தான் முக்கியம்!'' என்று ஜனனி உறுதியாய் சொல்ல...

''ஜனனி... ஜனனி.. நீ இப்படி பேசறதுக்கு பதிலா.. என்னை சாகடிச்சி போட்டுடு, ஜனனி!''

''ஐய்யோ ஹரி....'' என்று வீறிட்டாள்....


''நான் பெற்றவர்களை இழந்து தவிச்சப்போ.. என்னை தாயா தாங்கிகிட்டவர், என் அண்ணா! என்னை மார்மேலும்... தோள்மேலும் போட்டு வளர்த்த அவரோட வாழ்க்கை, இப்படி மூழ்கிறதை, எப்படி ஹரி பார்த்துட்டு இருப்பேன்? மனம் இதுல சுயநலத்தைதான் விரும்புது!...

நம்ம சந்தோசத்தை விட... அண்ணாவோட மனமகிழ்வைத் தான் விரும்புவது, என் மனம்! நான் என்ன செய்யட்டும், ஹரி?'' என்று ஜனனி அழுதாள்.

''இது அநியாயம் ஜனனி! நீ உன் மனசுக்கு அழகான சமாதி கட்டறே!''

''இருக்கட்டும் ஹரி! இது கூட நான் என் அண்ணாவுக்கு செய்யலேன்னா.. நான் என்ன தங்கை? என் அண்ணாவுக்கு... இப்படி ஒரு நன்றிக் கடனை செலுத்த வாய்ப்பளித்த... அந்த ஆண்டவனுக்கு நன்றி சொல்றேன், ஹரி!''





இப்படி ஒரு பாதகமான முடிவெடுக்கற உனக்கு கொஞ்சம் கூட 'ஈரமனம்' இல்லையா? மனசாட்சி இல்லையா?''

''அண்ணா மேலான நேசத்தின் வயது இருபத்தொன்று! உங்க மேலான நேசத்தின் வயது வெறும் ஆறுமாசம் தான்! எது அதிக நாள் என் மனதில் வேரோடியது?''

''பேசாதே ஜனனி!'' ஹரி கோபமாய் கத்தினான்.

''உங்க கோபம் நியாயம்தான், ஹரி! என்னை மறந்துடுங்க, ஹரி! ஜனனின்னு ஒருத்தியை சந்திக்கலேன்னு நினைச்சுக்கங்க, ஹரி! நான் வெறும் கானல் நீர்.... சரியான ஏமாற்றுக்காரி.. நிறம் மாறும் பச்சோந்தி அப்படின்னு நினைச்சு... என்னை வெறுத்துடுங்க, ஹரி! நீங்க உங்க அக்கா பெண்ணையோ அல்லது யாராவது உங்கள் இதயம் கவர்ந்தவளையோ கட்டிட்டு மகிழ்ச்சியா இருங்க. ஹரி! உங்களை நான் டிஸ்டர்ப் செய்ததுக்கு என்னை மன்னிச்சிக்கங்க ஹரி!...

காதலர்கள் பிரியலாம்! ஆனால் கணவன்-மனைவி பிரியக்கூடாது, ஹரி! ஒரு குடும்பம் பிரிய நாம் காரணமா இருக்கக்கூடாது! நம் காதலால் ஒரு குடும்பம் சிதைந்து சின்னாபின்னமாகக் கூடாது! அதுபாவம், ஹரி! சிறு குழந்தை சத்யனோட எதிர்காலத்தை நினைச்சிப்பாருங்க, ஹரி!''

''என் எதிர்காலம்?'' ஹரி ஆற்றாமையுடன் கேட்க... அந்த கேள்வி அவளின் நெஞ்சை துண்டு துண்டாய் வெட்டியது.

''ஹரி.. '' என்றழைத்து கதறினாள்.

''இறந்தகாலம் தானா, ஜனனி? எப்படி ஜனனி உன்னால் முடியுது... நேசித்தவனோட உயிரை எடுக்க? பெண்கள் ஆக்கத்தான் பிறந்தவர்கள்... அழிக்க பிறந்தவர்கள் அல்ல என்பதெல்லாம் பொய் தானா? வெறும் ஏமாற்று தத்துவம் தானா?''

''ஹரி.. வேணாம், ஹரி! ஏற்கனவே என் இதயம் சில்லுசில்லாய் உடைந்துவிட்டது. இன்னும் சிறுசிறு சில்லாய் உடைக்காதீர்கள்!

''டாக்டர் பேப்பர் படிக்கிற மாதிரியே அடிக்கடி கனவு வருது டாக்டர் ..ஆனால் எழுத்தெல்லாம் தெளிவாக இல்லை டாக்டர்''

''இனிமேல் கண்ணாடி போட்டுக்கிட்டுத் தூங்குங்க!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.





நல்ல பெண்ணாய் மணந்து இன்பமாக வாழுங்கள், ஹரி! நான் வரேன் ஹரி!'' என்று எழுந்து அழுகையோடு ஓட..

''ஜனனி... ஜனனி.. என் இதயம் உன்னிடம் தான் இருக்கு! அதை கொடுத்துட்டு போ, ஜனனி!'' என்று ஹரி உயிர்கரைய சொல்ல...

''ஐய்யோ...'' என்று தலையிலடித்து.. விம்மலோடு ஓடினாள்.

13

சந்துருவிடம் தான் வினோத்தை திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்ததைக் கூறினால் தடுப்பான் என்று ஜனனிக்கு தெரியும்.

நேரே வினோத்துக்கு போன் செய்தாள்.

''அத்தான்.. நான் ஜனனி!''

அவள் குரல் கேட்டது தான் தாமதம்...

''ஜனனியா...? அப்படின்னு யாரையுமே தெரியாது!'' என்று கூறி வினோத் போனைக் கட் செய்தான்.

ஜனனி மீண்டும் முயற்சித்தாள்.

வினோத்.. நான் சொல்றதைக் கேளுங்க! பிளீஸ்...'' ஜனனி கெஞ்ச...

''நீ யாருடி...? உன் சொல்லைக் கேட்கணும்னு அவசியமில்லே! டைவர்ஸ் நோட்டீஸ் பார்த்த இல்ல...? உன் அண்ணாவை எந்த வம்பும் பண்ணாமல் என் அக்காவுக்கு விவாகரத்து கொடுக்க சொல்லுடி! அதை விட்டு இங்கே என் அண்ணியை அனுப்புங்கன்னு கெஞ்சற வேலையெல்லாம் வேண்டாம்!'' என்று வினோத் கடுமையாய் மிரட்ட....

''வினோத்... பிளீஸ்.. நான் சொல்றதைக் கேளுங்க! நா.. நான் உங்களை மணந்துக்கிறேன்!'' மனதை கல்லாக்கிக் கொண்டு சொல்ல...

''ஏய் ஜனனி.. என்ன சொல்றே?'' அவன் மலர்ந்தான்.

''அதைச் சொல்லத்தான் அழைச்சேன்! நீங்க என்னடான்னா தப்பா புரிஞ்சிட்டு..'' என்று விம்மினாள்.

''பொய்யில்லையே! என்னை ஏமாளியாக்கிட மாட்டியே?''

''சத்தியமா.. உங்களை மணந்துக்கிறேன்!

அண்ணிகிட்ட விஷயத்தை சொல்லி அனுப்பி வையுங்க!''

''இது யார் முடிவு? உன்னது மட்டும் தானா?''

''அண்ணாகிட்ட கூட நான் சொல்லல. இனி தான் சொல்லணும்!''

''சந்தோசம் சொல்லு! அரை மணி நேரத்துல நான், அக்கா, சத்யன் என்று மூவரும் உன் முன்னாடி நிற்கிறோம்!''

வினோத்தின் குதூகலம் குரலிலேயே தெரிந்தது. வீட்டிற்கு வந்தாள். படுக்கையில் விழுந்து கொஞ்ச நேரம் அழுதாள்.

எத்தனை அழுது புரண்டாலும்... அவள் இதயத்தில் உள்ள ஹரி

மேலான நேசம் கரையவில்லை! குறையவில்லை!

அண்ணனுக்காக.. தன் காதலை தன் நெஞ்சிலேயே ஆழக்குழித் தோண்டி புதைத்தாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு குளியலறைக்கும் போய் தலையோடு குளித்தாள்.

பீரோவைத் திறந்து ஆகாய நீல வண்ண சேலையை அணிந்தாள். தலைமுடியை நீர்போகத் துடைத்து... அடியில் முடிச்சிட்டு... முதுகு முழுக்க பரவவிட்டாள். லேசாய் முகத்திற்கு ஒப்பனை செய்து ஆளுயர கண்ணாடியில் தனது அழகைக்காண... அப்படியே பிரமித்து விட்டாள்.

'இவ்வளவு மிதமிஞ்சிய கொள்ளையழகை அனுபவிக்க.. வினோத்துக்கு என்ன தகுதியிருக்கிறது? முட்டாள் பெண்ணே!' என்று மனம் சாடியது.

டூவீலரில் அண்ணி, வினோத், சத்யன் மூவரும் வந்து இறங்க... வாசலுக்கு ஓடிய ஜனனி.. சத்யனை அள்ளியணைத்து.. உச்சிமோர்ந்து கண்ணீர் விட்டாள்.

''பேச்சு மாறமாட்டியே, ஜனனி?''

அபிராமி கேட்ட முதல் கேள்வியில் திடுக்கிட்டாள்!

கண்ணீரோடு ''ம்கூம்..!'' என்று தலையாட்டினாள்.

''சரி.. வினோத்தோட பேசிட்டு இரு! நான் போய் காபி போட்டுட்டு வரேன்!''

சொன்ன அபிராமி சத்யனை தூக்கிக் கொண்டு சமையலறைக்கு சென்றாள்.

வினோத் அவளின் மிகையான அழகு முகத்தை, மேனியை கடித்து தின்று விடுபவன் போல பார்க்க.. அந்த பார்வையின் அருவெறுப்பு தாங்க முடியாமல் தலைகுனிந்தாள், ஜனனி!

''ஜனனி...'' என்று புன்னகையோடு அவளின் அருகில் சென்றான். அக்கா வர நேரமாகும் என தெரிந்து...

சட்டென்று அவள் தோள்பற்றி.. நொடிப்பொழுதில் இழுத்து இறுக்கி அணைத்துக் கொண்டான்.

ஜனனி இதை எதிர்பார்க்கவில்லை. அவன் தொட்டவுடன் சாக்கடையில் விழுந்தாற்போல உமட்ட...

''ஐய்யோ.... வேண்டாம்.. விடுங்க!'' என்று திமிறினாள்.

அவளின் திமிறலை லட்சியம் செய்யாத வினோத்... அவள் முகம் தேடி.. அவள் இதழ்களில் முத்திரையைப் பதித்து நிமிர....

அவன் இதழ்களில் வீசிய நிகோடின் துர்நாற்றத்தால் வயிறு உமட்ட... 'ஒவ்...' என்று அவன் மேலேயே வாந்தியை எடுத்துவிட்டாள்.

''ஏய் ஜனனி..'' என்று சீறினான் வினோத்.

வாந்தி நிற்காமல் மேலும் வயிற்றை புரட்ட ....குளியலறை



நோக்கி ஓடினாள், ஜனனி.

''என்னடா வினோத்?'' என்று கேட்ட அபிராமிக்கு பதில் சொல்லாமல் சட்டையை கழற்றி வீசிவிட்டு குளியலறை சென்று முகம், மார்பு கழுவ...

ஜனனி சரியாகி... அவனைப் பார்த்து கண்கள் கலங்கி.. ''ஸாரிங்க..'' என்று கையெடுத்து கும்பிட.. அவனோ முறைத்துக் கொண்டே பதில் பேசாமல் உள்ளே சென்றான்.

அப்போது உள்ளே நுழைந்த சந்துரு... மனைவி, மச்சான், குழந்தையைக் கண்டு புரியாமல் அபிராமியை பார்க்க...

''வாங்க சந்துரு! ஆபீஸ்விட்டு இப்போ தான் வரீங்களா? என்னங்க இப்படி இளைச்சிபோயிட்டீங்க?''

பேசியது அபிராமிதானா...? அல்லது அவளின் நகலா..? சந்துருவுக்கு சந்தேகம் வர...

''உட்காருங்க! இந்த காபியை குடிங்க!''

அவள் நீட்ட... அவன் குடித்து முடிக்க...

''ஜனனிக்கும் வினோத்துக்கும் மண முடிக்க சீக்கிரமே நல்லநாள் பாருங்க!''

சந்துரு அதிர்ந்து ஜனனியைப் பார்க்க.. அவள் கண்ணீரோடு தலை குனிந்தாள்.

''அவளை என்ன பார்க்கறீங்க, சந்துரு? ஜனனி சம்மதிச்சாச்சியில்லையா?''

''அண்ணி என்ன சொல்றா?''

ஜனனியைப் பார்த்து சீறலோடு கேட்க..

''ஆமாண்ணா! சீக்கிரமே நல்லநாள் பாருங்க! நீங்க எதுவும் மறுத்து பேச வேண்டாம்!''

சுருக்கமாய் சொன்னவள்.. தன்னறைக்கு ஓடிப்போய் கட்டிலில் விழுந்து.. சத்தம் வராமல் குலுங்கினாள்.

சந்துரு ஜனனியின் அறைக்கு சென்றான்.

''என்னம்மா இது? ஜனனி நீ செய்த காரியமென்ன? என் வாழ்க்கை பொருட்டு.. உன் வாழ்க்கையில மண்ணள்ளி போட்டுட்டையா? உன் மனசுக்கு நீயே தீ வச்சுட்டையேம்மா! வினோத்தோட வாழத்தான் வேண்டுமா? ஒரு கெட்டவனை மணந்து எப்படி மகிழ்ச்சியாய் வாழ முடியும்?'' என்று வெறுப்பாய் கேட்க...

''அண்ணா... ஒரு நல்லவனை மணந்து மேலும் நல்லவனாக்குவதைவிட.. ஒரு கெட்டவனை மணந்து நல்லவனாக்குவது பெரும் செயல்! போற்றுதலுக்குரிய செயல்! அந்த அளப்பரிய செயலைத்தான் உன் தங்கை செய்யப்போகிறாள்! நீ தடுக்க வேண்டாம்ண்ணா!''

''நீ உன் மனசுக்கு விரோதமா முடிவெடுத்து இருக்கே! என் வாழ்க்கைப் பொருட்டு... உன் வாழ்க்கையை அழித்துக் கொள்ள எப்படி மனம் துணிந்தது? அண்ணன் செத்தா போயிட்டேன்? என்னை

ஒரு வார்த்தை கேட்டுட்டு சம்மதம் சொல்லியிருக்கக் கூடாதா? நீ அவ்வளவு பெரிய மனுஷியா? இனி உன் விஷயத்துல தலையிடமாட்டேன்! எக்கேடோ கெட்டு ஒழி!''

சந்துரு எரிமலை நெருப்பாய் வார்த்தைகளை கக்கிவிட்டு வெளியேற.. ஜனனி குலுங்கி குலுங்கி அழுதாள்.

## 14

தோப்பூர் கிராமமே விழாக்கோலம் பூண்டது!

வீதியை அடைத்து பந்தல் போடப்பட்டது.

பானுமதி தனது மகனுக்கு திருமணம் என்றதும் எழுந்து அமரும் வண்ணம் தேறியிருந்தாள்.

அபிராமி கேட்டுக் கொண்டதுபோல அம்மாவின் அத்தனை கனமான நகைகளையும் சந்தோசமாய் அபிராமிக்கு கொடுத்துவிட்டான், வினோத்!

கல் வைத்த காசுமாலை, அட்டிகை, ஒட்டியாணம், கைவளையல்கள் என்று அத்தனையும் மாட்டிக் கொண்டு அபிராமி பறவையாய் ரெக்கைகட்டி 'சந்தோச வானில்' பறந்தாள்.

ஒருபுறம் இசைக்கச்சேரி.. ஒரு புறம் இரவு விருந்து என்று தடபுடலாய் இருந்தது, அந்த மாளிகை முழுவதும்.

இரவு பெண் அழைப்பு அமர்க்களமாய் நடந்தது. ஜனனியின் நெஞ்சம் ஹரியின் பரிதாப நிலையை நினைத்து உள்ளுக்குள்ளே அழுதது.

கண்களிரண்டும் பொங்கி கண்ணீர் ஆறாய் ஓடியது! யாரும் அறியாமல் கண்ணீரை அடிக்கடி துடைத்துக் கொண்டாள்.

சந்துரு பயங்கர கோபத்தில் இருந்தான். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்.. 'கழுதை எக்கேடா கெட்டு ஒழியட்டும்' என்று பட்டு படாமலும் இருந்தான்.

விடியற்காலையிலேயே அந்த வீடு முழித்துக் கொண்டது! வீட்டிற்கு முன்புறம் இருந்த பெரிய மைதானமே கல்யாண மண்டபமாய் மாறி... ஏகப்பட்ட அலங்காரத்தோடு காட்சியளித்தது.

ஊரே திரண்டு கூடியிருக்க...

ஐயர் மந்திரம் ஓத...

தேவதையை ஒத்த ஜனனியின் கழுத்தில் வினோத் மங்கல நாணைப் பூட்டினான்!

ஜனனி செத்துவிட்டாள், அந்த நொடியே!

அவளுடைய கனவுகளும், கற்பனைகளும், ஆசைகளும், விருப்



பங்களும், ஓமகுண்டத்தில் விழுந்த காகிதமாய் கருகிப்போனது!

ஆசை கொண்ட இதயத்தில் எப்படி அன்பு இருக்கும்? கருணையும், இரக்கமும், ஜீவகாருண்யமும் இருக்கும்? ஆசை... அதுவும் பேராசை.. ஒருவரை முட்டாளாகவும்.. முரடனாகவும் ஆக்கி விடுகிறது. இங்கே அபிராமியும் மனதில் இரக்கத்தை இழந்து.. அவளுக்கு இந்த கல்யாணத்தால் கிடைக்கப்போகும் பலா பலன்களைச் சிந்தித்து... ஜனனிக்கு துரோகம் இழைத்து விட்டாள்!

வண்ணத்துப்பூச்சி போல ஹரிஹரனோடு மணமாகி... சந்தோச வானில் பறந்து திரிய இருந்தவளின் இறக்கையை வெட்டி வீசி.. வினோத்திடம் கொடுத்துவிட்டாள், அபிராமி.

சிறகொடிந்துபோனாள், ஜனனி! சின்னாபின்னமாகிப் போனாள், ஜனனி! வானில் வட்டமிடும் வல்லூருவின் கையில் கிடைத்த கோழிக்குஞ்சின் பரிதாப நிலைக்காளானாள் ஜனனி.

அவளின் துடிப்பு.. தவிப்பு.. வேதனை.. கஷ்டம் எதனையும் அறியாமல் அபிராமி அளவுக்கதிகமான இன்பத்தில் இருந்தாள்.

வினோத் பெருமை பொங்க... அடிக்கடி அவனின் அழகுராணியை வெற்றி பெற்ற மமதையில்.. களிப்பில்... புன்னகையோடு நோக்கினான்!

சிலருடைய மனப்பான்மை என்னவென்றால் அடுத்தவரை துன்புறுத்தி கிடைக்கும் இன்பத்தில் மகிழ்வது! வினோத்கூட அப்படி ஒரு இழிவான மனநிலையைக் கொண்டவன் தான்.

மகாராஜாவாய்... குட்டித் தீவையாளும் இளவரசனாய் மனதிற்குள் வலம் வந்தவனுக்கு ஜனனியின் மறுப்பு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியது.

இதுநாள் வரை தான் நினைத்தது... ஆசைப்பட்டது அனைத்தும் தங்கு தடையில்லாமல் கிடைத்திருக்கிறது.

முதன் முதலில் கிடைக்காமல் மறுக்கப்பட்டது ஜனனிமேல் வைத்த பிரியம் தான்!

''லெப்ட் ரைட் தெரியும்னு சொல்றே.. டிராபிக் ரூல்ஸ்சும் தெரியும்னு சொல்றே.. பிறகேன் உன் மாட்டு வண்டி அவரின் சைக்கிள் மீ மோதிச்சு?''

-''சார் டிராபிக் ரூல்ஸ் எனக்குத் தான் தெரியும் என் மாட்டுக்குத் தெரியாதே சார்!''

-எம்.அசோக்ராஜா, திருச்சி.



அது மறுக்கப்பட்ட போது பொங்கி விட்டான். அவனுக்கு பக்க பலமாய் அபிராமி இருக்க... ஹரியிடம் இருந்து ஜனனியை எளிதாய் பிரிக்க முடிந்தது!

அவனுக்கு பொன், பொருள் பெரிதல்ல! அவன் ஜனனிமேல் வைத்த ஆசைதான் பெரிது!

முதலில் ஜனனியை அலட்சியம் செய்தவன் தான்! நாளாக நாளாக அழகு கூடி... குட்டித்தீவாய் காட்சியளித்தவளின் மீது ஆசை கொண்டான்.

ஜனனி எங்கே போய்விடப் போகிறாள்! அக்கா அபிராமி இருக்கிறாள்! ஜனனியை உரிய காலத்தில் மணமுடிப்பாள் என்ற நம்பிக்கையில் இருந்தான்.

அம்மாவும், அக்காவும் திருமணம் பற்றி பேச... அவன் ஜனனியை கைகாட்ட... அவள் ஹரியின் மேல் உள்ள காதலால் அவனை மறுக்க...

அப்போதே அவன் முடிவெடுத்துவிட்டான், அந்த காதலை உடைக்க வேண்டும்... அந்தநேசத்தை உருதெரியாமல் ஆக்க வேண்டும் என்று!

ஜனனியை எதிர்க்க... அபிராமியும் அவன் கைகோர்த்து கூட்டணி அமைத்தாள். அவன் நினைக்காததையெல்லாம் நடத்திக் காட்டினாள்!

காரணம் பானுமதியின் நகை மீது வைத்த ஆசை மறுக்கப்பட்டது தான் காளியாய் மாறினாள்.

நகையும், பணமும் பெரிசென்று... தன் வாழ்க்கையை துச்சமாய் நினைத்து... விவாகரத்து நோட்டீஸ் கொடுக்க...

அந்த் அற்புத சக்தி ஜனனியின் மனதை மாற்றி... இதோ இன்று அவனுக்கு நீர் கலங்கும் விழிகளோடு மாலை மாற்றுகிறாள்!

முதலிரவு அறை!

கட்டில் இளம் பெண்ணாய் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்க... ஊதுவத்தி மணமும், மலர்களின் மணமும் ஒருவித ரம்யத்தைக் கொடுக்க...

பட்டுவேட்டி, சட்டையில் அமர்ந்திருந்தான், வினோத்!

அறையின் ரம்யத்தை கெடுக்கவே... கையில் புகைந்த சிகரெட்டோடு ஜனனியின் வருகைக்காக காத்திருந்தான்.

தனக்கு கிடைக்க மாட்டாள் என்று நினைத்த தேவதையோடு கூடி மகிழப்போகும் தருணத்துக்காக விழிகளில் ஏக்கத்தோடு காத்திருந்தான்.

தேவதையோடு சங்கமிக்கப்போகும் செயல்தானே சாதனை! அந்த சாதனையைத் தான் ஜனனிக்கு வேதனையாய் கொடுக்கப்போகிறான்!

ஜனனி உள்ளே வந்தாள். பால் சொம்பை நீட்ட வாங்கி பருகினான்.



அவன் காலில் விழுந்து ஜனனி வணங்க.. அப்படியே தாபத்தோடு அள்ளியணைத்துக் கொண்டான்!

அவனின் தொடுகை வேதனையைக் கொடுத்தது. 'இனி இது தான் விதி! தாங்கிக் கொள்! பொறுத்துக் கொள்!' என்று மனதிற்கு பாடம் புகட்டினாள்.

அவன் அவளின் முகம் பிடித்து கன்னம், நெற்றி, உதடு என்று வெறியோடு முத்தமிட.. மீண்டும் அன்று போல் அவளுக்கு குடலெல்லாம் புரட்ட... அவள் முகம் போன போக்கைக் கண்டு.. ஜனனியை பிடித்து தள்ளி நிறுத்தினான், ஆத்திரத்தோடு.

''என்ன ஜனனி உமட்டுதா...? வாந்தி வராப்போல இருக்கா? ஹரி சிகரெட் குடிக்கமாட்டானா? அவனுக்கு எந்த கெட்டப் பழக்கமும் இல்லையா?''

என்று சர்வசாதாரணமாய் கேட்டு... அவள் நெஞ்சில் வேல் பாய்ச்ச... ஜனனி அந்த குத்தீட்டி சொற்களால் உடைந்துப்போனாள்.

அவள் அதிர்ந்து நிற்க.. ஆசையோடு அணைத்து கட்டிலில் தள்ளி... மொட்டு மெல்ல மலர்வது போல மலர வேண்டிய பெண்மையை வெறி கொண்ட வேங்கையாய் கசக்கி முகர்ந்தான்.

ஜனனி கண்ணீர் விட்டு கதறினாள்.

## 15

மறுநாள் என்றும் போல விடியற்காலையில் விழிப்பு வந்தாலும்.. இரவெல்லாம் அவன் துன்புறுத்திய துன்பத்தை அனுபவித்த உடம்பு பயங்கரமாய் வலித்தது.

ஜனனி தடுமாற்றத்தோடே எழ..

வினோத் அவள் கைப்பற்றி இழுத்து தன் மேல் போட்டுக் கொண்டான்.

''விடுங்க.. பிளீஸ்...'' என்று திமிறினாள்.

''இதுவே ஹரியா இருந்தா இப்படி மறுப்பியா, ஜனனி?''

தீயைப் போன்ற சொற்களை அள்ளி அவள் மேனியில் கொட்டி.... அவள் அழகு முகம் போன போக்கை சந்தோசத்துடன் ரசிக்க...

ஜனனி கோபத்தில் திமிறிக் கொண்டு எழுந்து குளியலறைக்குள் நுழைந்தாள்.

ஹரியை மறக்க நினைத்தாள்!

ஹரியின் ஞாபகங்களுக்கு பலமான இரும்பு சங்கிலி கொண்டு வேலிபோட நினைத்தாள்!

ஆனால் வினோத்தோ ஹரியை மறக்க முடியாமல் .... அவளின் நினைவுகளை கூர்வாள் கொண்டு கிண்டி, கிளறி வேடிக்கை பார்த்தான்.

மெல்லிதயம் கொண்ட ஜனனியால் தாங்கவே முடியவில்லை!

சாப்பாடு முடிந்தவுடன்... ஜனனி அறைக்குள் சென்றதைக் கண்ட வினோத்தும் பின்னாடியே வந்து.. அவளருகில் அமர்ந்தான்.

''என்ன ஜனனி சரியா சாப்பிடலப்போல? ஏன் சாப்பாடு இறங்க மாட்டேங்குதா? உள்ளுக்குள்ளே ஹரி இருந்துட்டு சாப்பிட விடாமல் இம்சிக்கிறானா?''

''அய்யோ... ஏன் இப்படி பேசறீங்க?''

''சரியாத்தானடி பேசறேன்!''

''அவரைப் பற்றி பேசாதீங்க... பிளீஸ் வினோத்'' கையெடுத்து கும்பிட்டாள்.

''ஏன் அவனைப்பற்றி பேச எனக்கு உரிமையில்லையா?''

''ஏன் என்னை வார்த்தையாலே சாகடிக்கறீங்க?''

''ஜனனி.. ஹரியோட வெறும் பேச்சு மட்டும் தானா?''

அவள் புரியாமல் கலங்கிய கண்களுடன் அவனைப்பார்க்க...

''மனசை மட்டும் தான் அவனுக்கு பரிமாறினியா இல்லை உடம்மையுமா....?''

இந்த சொற்களின் வீரியம் தாங்காமல் உடைந்தழுதாள். விம்மி வெடித்தவளை மேலும் வேதனைப்படுத்தினான்.

''ஏய் அழுறதை நிறுத்துடி! பெரிய பத்தினிப் போல அழாதே!''

''வினோத்... வினோத் அத்தான்... நீங்க என்னை இப்படி துன்புறுத்துவதைவிட என் கழுத்தை நெரித்தோ... துளி விஷம் கொடுத்தோ என்னை கொன்னுடுங்க, அத்தான்! என்னை இப்படி வார்த்தையால் சித்ரவதைப்படுத்தாதீங்க! மனசு தாங்கலே, அத்தான்!'' என்று வீறிட்டவளிடம்...

''அன்னைக்கு என்னை மணக்க மறுத்தப்போ.. எனக்கு எப்படி இருந்திருக்கும்? எவ்வளவு அவமானமா இருந்திருக்கும்? எனக்கு தகுதியில்லேன்னு உன் அண்ணா சொன்னப்போ எப்படி குன்றிப்

''டாக்டர்.. உங்களை போலி டாக்டர்ன்னு சொல்றாங்களே...!''

''ஆமாங்க..! முன்னாடி போளி வியாபாரம் செய்து கொண்டிருந்தேன்!''

-எஸ்.மாரியப்பன்.
தேனி.





போனேன், தெரியுமா?

எனக்கு என்ன தகுதியில்லை? கிராமத்து இயற்கை உணவு கொடுத்த உறுதியான உடற்கட்டு... நல்ல உயரம்... பேராண்மை.. என்ன கொஞ்சம் கறுப்பு... சரியான படிப்பு இல்லை! வேலையில்லே! ஆனாலும் முறுக்கிய மீசையும், கறுப்பு நிறமும், கம்பீரமா கத்தானே இருக்கேன்! படிப்பையும், வேலையின்மையையும் நீயும், என் மச்சானும் குறைச்சி எடை போடலாமா? தப்புதானேடி? ம்?'' என்று அவன் அதட்ட...

ஜனனி பதில் சொல்லாமல் கண்ணீர் சிந்தினாள், ''ஏய் நீலிக்கண்ணீர் வடிக்கறதை நிறுத்து! நம்ம தேனிலவுக்கு எங்கே போகலாம்?'' என்று அவன் சிரிப்போடு கேட்க...

''நான் எங்கேயும் வரலே?'' என்று ஜனனி மறுக்க...

''ஹரி கூப்பிட்டிருந்தா உடனே பெட்டியை அடுக்கியிருப்பே இல்ல? அப்புறம் சொல்ல மாட்டேனா பின்னே?'' என்று கேலியான குரலில் கேட்க

ஜனனி கண்களைத்துடைத்து...

''சரி எங்கே போறோம்? ஊட்டியா? கொடைக்கானலா? ஏற்காடா?''

''அங்கெல்லாம் உனக்கு ரசிக்காது, ஜனனி! உனக்கு பிடிச்ச இடமா கூட்டிப்போறேன்! அது எந்த இடம் என்று சஸ்பென்ஸ்!''

இரண்டு நாளில் அவளை கிளப்பி அழைத்துப்போன இடம் வெள்ளிமலை!

ஜனனி முகம் கறுத்து... விதிர்விதிர்த்துப் போனாள்!

ஹரியோடு ஆசையாசையாய் சென்ற அதே நீர் வீழ்ச்சிகள்... பழத்தோட்டம்... மலர்வனம்!

மனதிற்கு ரசிக்கவில்லை! உணர்ச்சியற்று மரக்கட்டையாய் அவன் பின்னே சென்றாள்.

இரவு அவன் புக் செய்திருந்த காட்டேஜுக்கு சென்று கதவு மூடி... கட்டிலில் அமர... அவனும் எதிரில் வந்து அமர்ந்தான்..

''உனக்கு வெள்ளிமலை பிடிச்சிருக்கில்லை?''

''ம்...'' என்று பொய் சொன்னாள், கண்ணீரை அடக்கிக் கொண்டு.

''இது தானே நீ இங்கே முதல் முறையாய் வருவது''?

''ம்... என்று தலையசைக்க...

வினோத் ஓங்கி அறைந்து விட்டான்.

''பொய்யா சொல்றே, நாயே?'' என்று கேட்டு மீண்டும் அறைய... அவள் வலி தாங்காமல் அலறினாள்.

''எனக்கு தெரியும்டி! நீ ஒரு இடம் விடாமல் அங்குல அங்குலமா அவன் கைகோர்த்து ரசித்து மகிழ்ந்தது, எப்படி இந்த முட்டாளுக்கு தெரியும்ன்னு நினைக்கறீயா? என் தோழர்கள் இங்கேயும்

இருக்காங்க! அவர்கள் நம்ம கல்யாணத்துக்கு வந்தப்போ உன்னை ஹரியோடு வெள்ளிமலையில பார்த்ததா சொன்னாங்க.''

அவன் வெறியோடு அவள் உடலை வேட்டையாடினான்!

ஜனனி மரக்கட்டைப் போலானாள்!

ஹரி காதல் கொடுத்த பெரிய ஏமாற்றத்தால் மனம் உடைந்து,... பள்ளிக்கு விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து முடங்கிவிட்டான்.

அன்று வேண்டா வெறுப்பாய் உண்டுவிட்டு... ஏரிக்கரைப் பக்கம் போய்.. ஒரு மரத்தடியில் ஆசையை துறந்த புத்தராய் கால் நீட்டி... வானம் பார்த்து மரத்தில் சாய்ந்து உட்கார்ந்து விட்டான்!

கண்கள் ஜனனியை நினைத்து கலங்கியது. அப்போது ஜனனியை அழைத்துக் கொண்டு போட்டிங் செய்ய வந்த வினோத்தின் கண்களில் ஹரிபட்டுவிட...

'' ஏய் அவனைப் பார்க்காமல் இருக்க முடியலையா? அந்த பரதேசியை போன் செய்து வரவழைத்து விட்டாயா? திருமணத்துக்கு பிறகும் அவனோட கள்ள உறவு நீடிக்குதா? வெட்டி பொலிபோட்டுடுவேன்!''.

என்று கத்தி... ஆர்ப்பாட்டம் செய்து... ஜனனியை வினோத் அடித்து இம்சிக்க... ஒரு சிறு கூட்டமே கூடி நின்று வேடிக்கைப் பார்த்தது.

தன் காதலை நிராகரித்துப்போன பெண் தானே சித்ரவதைப்படட்டும் என்று மனதிற்குள் வன்மம் வராமல்

மாறாய் அதையெல்லாம் கண்ட ஹரிகரன் வாழ்க்கையே வெறுத்தப் போனான்.

## 16

ஜனனிக்கு வாழ்கையே நரகமானது,

தினம் தினம் தீக்குளித்தாள், சீதையாய்!

வினோத் அடித்தான்! உதைத்தான்!

வார்த்தைக்ளில் நாகரீகம் இல்லாமல் பேசிப்பேசி அவளை மாண்டுப்போக வைத்தான்!

சந்துருவுக்கு இதெல்லாம் தெரியாது!

தெரிந்தால் அப்போதே உயிரை விட்டுவிடுவான்.

அபிராமி சந்துருவை நன்கு பார்த்துக் கொண்டாள். அண்ணாவின் அந்த சந்தோசத்திற்காக தான் ஜனனி இந்த கொடுமையில் மாட்டிக் கொண்டது.

வினோத் இத்தனை சித்ரவதை செய்து சிதைப்பான் என்று கனவிலும் அந்த பேதைப் பெண் நினைக்கவில்லை.



ஆசை கொண்டு மணந்தவன் அன்பால் குளிப்பாட்டுவான் என்று நினைத்தவளின் எண்ணத்திற்கு மாறாய், இப்போது நடக்க... தினம் தினம் இறைவனிடம் வேண்டிக் கொண்டாள், தன்னை மரணம் என்ற போர்வையில் அழைத்துக் கொள் என்று!

ஜனனி வந்த பிறகு செவ்வந்தியை அவன் நினைப்பது கூட இல்லை!

வேண்டிய அளவு ஜனனியிடம் இன்பத்தை அனுபவிப்பவன் எப்படி சாக்கடையை நினைப்பான்? பூந்தோட்டமாய் ஜனனி இருக்க... பாலைவனத்தை யாராவது விரும்புவார்களா?

அவனிடம் இருந்த மிகப்பெரிய அந்த ஒரு கெட்டப் பழக்கம் மட்டும் ஒழிந்திருந்தது.

ஜனனி படும் இன்னல்கள், வேதனைகள், துன்பங்கள் அனைத்தும் தெரியவந்தது, பானுமதிக்கு!

பானுமதியோ மருமகள் வந்த சந்தோசத்தில் எழுந்து மெல்ல நடந்தாள், அவள் எழக்காரணமான அன்பான மருமகள் வினோத்திடம் படும் துயரம் கண்டு வெகுண்டெழுந்தாள்.

பானுமதி பொறுக்க முடியாமல் ஒரு நாள் கேட்டே விட்டாள்.

'' நீ ஆசைப்பட்டுதானே கட்டிட்டு வந்தே? அப்புறம் ஏன்டா இப்படி கொடுமைப்படுத்தறே? உனக்கு இவளை பிடிக்கலேன்னா இப்படி ஒரு காரியம் செய்திருக்க கூடாதில்லையா?'' என்று கேட்க வினோத்திற்கு பயங்கர கோபம் வந்துவிட்டது.

'' அம்மா... நீ சும்மாயிரு!''

'' அவள் ஏற்கனவே ஒருத்தனை காதலிச்சவள்னு தெரிஞ்சித்தானே கட்டிட்டு வந்தே? உயிருக்குயிரா பழகின ரெண்டு பேரை பிரிச்சி கட்டிட்டு வந்து இப்படி கொடுமைப்படுத்தறீயே! எப்படி இருந்த பெண் இப்படி உடல் இளைத்து... கறுத்து... மெலிந்து வெறும் எலும்பும் தோலுமாய் ஆயிட்டாளே! கண்கொண்டு பார்க்க முடியலையே!...

மாப்பிள்ளைக்கு இந்த விஷயமெல்லாம் தெரிஞ்சா உன்னை வெட்டி பொலி போட்டுடுவாரேடா!''

'' போய் சொல்லு கிழவி... உன் அருமை மாப்பிள்ளை என்னை காவு கொடுக்கறாரான்னு பார்ப்போம்?'' என்று அலட்சியமாய் சொல்ல....

'' நம்ம வீட்டு பொண்ணு அங்கே வாழறாடா! அவள் நல்லாயிருக்க வேண்டாமா? நீ அவர் தங்கையை கொடுமைப்படுத்தறேன்னு தெரிஞ்சால்... உன் அக்காவை அவர் கொடுமைப்படுத்துவாரேடா!''

'' அதெல்லாம் அபிராமிகிட்ட நடக்காது! நீ வாயை மூடிட்டு சும்மா இருக்க மாட்டே?''

'' படுபாவி... இதெல்லாம் பெரிய பாவம்டா! பெண்பாவம் உன்னை சும்மாவிடாது!''

'' அவ பெரிய பத்தினி! அப்படியே சாபம் கொடுத்தால் பலிச்சி டப்போகுது!''

'' வினோத்... !''

'' புருஷன் பொண்டாட்டி விஷயத்துல தலையிடாதே! போய் சாப்பிட்டு தூங்கு உடம்பை பார்த்துட்டு இன்னும் கொஞ்சநாள் உயிரோடு இருக்க முயற்சி செய்!''

தாயை கேவலமாய் அலட்சியம் செய்தாலும்... பானுமதி அவ்வப்போது கண்டிப்பாள்.

ஜனனிக்கு அந்த வீட்டில் ஒரே சந்தோசம் என்னவென்றால் அத்தையின் மிதமிஞ்சிய அன்புதான்.

ஜனனி வினோத்தின் பிள்ளையைச் சுமந்தாள்!

ஊரே கண்படும் அளவு நிறைய செலவு செய்து வளைகாப்பு செய்தான்.

ஸ்கேன் செய்து பார்க்க.. வயிற்றில் இரட்டை குழந்தைகள்!

'' ஐயாவோட ஆண்மையைப் பார்த்தியாடி? ரெட்டையா உன் வயித்துல உதிச்சிடிச்சி!'' என்று கூறி கண்ணடித்து அசிங்கமாய் சிரித்தான், வினோத்.

பிரசவத்திற்கு ஜனனியை அபிராமி அழைக்க... ஜனனியோ மறுத்துவிட்டாள்.

தன்னிடம் முகம்கொடுத்து பேசதன் தங்கை தயாராக இல்லை. அவள் அத்தனை மகிழ்ச்சிவுடன் வாழ்ந்திருக்க முடியாது தான். ஆனால் மெழுகாக உருகி அழிவாளேதவிர அண்ணனிடம் வந்து அழுது புலம்பமாட்டாள்.

சந்துரு உள்ளுக்குள் மருகினான்.

பிறந்த வீட்டிற்கு போய்... அங்கேயும் வினோத் வந்து, சித்ரவதைச் செய்து... அசிங்கமாய் பேசினால்... சந்துருவுக்கு தாங்காது என சிந்தித்துதான் ஜனனி வரமறுத்தாள் அண்ணன் நினைத்தபடியே மெழுகு வர்த்தியாய் எரிந்து அழிந்து கொண்டிருந்தாள்.

இரட்டை குழந்தைகள் பிறந்தது!

"இந்த கொலை வழக்கில் உன் குடும்பத்தையும் சேர்க்கணு மின்னு சொல்றியே..!"

"ஆமாங்கய்யா.. நான் உள்ளேபோயிட்டா அவங்க சாப்பாட்டுக்கு என்ன செய்வாங்க?"

-எஸ்.மாரியப்பன், தேனி.





இரண்டு ஆண் குழந்தைகள்!

ரோஜா குவியலாய்... ஜனனியையே உரித்து வைத்துக் கொண்டிருந்தன.

பிஞ்சி பிஞ்சாய் கைகளும்... சின்ன திராட்சையாய் கண்களும்... செப்பு உதடுகளும்... மென்மையான மேனியோடு... கொள்ளையழகாய் திகழ்ந்த குழந்தைகளைக் கண்டு குதூகலித்தான்! வினோத்

அவன் குதூகலம் கண்டு இனியாவது தன்னை நல்ல முறையில் வைத்துக் கொள்வான் என்று நம்பினாள், ஜனனி.

## 17

ஹரி ஜனனியை வெள்ளிமலையில் பார்த்தோடு சரி.

அக்கா துர்காவின் பெண்ணை மணந்து கொள்ள சொல்லி வற்புறுத்த... ஹரி மறுக்க

''பெற்றோர் பேச்சைக் கேட்காதவன் இனி இந்த வீட்டுக்கு வேண்டாம்! வெளியே போடா!'' என்று மனசாட்சி இல்லாமல் அப்பா வெளியே கை காட்ட ஹரி அளவுகடந்த கோபம் கொண்டு... அன்று வெளியேறியவன் உடனே மாற்றல் வாங்கி கன்னியாகுமரி அருகில் உள்ள ஊருக்கு போனான்.

தாடி வளர்த்து... தேவதாஸ் போலானான், ஹரி!

ஜனனியின் தூய்மையான நினைவுகளோடு வாழந்து கொண்டிருக்கிறான்.

ஜனனியைப் பற்றி எந்த விஷயமும் தெரியாது! ஆனால் வினோத்தோடு அவளின் வாழ்க்கை நரகம் என்பது மட்டும் நிச்சயம் யூகமாய் தெரியும்!

ஜனனியின் குழந்தைகள் கிஷோர், மிதுன் ஒரு வயது முடிந்து எழுந்து நடந்தார்கள்.

ஜனனியின் சந்தோசம் குழந்தைகளானது.

குழந்தைகளின் சிரிப்பில், பேச்சில் அவளுடைய துக்கமும், துன்பமும் பாதியாய் குறைந்தது.

வினோத்திடம் எந்த மாற்றமும் இல்லை!

அதே வன்மம்! அதே கோபம்! அதே குரோதம்!

ஜனனியால் அவனை மாற்ற முடியவில்லை!

எவ்வளவு அன்பாய், பாசமாய் இருந்தாலும்... அதில் ஒரு காரணம் கற்பித்து.... வார்த்தையால் வலிக்க வலிக்க இதயத்தை சுட்டுப் பொசுக்குவான்,

வினோத் அடித்தாலும் இப்போதெல்லாம் அவளுக்கு வலிப்பதில்லை! ஏனென்றால் அவளின் உடல் அடிகளை வாங்கி மரத்து விட்டது!

ஆனால், அவன் வார்த்தையால் தீண்டும் போது... உள்ளத்திற்கு வலிக்கும்! உள்ளம் இன்னும் அந்த மென்மைத் தன்மையிலிருந்து மாறவேயில்லை!

மீண்டும் கருவுற்றாள், ஜனனி!

பெண் குழந்தை பிறக்க ஹேமா என்று ஆசையாய் பேர் சூட்டினாள்!

பிள்ளை பிறந்து ஆறு மாதம் கழிந்து இருக்கும்....

வினோத்... பெரியப்பா சம்புலிங்கத்திடம் சென்று... தன்னுடைய பங்கு சொத்தை பிரித்து தரச் சொன்னான்.

அவன் இது வரை வாங்கியிருக்கும் தொகை கல்யாணம், வளைகாப்பிற்கு ஆடம்பரமாய் செய்த தொகை என்று ஒரு பெரிய தொகையை காட்டினார், சம்புலிங்கம்.

''என் பிள்ளைங்க வேகாத வெயில்ல நிலத்துல இறங்கி வேலை செய்தும் உழைத்து ஓடாய் தேயும் போது நீ வெட்டியா ஊரைச் சுத்தி திரிஞ்சிட்டு... அப்பப்போ பணத்துக்கு மட்டும் கை நீட்டுவே! என் பிள்ளைங்க உழைச்சி கொண்டு வந்த எல்லாத்தையும் நிலத்திற்கு ஈடா பணமா உன்கிட்ட கொடுத்துட்டேன்!...

கல்யாணத்தை வேற ராஜா வீட்டு கல்யாணம் போல ஆடம்பரமா செய்து எக்கச்சக்க காசை அழிச்சே!''

'' அப்படி நிறைய செலவு செய்ய நீங்கதானே பெரியப்பா காரணம்!'' என்று கோபமாய் வினோத் பெரியப்பாவை குற்றம் சாட்ட....

'' நான் உன்னை ஆடம்பரச் செலவு செய்யச் சொன்னா செய்யலாமா? உனக்கு அறிவில்லே? எங்கே போயிட்டுது? நான் உனக்கு பங்காளிடா! கெடுதி நினைப்பேன்! நீ தானே புத்தியா பொழைச்சிக்கணும்?'' என்று அவரும் எகிற

'' சரி... நான் வாங்கின பணம் போக எனக்கு என்னதான் மிஞ்சினது? அதைப் பிரிச்சி கொடுங்க?''

'' காடு, வீடுன்னு அதுக்கு மதிப்பு போட்டா...நீ வாங்கியிருக்க பணத்துக்கு எதுவும் மிஞ்சலே! நீ என் தம்பி பிள்ளையாச்சேன்னு உன் மேல் இரக்கம் கொண்டு குடியிருக்க மட்டும் இந்த வீட்டை விடறேன்! அதுவும் கொஞ்ச நாளைக்குதான்! அப்புறம் வாடகைக்கு வீடு நல்லதா கிடைச்சதும் காலிப்பண்ணிக்கணும்!''

பெரியப்பன் சொல்ல... வினோத் எதுவும் சொல்லாமல் மனசொடிந்து வீட்டிற்கு வந்து தாயிடம் கூறிவிட்டு கதற...

பானுமதி துடிதுடித்துப் போனாள்.

மண்ணை வாரி தெருவில் 'பாவி.... படுபாவி...' என்று தூற்றினாள்.

ஜனனி தான் பெத்து வைத்திருந்த மூன்று குழந்தைகளையும் கட்டிக் கொண்டு அழுதாள்!

ஜனனி வினோத்தை கர்ஜிக்கும் சிங்கத்தின் தோரணையோடுதான் கண்டிருக்கிறாள்.



இப்படி சுருண்டு போய் பார்த்ததில்லை.!

படுக்கையில் விழுந்து கண்ணீர் விட்ட வினோத்தின் அருகில் போனாள்.....

அவன் கண்ணீரைக் கண்டு தாங்க முடியாமல் முந்தானையால் துடைத்துவிட....

வினோத் மேலும் குலுங்கினான்! குன்றிப்போனான்!

ஜனனி எப்பேர்பட்ட தேவதை! பொக்கிஷம்! போற்றி பாதுகாக்க வேண்டிய புதையல்!

இந்த தேவதையின் இறக்கையை முறித்து சிதைத்து சின்னாபின்னமாக்கியதற்கு சரியான தண்டனை என்று உள்ளுக்குள் உருக்குலைந்து போனான்.

சம்புலிங்கத்தை எதிர்த்து அந்த ஊரில் யாரும் கேள்வியே கேட்க முடியாது!

வினோத்தால் எதுவும் செய்ய முடியவில்லை. பித்து பிடித்தவனின் நிலையானான்.

சாப்பிட மறுத்தவனை வற்புறுத்தி சாப்பிட வைத்தாள். வேதனையில் அழுதவனை அணைத்து ஆறுதல்படுத்தினாள்.

'' அவங்க நம்ம சொத்தைதானே பிடிங்கிகிட்டாங்க! நம்ம கையை, காலை மன தைரியத்தை பிடுங்கிக்கல இல்லையா? இந்த வீடும் வேண்டாம்... சொத்தும் வேண்டாம்! என்கூட புறப்பட்டு கள்ளக்குறிச்சிக்கு வாங்க! நீங்க உங்களால் முடிந்த வேலையைப் பார்த்து... சொற்ப சம்பளமேயானாலும் கொண்டு வந்து கொடுங்க! நான் அதைவச்சி குடும்பம் நடத்தறேன்! குழந்தைங்க கொஞ்சம் பெரிசானதும்... அத்தைகிட்ட விட்டுட்டு நானும் ஏதாவது கம்பெனிக்கு வேலைக்குப் போறேன்! ரெண்டு பேரும் சம்பாதிச்சா வீடு, வசதின்னு ஆயிடலாம்! கலங்காதீங்க! ரொம்ப ஆயத்தமாகுங்க, அத்தான்!'' என்று வினோத்தை ஆறுதல் படுத்தி அன்றிரவு மெல்ல உறங்க வைத்து அவளும் படுத்தாள், நிம்மதியாய்.

' வினோத் இனி திருந்திவிடுவான்! வாழ்க்கை இனி கரடுமுரடான பாதையாக இருக்காது! எதிர்கால வாழ்க்கை இனி மலர் பாதையில் பயணிக்கும்' என்றெல்லாம் நினைத்துக் கொண்டே ஜனனி உறங்கி விட்டாள்.

சன்னல் வழியே இளம் சூரியன் வந்து அவளின் தளிருடலைத் தீண்ட திடுக்கிட்டு எழுந்தாள், ஜனனி.

வினோத் படுத்திருந்த இடம் வெறுமையாய் இருக்க எழுந்து வேகநடை நடந்து ஒவ்வொரு அறையாய் தேட... அந்த கடைசி அறையில் உத்திரத்தில் தொங்கிய மின் விசிறியில் ஜனனியின் புடவையை கொண்டு தூக்குமாட்டி தொங்கிக் கொண்டிருந்தான்.

ஜனனி அதிர்ந்து, வீறிட்டாள்.

ஜனனியை ஆசையாசையாய் மணந்து, துன்புறுத்தி பெரியப்பாவிடம் ஏமாந்த துக்கம் தாங்காமல் தூக்கிட்டுக் கொண்ட வினோத்

எரிந்து கைப்பிடி சாம்பலாகிப் போனான்.

எத்தனை கொடுமைப் படுத்தினாலும்... வினோத் அவள் கணவனல்லவா? அவளின் அழகு குழந்தைகளுக்கு தகப்பனல்லவா?

ஜனனி துடித்துவிட்டாள்!

கத்தினாள்... கதறினாள்... மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள்.

எத்தனை அழுதாலும் புத்தி கெட்ட வினோத் திரும்பி வரப்போகிறானா?

கடைசியில் அழகான தேவதையை விதவையாக்கிவிட்டு போய் விட்டான், வினோத்!

காரியம் முடிந்தது.

முதல் ஆளாய் அபிராமி கணவனை இழுத்துக் கொண்டு கிளம்பினாள்.

சந்துரு எவ்வளவு கெஞ்சியும் அபிராமி மனம் இரங்கவில்லை.

அபிராமிக்கு இரண்டாவதாய் ஒரு வயதில்பெண் குழந்தை இருக்கிறது! அதையும் சேர்த்து வீட்டில் நான்கு ஜீவன்கள்! இதில் ஜனனி, அவள் பெற்ற மூன்று குழந்தைகள், பானுமதி என்று தன் வீட்டிற்கு வந்துவிட்டால்... தன்னுடைய பிள்ளைகளின் எதிர்காலம் என்னாவது? ஏதாவது மிஞ்சுமா என்று சிந்தித்தாள்.

தன் வார்த்தையை மதிக்காமல் வினோத்தை மணந்தவள்... படட்டும் என்று சந்துருவும் மனசாட்சி இல்லாமல் கிளம்பினான்.

தன்னையும், தன் குழந்தைகளையும் காப்பாற்றுவான் என்று ஜனனி எதிர்பார்த்த அண்ணனும் அண்ணியின் பின்னாடி செல்ல ஜனனிக்கு எதிர்காலம் இருட்டாய் மிரட்டியது.

## 18

ஒரு மாதம் முடிந்து சம்புலிங்கம் வீட்டைகாலி செய்யச் சொன்னார்.

ஜனனி இன்னும் கொஞ்ச நாட்கள் கேட்டு குடியிருக்க அனுமதி வாங்கினாள்.

கள்ளக்குறிச்சிக்கு வந்து வீடு பார்க்க... வீட்டு வாடகை அதிகமாய் இருக்க... குறைந்த வாடகையில் இடம் பார்த்தாள் கிடைக்கவில்லை.

ஒரு மாத அலைச்சலில் கடைசியாய் மெயின் ரோட்டிலேயே சிறு ஓட்டு வீடு குறைந்த வாடகையில் கிடைத்தது.

தேவையான பொருள்களை வைத்துக் கொண்டு... தேவையற்றவற்றை விற்று பணமாக்கினாள்.

தம்பிதானே மாப்பிள்ளை என்று ஜனனிக்கு வெறும் பத்து பவுன் மட்டுமே போட்டாள். மாறாக தம்பியிடம் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட பவுனை பிடுங்கிக் கொண்டாள். அபிராமி.



அந்த நகைகள் இருந்தாலாவது ஜனனிக்கும், பானுமதிக்கும் வாழ பயன்பட்டிருக்கும்! போனவற்றை நினைத்து என்ன பயன் என்று நொந்து... தனது இரண்டு பவுன் நகையை விற்று வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்தாள்.

ஒரு நல்ல நாளில் அந்த வீட்டில் குடியேறினர்.

வேலைக்கு போவதா? ஏதாவது தொழில் செய்வதா என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டாள்.

குழந்தைகளை விட்டுவிட்டு வேலைக்கு போக முடியாது என்று உணர்ந்து... அந்த வீட்டு ஹாலிலேயே சிறிய அளவில் மெஸ் ஆரம்பித்தாள்.

காலை, இரவு டிபன் மட்டும்!

தெருவெங்கும் பக்கம் பக்கமாய் மெஸ் இருந்தாலும்... ஜனனி செய்யும் மல்லிகைப் பூ இட்லி, சட்னி, சாம்பார் ருசிக்கு ஓரளவு வியாபாரம் இருந்தது.

அது அவளுக்கு வாழ போதுமான வருமானமாய் இருந்தது.

பானுமதி மருமகளிடம் அன்பைப் பொழிந்தாள்.

சந்துரு செய்தி கேள்விபட்டு வந்தான்.

அபிராமிக்கு தெரியாமல் பத்தாயிரம் ரூபாய் எடுத்து வந்து கொடுக்க...

'' பணமா? அதெல்லாம் வேண்டாம்ண்ணா எனக்கு நீங்க அண்ணியோட சண்டை சச்சரவு இல்லாமல் சந்தோசமாய் இருந்தால் போதும்! எனக்கு தேவை உங்க அன்பு மட்டும் தான்!''

'' என்னால் அடிக்கடி வந்து பார்க்க முடியாது, ஜனனி'' சந்துரு தனது நிலையை விளக்க...

''என்னைப் பார்க்க வந்து நீங்க அண்ணியிடம் வம்பை விலை கொடுத்து வாங்கிக்க வேண்டாம்! எனக்கு எப்போதும் உங்க நினைப்பிருக்கும்!'' கண்களில் நீர் மினுமினுத்தது.

'' என் சந்தோசத்துக்காக உன் சந்தோசத்தை விட்டுக் கொடுத்துட்டு இப்படி சீரழியறையே, ஜனனி!''

'' உங்களுக்காக என் உயிரையே கொடுப்பேன், அண்ணா!''

'' ஜனனிம்மா... '' என்று கத்தினான்.

''ஜவுளிக் கடைக்குப் போய் தொப...தொப...ன்னு நனைந்து வந்திருக்காயே..!''

''அது ஜவுளிக் கடலுங்க!''

-எஸ்.மாரியப்பன்,
தேனி.



'' உன் வீட்டு நகை, பணம்னு அபிராமி நிறைய பிடுங்கிட்டு வந்து... இன்னைக்கு வசதியா வாழறாள்! அதுதான் பொறுக்கலே, ஜனனி!''

'' வசதியா வாழறவங்களும் இறக்கத்தான் போறோம்! இல்லாத ஏழைகளும் இறக்கத்தான் போறோம்! யாருக்கும் இந்த உலகம் நிலையில்லண்ணா! அது தெரியாத சிலபேர்தான். 'இப்படி அன்பு. கருணை, இரக்கம், ஜீவகாருண்யம், நல்ல குணம் அத்தனையும் மறந்து வாழறாங்க!

'' உன் வெற்று நெற்றியைப் பார்த்தால் வேதனையா இருக்கும்மா, ஜனனி! சின்னதா ஒரு ஸ்டிக்கர் பொட்டு வச்சிக்கடா! எனக்காக பிளீஸ்...'' என்று சந்துரு கெஞ்ச...

'' முயற்சிக்கிறேண்ணா... உங்களுக்காக!''

சந்துருவைப் பார்த்தது... ஜனனிக்கு கொஞ்சம் ஆறுதலாய், நிம்மதியாய் இருந்தது!

பத்துநாள் கழித்து ஒரு காலை வேளையில் மெஸ்சுக்கு வந்தவர்களுக்கு பரிமாறிக் கொண்டிருந்தாள், ஜனனி;

கடைசியாய் பாயில் அமர்ந்து இருந்தவன் ''ரெண்டு இட்லி...'' என்று கூறியவனை நிமிர்ந்து பார்த்த ஜனனிக்கு மின்சாரம் தாக்கினாற் போல அதிர்ச்சியானது!

அங்கே ஹரி!

உடல் இளைத்து, கறுத்து, முகமெல்லாம் தாடி மண்டிக்கிடக்க பரிதாபமாய் இருந்தான்.

ஹரிக்கும் அவளின் தோற்றம் கண்டு அதிர்ச்சி! எலும்பும், தோலுமாய் இருந்தவளைக் கண்டு நெஞ்சுருகிப்போனான், உள்ளே வினோத்தை தேடி விட்டு....

'' ஜனனி... ஜனனி நல்லாயிருக்கியாம்மா? என்னைத் தெரியுதா, ஜனனி? உன் கல்யாணத்துக்கு பிறகு கன்னியாக்குமரி பக்கம் போயிட்டேன்! மீண்டும் மாற்றலாகி ரெண்டுநாள் முன்புதான் வந்தேன்! சரி வினோத் எப்படி இருக்கார்? நீ ஏன் இங்கே....? '' என்று புரியாமல் கேட்ட... அவன் விழிகளை நோக்க... அவள் விழிகள் பொத்துக் கொண்டது.

ஜனனி எதுவும் பேசாமல் நிற்க... பானுமதிதான் சொன்னாள்.

'' வினோத்தா.. அவன் எங்களையெல்லாம் அநாதையாய் விட்டுட்டுப் போய் ரெண்டு மாசத்துக்கும் மேலாகுது! ஜனனி மூன்று சிறு குழந்தைகளை வச்சிட்டு தவிக்கறா! வாழ வழி தெரியலே! குழந்தைங்க கொஞ்சம் பெரிசாகும் வரை இந்த மெஸ்சை நடத்தலாம்னு நினைக்கறா! இளம் குருத்து தலையில் மூணு குழந்தைகளையும்... இந்த கிழவியையுயும் ஏத்தி வச்சிட்டு போயிட்டான், வினோத்!''

'' ஜனனி... ஜனனிம்மா... '' என்று ஹரி கலக்கத்தோடு பார்க்க...

'' இந்த மெஸ் வேலைகூட வேணுமாம்னு பார்க்கறோம்! இங்க வர ஆண்களோட பார்வை விதவைதானே... ஆண் சுகத்துக்கு ஏங்



கிட்டு இருப்பாள்னு கண்டபடி ரெட்டை அர்த்தம் வராப்போல பேசறானுங்க! ஆடை உரித்து அசிங்கமா பார்க்கறானுக! மெஸ் வேலையை விட்டுட்டு வேற எதுனா வேலை பார்த்து பொழைக்கணும் தம்பி!''

ஹரியின் நரம்புகள் கோபத்தில் முறுக்கேறின.

'' ஜனனி உன் அண்ணா, அண்ணிகூட உதவலையாம்மா?''

'' நாங்க ஐந்து பேரும் பாரமாகிவிடுவோம்னு காரியம் முடிஞ்சதும் அபிராமி போயிட்டா, நாங்க இங்க குடி வந்தது தெரிஞ்சி...சமீபமாத்தான் மாப்பிள்ளை வந்து பார்த்தார், பத்தாயிரம் பணத்தை நீட்டினார், ஜனனியோட சுயமரியாதை, சுய கௌரவம் வாங்க விடலே! திருட்டுத்தனமாக கிடைக்கற எதுவும் வேண்டாம்னு மறுத்துட்டாப்பா!''

'' அத்தை நம்மைப் பற்றி சொல்லி அவர் மனசை கஷ்டப்படுத்த வேண்டாம்! சரி சொல்லுங்க ஹரி... கல்யாணமாயிடிச்சா? மனைவி என்ன செய்யறாங்க? குழந்தைங்க எத்தனை?'' என்று ஆர்வமாய் கேட்ட ஜனனிக்கு .... ஹரி மவுனத்தை பதிலாய் தர....

'' என்ன ஹரி பேசமாட்டேங்கிறீங்க? உங்க மனைவி நல்லவதானே?''

'' மனைவி இருந்தால் தானே நல்லவளா.. கெட்டவளான்னு சொல்ல?'' ஹரி பட்டென்று சொல்ல

'' அப்போ... அப்போ... மேரேஜ் ஆகிலையா? ஏன் ஹரி'' அதிர்ச்சியும் ஆற்றாமையுமாய் கேட்டாள்.

'' நான் வரேன், ஜனனி! மாலை வரேன்! பேசலாம்!''

ஹரி எழுந்து போனான்.

பள்ளிவிட்டு மாலை வந்தான்.

ஹரியை ஹாலில் உட்கார வைத்தாள். பானுமதி குழந்தைகளோடு தோட்டத்தில் இருந்தாள்.

''ஜனனி... நான் நேராவே விஷயத்துக்கு வரேன்! என்னை நீ மறுமணம் செய்து கொள்ள விருப்பமா? '' ஹரி கேட்க...

''அய்யோ ஹரி என்ன சொல்றீங்க? ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க?'' '' இப்போ எல்லாம் மறுமணம் சகஜமாயிடிச்சி ஜனனி! நான் இன்னும் உன்னையே மனசுல சுமந்துட்டு இருக்கேன், ஜனனி! நான் இப்போ அநாதை, ஜனனிம்மா! அன்புக்கும், பாசத்துக்கும் ஏங்கற ஜீவன் நான்! என் வீட்டுல எல்லோரும் என்னை நிராகரிச்சுட்டாங்க!''

'' ஏன், ஹரி?''

'' காயத்ரியை நான் திருமணம் செய்துக்கலன்னு துரத்திட்டாங்க, ஜனனி! கன்னியாகுமரியில இருக்கும் போது ரெண்டு முறை வீட்டுக்கு போனேன். அங்கே யாருமே பேசலை! என் அம்மா பிடிசோறு கூட போடலே, ஜனனி!''

ஹரி கண்கலங்கினான்.

'' ஜனனி... என்னை மணக்க சம்மதம் சொல்லு, ஜனனி... உன்

கண்ணுல ஒரு சொட்டு கண்ணீர் வராமல்... என் கண்ணின் மணியாய் பார்த்துக்கிறேன்! உன் மூன்று குழந்தைகளையும் என் கண்ணுல வச்சி காப்பாத்தறேன்! ஜனனிம்மா உங்க மாமியாரிடம் பேசட்டும்மா? என்னை மறுத்து மட்டும் விடாதே, ஜனனி! பிளீஸ் ஜனனி... ஹரி கெஞ்சினான்.

''ஹரி... நீங்க தெய்வம்! என் உடம்பு கறைபட்டுப் போச்சு! களங்கப்பட்டுப் போச்சு! நான் எச்சில் பண்டம். தெய்வத்துக்கு எச்சில் பண்டத்தை படையல் போடலாமா, ஹரி?''

''என்ன ஜனனி நீ? என்னைப் போய் தெய்வத்தோட ஒப்பிடறே? நானும் சாதாரண அன்புக்காக ஏங்கற மனிதன்தான்! என்னை புரிஞ்சிக்கோ, ஜனனிம்மா!''

''என் உடம்பு கற்பிழந்து போச்சி! மனம் கூட கல்யாணத்துக்கு பிறகு அடிச்சி உதைச்சாலும் என் புருஷன்னு நெறைய நேரம் நெகிழ்ந்து இருக்கு! இப்போ என்னிடம் இருக்கிற புனிதம் கெட்ட உடலையும், மனதையும் தூய்மையான உங்களுக்கு படைக்க விரும்பலே!''

''மனதளவில் புது ஜனனம் எடுத்தவள் நீ! என்னைப் பொறுத்த வரை நீ புனிதமானவள் தான் ஜனனி''

''நீங்க என்ன காரணம் கற்பித்தாலும் இதுக்கு நான் உடன்பட மாட்டேன், ஹரி!''

''இதுதான் உன் முடிவா ஜனனி?''

''ஹரி! உங்களுக்குன்னு ஒரு எதிர்கால வாழ்க்கை... சந்தோசம்...மனைவி... குழந்தைங்கன்னு வேண்டும்! உங்ககிட்ட அப்படி ஒரு கனவில்லையா?''

''இருந்தது ஜனனி! உன்னை காதலிக்கும் போது இருந்தது! அப்புறம் நீ எனக்கில்லைன்னு தெரிஞ்சதும்... அந்த கனவும் என் மனசுல இருந்து அழிஞ்சிடிச்சி! கருகிப்போன அந்த கனவு உன்னை இந்த கோலத்துல கண்டதும் மீண்டும் துளிர்விடலாமான்னு மனதுக்குள்

''சின்ன வயசுலேயே படிக்காமேப் போனது எவ்வளவு தப்புன்னு இப்போ தான் தெரியுதுன்னு தலைவர் ரொம்பவும் கவலைப்படுறார்!''

''ஏன்?''

''ஜெயில்லே இருந்தும், அதிலே எத்தனை கம்பி இருக்குன்னு என்னத் தெரியலியாம்!''

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.





சிறு நம்பிக்கை...''

பானுமதி இதையெல்லாம் கேட்டுக்கொண்டு கதவோரம் சிலையாய் நின்றாள்! அவள் முகத்தில் சிறுமலர்ச்சி ''எனக்கு 3 குழந்தைங்க, ஹரி! அவங்கதான் இனி என்னோட எதிர்காலம்!'' என்று திருத்தமாய் ஜனனி சொல்ல

ஆமா!

இது தான் உன்னோட முடிவான பதிலா, ஜனனிம்மா?

''ஜனனி என்னை மணந்து... உன் கணவனா ஏத்துக்க முடியாதுன்னு சொல்றே! சரி...! நமக்குள் உடலளவில் அப்படியொரு உறவே வேண்டாம். ஆனால் இந்த உலகம் பொல்லாதது ஜனனி. தனியாய் உன்னால் போராடி வாழ முடியாது ஜனனி? பெயரளவாவது என்னை சட்டப்படி கணவனா ஏத்துக்கோ! நெகிழாத உன் உள்ளத்துக்குள் இடமில்லேன்னாலும் உன் அருகாமையில் வாழற பாக்கியத்தை மட்டும் கொடும்மா!

இந்த நிலையில் உன்னை விட்டுட்டு போனேன்னா என் மீதி வாழ் நாளும் நிம்மதியற்றதாயிடும். உனக்கு ஒத்தாசையா வாழற வாய்ப்பையாவது தருவாயா ஜனனி?''

ஹரி நீர் கசியும் கண்களோடு கேட்க. ஜனனிக்கு கோபம் வந்தது.

''உங்களுக்கு என்ன வயசு? இந்த வயசுல காதலையும், காமத்தையும் அடக்கி வாழ முடியுமா? அதுவும் நீங்க பெண் சுகம் காணாத ஆம்பிள்ளை?''

''நீ என்னை மறுத்து வினோத்தை திருமணம் செய்துட்டப்பவே... என்னுள் இருந்த காமம் செத்துடுச்சி! என் நெஞ்சில் உன்மேலான அன்பு மட்டும்தான் இருந்திருச்சு! புரிஞ்சுக்கோ, ஜனனிம்மா! இப்பவும் கூட உன் மீது உத்தமமான அன்பும் பரிவும் தான் இருக்கு! ஒத்த பொம்பளையா இதுங்களை வளர்த்து உன்னாலே முன்னேற்ற முடியாது! உனக்கு தோள் கொடுக்க உன் தோழனா நான் துணைக்கு வரேன்! மறுத்துடாதே, ஜனனி!''

ஹரி கண்ணீருடன் கையெடுத்து கும்பிட்டு நிற்க... ஜனனி பானுமதியைப்பார்க்க, பானுமதி சம்மதமாய் மகிழ்ச்சியுடன் தலையசைக்க...

ஊர், உலகம் தன்னையும், தன் பிள்ளைகளையும் பழிக்காமலிருக்க இல்லற சன்னியாசியாக வாழ முன் வந்த ஹரியின் தாலியை ஆண்டாள் சூட்டப்பட்ட மாலையாக வாங்கிக் கொண்டாள், ஜனனி.

அவர்களிடேயே இனி காதலோ, காமமோ, தோன்றப்போவதில்லை. காதல் உண்டாக்கிய உத்தமமான அன்புதான் நிரந்தரம் என்று உணர்த்திய மனிதனாக அவனை வணங்கினாள் ஜனனி.

வாழ்க்கையின் போராட்டம் மிகுந்த நாட்கள் அவர்களுக்காக காத்திருந்தன. புதிதாக அவர்கள் குடியேறிய அந்த வீட்டின் முன்புறம் தனித்தீவாக நின்ற அறை-அவன் வசிப்பிடமானது.

ஜனனியின் பிள்ளைகள் தோழமையுடன் அவன் மீது

கைபோட்டு, கால்போட்டு தூங்கிக்கொண்டிருந்த ஒரு இரவில். ஜனனி. சுவாமி விவேகானந்தரின் கடவுளைத்தேடி....! கவிதைகளின் தமிழாக்க நூலைப்புரட்டிக்கொண்டிருந்தாள். அவள் சிந்தனையை தொட்டன சில வரிகள்...

மகிழ்வில்லை; துயரில்லை;
மத்தியிலே உள்ளதது!
பகலில்லை; இரவில்லை;
பகலிரவைச் சேர்ப்பதது!
அழிய இசையதனுள்
அமைந்த அமைதியது!
தெரியும் உயர் கலையுள்
திகழும் நிறுத்தமது!
உரையின் நடுவினிலே
உதிக்கின்ற நல்மவுனம்!
இரண்டுணர்வின் இடையினிலே
இருக்கின்ற உள்ளமைதி!
இன்றுவரை நோக்கமுறா
எழிலாய் விளங்குவது!
என்றும் தனித்துயர்வாய் இலங்குகின்ற மெய்யன்பு!

படித்ததும் சிலிர்த்தாள் ஜனனி

## முற்றும்

"எனக்கு கல்யாணம் பண்ணி னப்போ தங்கம் 50 கிலோ கொடுத் தாங்க"

"நிஜமாவா நம்பவே முடிய லியே!"

"ஆமாம்! என் மனைவியோட பெயர் தங்கமாச்சே! அவளோட எடை அது!"

-என்.குணசீலன்,
பட்டுக்கோட்டை.

